உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2033 மார்கழி 07 ஞாயிற்றுக்கிழமை (22-12-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:26

உப குழுக் கூட்டத்தில் கண்ட இணக்கப்படி

# பாதுகாப்பு வலயங்களில் மீள்குடியமர்வு; படைத் தரப்பு அறிக்கை சமர்ப்பித்தது!

## இன்று அல்லது நாளை புலிகளிடம் கையளிப்பு

கொழும்பு,டிசெம்பர்22

**யாழ்.குடாநாட்டில் படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பான விசேட அறிக்கை ஒன்றை இராணுவ உயர் அதிகாரிகள் கண்காணிப்புக் குழுவிடம் கொழும்பில் கையளித்துள்ளனர்.**

**கடந்த 14ஆம் திகதி முகமாலையில் நடந்த உப குழுக் கூட்டத்தில் அரச - புலிகள் தரப்புகளுக்கு இடையில் காணப்பட்ட இணக்கத்தின் அடிப்படையில் இந்த அறிக்கையை படைத்தரப்பு கண்காணிப்புக் குழுவிடம் கையளித்துள்ளது.**

**இந்த அறிக்கை இன்று அல்லது நாளை புலிகளிடம் கையளிக்கப்படும். அதனை புலிகள் பரிசீலித்த பின்னர் இது குறித்த விரிவான பேச்சு ஒன்று இரு தரப்புகளுக்கும் இடையில் நடக்கும் என்று தெரிகின்றது.**

முகமாலையில் கடந்த 14ஆம் திகதி நடந்த பாதுகாப்பு உபகுழுக் கூட்டத்தில் குடாநாட்டில் உள்ள உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக ஆராயப்பட்டது.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற கோதாவில் பிரதேசங்களை ஆக்கிரமித்து அங்கு மக்களை மீளக்குடியமர அனுமதி மறுப்பது புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் செயல் என்று புலிகள் குழுவின் தலைவர் கேணல் கருணா ஆட்சேபித்திருந்தார்.

இந்த மாத இறுதிக்குமுன் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு படைத் தரப்பு மறுக்கும் பட்சத்தில் அடுத்த

(18ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே தூதரை வெளியேற்ற ஜே.வி.பி. பேரணி நடத்தும்

கொழும்பு,டிசெ.22

விடுதலைப் புலிகளின் 'புலிகளின் குரல்' வானொலிக்கு உபகரணங்கள் வழங்கியமைக்காக நோர்வேத் தூதரை நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்று கோரி ஜே.வி.பி. பேரணி ஒன்றை நடத்தவிருக்கின்றது.

பேரணி நடத்தி நோர்வேத் தூதரகம் முன் ஆர்ப்பாட்டம் செய்ய அந்த அமைப்பு திட்டமிட்டுள்ளதாக அதன் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த விடயத்தில் தலையிட்டு நடவடிக்கை எடுக்கும்படி அந்த அமைப்பு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

(ம-3)

## ஈழத் தமிழ்ப் பாடலுக்கு உலகில் 5ஆவது இடம்

### பி.பி.ஸியின் கணிப்பீட்டில் தெரிவிப்பு

லண்டன்,டிசெ.22

பி.பி.ஸியின் உலக சேவையின் 70ஆண்டு நிறைவை ஒட்டி நடத்தப்பட்ட உலகின் சிறந்த பத்துப்பாட்டுகளுக்கான தெரிவில் ஈழத்தமிழ்ப் பாடல் ஒன்று 5ஆம் இடத்தைப் பிடித்துள்ளது.

உலகளாவிய ரீதியில் பி.பி.ஸி தனது நேயர்களிடையே கடிதம் மூலம் தமக்குப் பிடித்த பாடல்களை எழுதி அனுப்புமாறு கேட்டிருந்தது. இதற்கமைய உலகின் சகல நாட்டவர்களும் தமக்கு பிடித்த பாடல்களை எழுதி அனுப்பியிருந்தனர். இந்தத் தெரிவில் திருமலைச் சந்திரனால் 1995ஆம் ஆண்டு யாழ்ப்பாண இடம்பெயர்வினை குறித்துப் பாடப்பட்ட "பூவும் நடக்குது பிஞ்சும் நடக்குது....." என்ற ஈழத் தமிழ்ப் பாடல் 5ஆம் இடத்தைப் பிடித்துள்ளது.

இந்தத் தெரிவில் முதலாவது இடத்தினை ஐரிஸ் நாட்டுப்பாடல் ஒன்றும், இரண்டாம் இடத்தினை ஹிந்தி மொழிப் பாடல் ஒன்றும், மூன்றாம் இடத்தினை பாகிஸ்தானியப் பாடல் ஒன்றும், நான்காம் இடத்தினை தமிழ் சினிமாப் பாடலான "ராக்கம்மா கையைத் தட்டு......" என்ற பாடலும் பிடித்துள்ளன.

(ம-12)

## தென்னை வள ஆராய்ச்சி நிலையம் குடாநாட்டிலும் விரைவில் அமைப்பு

### பணிகள் ஆரம்பம் என அமைச்சர் கிரியெல்ல தகவல்

யாழ்ப்பாணம்,டிசெ.22

குடாநாட்டில் தென்னை வளங்களை மேம்படுத்த ஆராய்ச்சி நிலையம் ஒன்று விரைவில் அமைக்கப்படவிருக்கின்றது. இதற்கான ஆரம்பப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல இந்த தகவலைத் தெரிவித்தார். ஒரு நாள் விஜயமாக யாழ்ப்பாணத்துக்கு நேற்று வந்துசேர்ந்த அமைச்சர் யாழ்.செயலகத்தில் நடந்த கூட்டத்தில் பேசுகையிலேயே இப்படிக் கூறினார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது-


யாழ்.குடாநாட்டில் பொருத்தமான ஒரு இடத்தில் தென்னை ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அமைப்பதற்கு உத்தேசித்துள்ளோம்.

அதற்கான ஆரம்ப வேலைகளை இப்போது ஆரம்பித்துள்ளோம். படிப்படியாக - நிச்சயமாக - யாழ்ப்பாணத்திலும் தென்னைச் செய்கையாளர்கள் பயனடையக்கூடிய பல திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும்.

இங்கு தென்னை மீள் நடுகைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி மேலும் அதி

(18ஆம் பக்கம் பார்க்க)

அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல பயனாளி ஒருவருக்கு தென்னங்கன்று வழங்குகிறார்.



## வடக்கு - கிழக்கு புனரமைப்பு ஆராய நாளை உயர்மட்ட மாநாடு

### திருமலையில் ஆளுநர் தலைமையில் நடக்கிறது

திருகோணமலை,டிசெ.22

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகள் தொடர்பாக ஆராய்வதற்காக உயர்மட்ட மாநாடு ஒன்று நாளை திருகோணமலையில் இடம்பெறவுள்ளது.

மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனா தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில் பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோனும் பங்குபற்றுவார்.

வடக்கு - கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களின் அரச அதிபர்களும் இந்த மாநாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

அவசர, நீண்ட காலப் புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டங்கள் தொடர்பாக இந்த மாநாட்டில் ஆராயப்படவிருக்கின்றது.

புனர்வாழ்வு, புனரமைப்புப்பணிகளை தேசிய, மாகாண, மாவட்ட அடிப்படையில் மேற்கொள்ளும் திட்டத்தின் கீழ் இந்த மாநாடு ஏற்பாடாகியுள்ளது.

(ம-3)

## கடந்த ஒரு வருட காலத்தினுள் புலிகள் 5 தடவைகள் ஆயுதம் தருவித்தனராம்!

### ஜனாதிபதி சொல்கிறார்

கொழும்பு,டிசெ.22

விடுதலைப் புலிகள் தமக்குத் தேவையான ஆயுத தளபாடங்களை கடந்த ஒரு வருடத்துக்குள் வெளிநாடுகளிலிருந்து 4,5 தடவைகள் எடுத்து வந்துள்ளனர். இது அரசுக்கு நன்கு தெரியும். புரிந்துணர்வு உடன்படிக்கை முறிந்துவிடாமல் இருப்பதற்காக அரசு அது குறித்து தெரியாத மாதிரி மௌனம் சாதித்துவருகிறது.

இப்படிக் கூறியுள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

'லங்காதீப' சிங்களப் பத்திரிகையின் வார இதழுக்கு அளித்த பேட்டியிலேயே ஜனாதிபதி இப்படிக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெறும் பேச்சுக்களில் எனக்கு நம்பிக்கையில்லை. இந்தப் பேச்சுக்கள் தொடர்பாக என்னுடன் எந்தவித கலந்தாலோசனைகளையும் அரசு செய்வதில்லை.

நிரந்தரத் தீர்வு ஒன்றை எட்டுவதற்காக தற்சமயம் இடம்பெறும் பேச்சுக்களுக்கு ஆதரவு வழங்குகின்றேன். ஆனால், இந்தப் பேச்சுக்கள் வெற்றி பெறும் சாத்தியங்கள் குறைவாகவே உள்ளன.

கடந்த காலங்களில் புலிகள் பேச்சுக்களில் பங்குபற்றியுள்ளார்கள். அதேநேரம் தங்களையும் பலப்படுத்திக் கொண்டு மீண்டும் சண்டையை ஆரம்பித்தனர். அதே போன்றுதான் இப்போதும் தங்களைப் பலப்படுத்தி வருகின்றார்கள். அவர்களை நம்ப முடியாது.

புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த பின்னர் 4,5 தட

(18ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### அதிகாரிகள், பயனாளிகள் அசிரத்தை

# ஜி.ரி.இசற் புனர்நிர்மாணப் பணிகள் தடைப்பட்டுப் போகும் அபாயநிலை

யாழ்ப்பாணம்,டிசெ.22

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினால் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் புனர்நிர்மாணப் பணிகள் அதிகாரிகள் மற்றும் பயனாளிகளின் அசிரத்தையால் இடைநடுவில் தடைப்பட்டுப் போகும் அபாயம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக ஜேர்மன் தொழில்நுட்ப அதிகாரி ஒருவர் 'உதயனு'க்குத் தெரிவித்ததாவது:-

யுத்த நடவடிக்கைகளால் சேதமடைந்த குடாநாட்டு பாடசாலைகளில் திருத்த வேலைகள் மற்றும் அடிப்படை வசதிகள் என்பவற்றை மேற்கொள்வதற்காக எமது நிறுவனம் உதவிகளை வழங்கிவருகின்றது.

இந்த உதவிகளின் கீழ் பாடசாலைகளுக்கான கட்டடப் பொருள்கள் மற்றும் தேவையான உபகரணங்கள் என்பனவும் தொழில்நிலை உத்தியோகத்தர்களுக்குரிய சம்பளப் பணமும் சம்பந்தப்பட்ட பாடசாலைகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அவற்றை பயன்படுத்தி உரிய காலப்பகுதிக்குள் வேலைகளை முடிக்காமல் பாடசாலை அதிபர்கள் மற்றும் ஏனைய தரப்பினரும் இழுத்தடித்து வருகின்றனர்.

இதனால் இவ்வாறான வேலைகளுக்கான அடுத்த கட்ட நிதி மற்றும் உபகரணங்களை வழங்குவதில் சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன.


இதே நிலைமை இடம்பெயர்ந்த மக்களுக்கென வழங்கப்பட்டுவரும் வீடமைப்புத் திட்டத்திலும் ஏற்பட்டிருக்கின்றது.

வீடுகளைப் பெற்றுக் கொள்ளும் பயனாளிகள் அவற்றுக்குரிய வேலைகளை உரிய முறையில், உரிய காலப்பகுதியில் மேற்கொள்ளாமல் இழுத்தடித்து வருகின்றனர்.

இவ்வாறான நிலைமைகள் தொடர்ந்தால் எதிர்காலத்தில் ஏனைய திட்டங்களை முன்னெடுப்பதற்கும் அவற்றை செயற்படுத்துவதற்கும் பிற அமைப்புக்களிடம் இருந்தும் ஜேர்மன் அரசிடம் இருந்தும் நிதியைப் பெற்றுக் கொள்ள முடியாதநிலை ஏற்படலாம்.

\- என்றார் அந்த அதிகாரி

(ம-4)



யாழ்.செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு வருகைதந்த அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல குத்துவிளக்கு ஏற்றுகிறார். அருகில் ரவிராஜ் எம்.பியும் காணப்படுகிறார்.

# இந்து கலாசார அமைச்சின் நடமாடும் சேவை நேற்று முடிவு

யாழ்ப்பாணம்,டிசெ.22

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டிலான ஐந்து நாள் நடமாடும் சேவை நேற்றுடன் நிறைவடைந்தது.

யாழ்.செயலகத்தில் உள்ள அமைச்சின் பிராந்திய நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமான இந்த நடமாடும் சேவை தொடர்ந்து ஐந்து நாள்கள் நடைபெற்றது.

அமைச்சின் யாழ்.பிராந்திய உதவிப் பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நடமாடும் சேவையில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன், அமைச்சின் சிரேஷ்ட உதவிப்பணிப்பாளர் பி.குமார்வடிவேல் மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இதன்போது குடாநாட்டில் உள்ள இந்து ஆலயங்கள், இந்து நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்கள், சைவச் சிறுவர் இல்லங்கள், அறநெறிப் பாடசாலைகள், இந்து மயானங்கள் ஆகியன பதிவுசெய்யப்பட்டன. இவற்றுககு நிதியுதவி செய்வதற்கான ஏற்பாடுகளும் அமைச்சரால் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை -

அமைச்சினால் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ள ஆலயங்களுக்கும், சமய நிறுவனங்களுக்கும் இன்று முற்பகல 11.00 மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் வைத்து காசோலைகள் வழங்கப்படவுள்ளன. அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு காசோலைகளை வழங்கவுள்ளார்.

(ம-10)

## நிறைவு விழா

தென்மராட்சி,டிசெ.22

கைதடி தென்கிழக்கு கிராமிய அபிவிருத்திச் சங்கத்தின் நான்காம் ஆண்டு நிறைவு விழா இன்று பி.ப 3.30 மணிக்கு சங்கத்தலைவர் கே.சுப்பிரமணியம் தலைமையில் கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, ந.ரவிராஜ் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலக கிராமிய அபிவிருத்தி அலுவலர் இ.பரராசசேகரம், டாக்டர் பி.சண்முகரத்தினம் ஆகியோரும் கலந்துகொள்வர்.

(3-117)



யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தென்னைச் செய்கையாளர் ஒருவருக்கு இலவசமாக தென்னங்கன்றுகளை வழங்குகின்றார்.

### கல்விச் சுற்றுலாவுக்காக

# மணற்காட்டு கடற்கரைக்குச் சென்ற மாணவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்

### அங்கு ஆய்வில் ஈடுபட முடியாதென படையினர் தடை

யாழ்ப்பாணம்,டிசெ.22

கல்வியியல் சுற்றுலாவுக்காக கடந்த வியாழனன்று மணற்காட்டிற்குச் சென்ற யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுக்கழக மாணவர்களும் அவர்களது விரிவுரையாளர்களும் கடற்கரைக்குச் செல்லக் கூடாதென படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுக் கழகத்தின் ஏற்பாட்டில் தொல்லியல் மையங்களுக்கான சுற்றுலாவொன்றை மேற்கொண்டு அவர்கள் வடமராட்சியில் உள்ள மாயக்கைகுகை, வல்லிபுரம், மணற்காடு, புத்தூர் முதலான இடங்களுக்குச் சென்றிருந்தனர்.

மணற்காட்டுப் பிரதேசத்தில் ஆய்வில் ஈடுபட்ட மாணவர்கள் கடற்கரையோரமாகச் சென்றும் தமது ஆய்வு முயற்சிகளை மேற்கொண்டனர். அவ்வேளை அங்கு வந்த படையினர் நீங்கள் யார்? எதற்கு இங்கு வந்தீர்கள்? என விசாரித்துவிட்டு இப்பகுதியில் நடமாடவோ, ஆய்வு செய்யவோ உங்களை அனுமதிக்க முடியாது என்று கூறி அவர்களைத் திருப்பி அனுப்பிவிட்டனர்.

அப்பகுதியில் மீனவர்களும், இராணுவ, கடற்படையினர் நடமாடிய போதிலும் மாணவர்கள் அங்குசெல்ல அனுமதிக்கப்படாமை குறித்து மாணவர்கள் விசனம் தெரிவித்தனர். பேராசிரியர் சத்தியசீலன், முதுநிலை விரிவுரையாளர் செகிருஸ்ணராஜா, கலாநிதி புஷ்பரட்ணம், விரிவுரையாளர் எஸ்.அருந்தவராஜா, வி.பிரபாலினி, எஸ்.முத்தமிழ்ராஜினி ஆகியோரும் வரலாற்றுக்கழக மாணவர்களுமே இச்சுற்றுலாவை மேற்கொண்டவர்களாவர். (ம-12)

### ஓமந்தை முதல் யாழ்ப்பாணம் வரை

# ஏ-9 வீதி புனரமைப்புக்கான ஒப்பந்தம் நாளை கைச்சாத்து

கொழும்பு,டிசெ.22

ஏ-9 கண்டி வீதி புனரமைப்பிற்கென ஆசிய அபிவிருத்தி வங்கி 60 கோடி ரூபாவை இலங்கை அரசிடம் வழங்கியுள்ளது.

வீதி புனர்நிர்மாண வேலைகளை செய்யவிருக்கும் ஒப்பந்தக்காரருடன் இதற்கான உடன்படிக்கை ஒன்று நாளை கைச்சாத்திடப்படவிருக்கிறது என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

புனர்நிர்மாண வேலைகள் அடுத்த மாதம் தொடக்கம் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. ஓமந்தையிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான பாதையே புனரமைக்கப்படும் என வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் கே.விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

(ம-12)



அமைச்சர் தி.மகேஸ்வரன் தென்னங்கன்று ஒன்றை செய்கையாளருக்கு இலவசமாக வழங்குகின்றார்.

# வைத்தியசாலை ஆலயத்திலுள்ள உண்டியலை உடைத்தவர் சிக்கினார்

யாழ்ப்பாணம்,டிசெ.22

யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள ஞானவைரவர் ஆலய உண்டியலை உடைத்து திருட முற்பட்டதாகக் கூறப்படும் நபர் ஒருவரை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பிடித்து பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் குறிப்பிட்ட நபர் கோயில் உண்டியலை உடைத்துப் பணத்தைத் திருடிக்கொண்டிருந்த சமயம் அவரைக் கையும் மெய்யுமாகப் பிடித்ததாகக் கூறப்பட்டது.

இதற்கு முன்னர் - கடந்த இரு மாதங்களில் இரு தடவைகள் - இந்த உண்டியலை உடைத்து அதிலிருந்த பணம் திருடப்பட்டிருந்தது. இது மூன்றாவது தடவையாகும்.

பிடிபட்ட நபரிடம் இருந்து திறப்புக்கள் 8, ஸ்குறூட்றைவர் 1, மூன்று அலகுகளைக் கொண்ட கூரிய ஆயுதம் ஒன்று என்பன கண்டெடுக்கப்பட்டன. அவையும் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன.

உண்டியலில் இருந்ததாகக் கூறப்படும் ஆயிரத்து 821 ரூபா 25 சதம் பணமும் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

(ம-15-139)

## கரோல் கீதங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.22

சுண்டுக்குழி பரியோவான் ஆலயத்தில் இன்று மாலை 4 மணி முதல் வருடாந்த கரோல் கீத நிகழ்வு இடம்பெறவுள்ளது.

(ம-3)

## பரிசளிப்பு விழா

உடுவில் மான்ஸ் தமிழ்க்கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழாவும் பாடசாலைப் பெயர்ப்பலகை திரை நீக்கமும் நாளை பி.ப 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ஐ.விஜயகாந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில்உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் அதற்பரானந்தன் பிரதம விருந்தினராகவும் சட்டத்தரணி ஷாந்தா அபிமன்னசிங்கம் சிறப்பு விருந்தினராகவும் சீநாகலிங்கம் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர். (ம-149)



கூட்டத்தில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினர்.

படங்கள்: தேவராஜன்

# 'சுதந்திரன்' கதைகளை நூலாக வெளியிட சங்கரி எம்.பி. ஒரு லட்சம் ரூபா

வலி.வடக்கு,டிசெ.22

'சுதந்திரன்' பத்திரிகையில் வெளியாகிய சிறுகதைகளின் இரண்டாம் தொகுதியை வெளியிடுவதற்கு வசதியாக பன்முகப்படுத்திய நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபா வழங்க யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஏற்கனவே 'சுதந்திரன்' பத்திரிகையில் வெளியான 108கதைகள் தொகுக்கப்பட்டு ஒரு தொகுதியாக யாழ்.கலை இலக்கிய வட்டத்தினால் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-86)

## கிறிஸ்மஸ் கொண்டாடும் நேரத்தில்

# பாரிஸ் நகரத்தில் தீவிர பாதுகாப்பு!

### தாக்குதல் திட்டம் அம்பலம்

பாரிஸ்,டிசெம்பர்22

**நத்தார் பண்டிகையைக் கோலாகலமாகக் கொண்டாடுவதற்குத் தயாராகியிருக்கும் பிரான்ஸ் தலைநகரில் என்றும் இல்லாத பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.**

கடந்த திங்களன்று கைதுசெய்யப்பட்ட இஸ்லாமியத் தீவிரவாதிகள் நகரில் தாக்குதல் ஒன்றை நடத்தத் திட்டமிட்டிருந்தனர் என்பதை உள்துறை அமைச்சு உறுதிசெய்திருக்கிறது.

கைதுசெய்யப்பட்ட நால்வரில் இருவர் புனிதப் போருக்கான தங்கள் முழு ஆதரவைத் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றனர் என்றும் -

ஏனைய இருவரும் செச்சினியாவில் பயிற்சி பெறுவதை ஒப்புக்கொண்டிருக்கின்றனர் என்றும் -

பிரான்ஸ் உள்துறை அமைச்சு கூறியிருக்கிறது.

வடக்கு பாரிஸ் நகரில் முற்றுகையிடப்பட்ட ஓர் இடத்திலிருந்து இரசாயனப் பொருள்களையும் வெடிக்க வைக்கும் சாதனங்களையும் பிரெஞ்சு பொலீஸ் மீட்டிருக்கிறது. இந்தப் பொருள்கள் ஒரு தாக்குதலுக்கு அல்லது தொடரான பல தாக்குதல்களுக்கு பயன்படுத்துவதற்காகக் கடத்தி வரப்பட்டு ஒளித்துவைக்கப்பட்டிருந்தவை என்று தெரிவிக்கப்படுகிறது.

'ஒரு தாக்குதலுக்கு திட்டம் தீட்டப்பட்டிருந்தது' என்பது எந்தவித சந்தேகமுமின்றி தெளிவாகியிருக்கிறது என்று உள்துறை அமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டுக் கொண்டாட்டங்களுக்காக பாரிஸ் நகரம் விழாக்கோலம் பூண்டிருக்கிறது. மறுபுறம் அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன. (ஐ)

### கராச்சியில் குண்டு வெடிப்பு

இஸ்லாமாபாத், டிசெ.22

பாகிஸ்தானில் கராச்சி நகரில் வியாழக்கிழமை குண்டுவெடிப்பு, சம பவம் ஒன்று நடைபெற்றிருக்கிறது.

இச் சம்பவம் தொடர்பாக பொலீஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

அமெரிக்க செய்தியாளர் டேனியல் பேர்ள் கொலையில் தொடர்புள்ள இஸ்லாமிய தீவிரவாதி, குண்டு தயாரிக்கும்போது தற்செயலாக வெடித்து விபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொலீஸார் சந்தேகிக்கின்றனர். இந்தக் குண்டு வெடிப்பில் ஒரு பெண் உட்பட நான்கு பேர் இறந்தனர். (ஐ)



பெல்ஜியம் நாட்டின் இளவரசர் லாரன், தனது வருங்கால மனைவி கிளேர் கூம்ப்ஸ°டன் பிரஸெல்ஸ் நகரிலுள்ள அரச மாளிகையில் ஆனந்தமாக உரையாடுகிறார். 2003 ஏப்ரல் 12இல் இவர்களது திருமணம்.

## ஜார்கண்ட் மாநிலத்தில்

# 'மாவோயிஸ்ட்' தாக்குதல்; 18 பொலீஸார் உயிரிழப்பு!

இந்தியாவின ஜார்கண்ட் மாநிலம் மேற்கு சிங்பும் மாவட்டத்தில் காட்டுப்பகுதியில் வியாழக்கிழமை இரவு மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் நடத்திய திடீர் தாக்குதலில் 18 பொலீஸார் உயிரிழந்தனர்; 20 பேர் பலத்த காயமடைந்தனர்.

காயமடைந்த பொலீஸார் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இதில் 10 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

சண்டையின்போது 11 பொலீஸ் வாகனங்கள் தீ வைத்துக்கொளுத்தப்பட்டன. பின்னர் தாக்குதலில் இறந்த மற்றும் காயமடைந்த பொலீஸாரிடமிருந்த ஆயுதங்களை தீவிரவாதிகள் பறித்துச் சென்றனர்.

ஒரிசா எல்லை அருகே உள்ள மேற்கு சிங்பும் மாவட்டத்தில் உள்ள மனோஹர்பூர் கிராமத்தில் பொலீஸுக்கு உளவு வேலை பார்த்ததாகக் கூறி கிராமத் தலைவர் ஜீவன் மொஹந்தியை மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து உடனடியாக அங்கு வந்த பொலீஸ் படை மீது தீவிரவாதிகள் சரமாரியாகச் சுட்டனர். இதில் 18 பொலீஸார் சம்பவ இடத்திலேயே மரணமாகினர்.

தீவிரவாதிகளுக்கும் பொலீஸாருக்கும் இடையே விடிய விடிய சண்டை நடந்ததாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## ரோந்து சென்ற வேளை துப்பாக்கிச் சமர்

# அமெரிக்க படைச் சிப்பாய் ஆப்கானிஸ்தானில் பலி!

### படை வட்டாரங்களில் அதிர்ச்சி

காபூல்,டிசெ.22

அமெரிக்கப் படைச் சிப்பாய் ஒருவர் ஆப்கானிஸ்தானில் நடந்த சண்டை ஒன்றில் கொல்லப்பட்டார்.

அமெரிக்க அதிகாரிகள் நேற்று இதனை அறிவித்திருக்கின்றனர்.

பாகிஸ்தான் எல்லையோரத்தில் - பக்தியா மாகாணத்தில் - ஷெகின் என்னும் இடத்தில் அமெரிக்கப்படைகள் ரோந்து சென்றவேளை தீவிரவாதிகள் வழிமறித்து சரமாரியாகச் சுட்டனர் என்றும் -

அந்தச் சம்பவத்திலேயே சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் - கடந்த ஏழு மாத காலப்பகுதியில் - நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் சமயத்தில் படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டிருப்பது இதுவே முதல் சம்பவம் ஆகும்.

இதேவேளை -

24 மணி நேரத்தில் இடம்பெற்ற வேறு இரண்டு தாக்குதல் சம்பவங்களில் அமெரிக்கப் படைவீரர்கள் இருவர் காயமடைந்தனர் என்று மேஜர் கட்டர் தெரிவித்திருக்கிறார்.

**அமெரிக்கா அதிர்ச்சி**

கடந்த மே மாதத்துக்குப் பிறகு அமெரிக்கப் படை வீரர் ஒருவர் ஆப்கானிஸ்தானில் தாக்குதல் ஒன்றில் உயிரிழந்திருப்பது அமெரிக்க இராணுவத்துக்கு அதிர்ச்சியை கொடுத்திருப்பதாக காபூலில் உள்ள பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவித்திருக்கிறார்.

நேற்றுமுன்தினம் நடந்த இரு வேறு தாக்குதல்களில் எதிரிகள் கிரனேட் லோஞ்சர்களைப் பயன்படுத்தி தாக்கியிருக்கின்றனர்.

அதற்கு சில தினங்கள் முன்பு தலைநகர் காபூலில் அமெரிக்க விசேட படையினரின் ஜீப் மீது கிரனேட் வீசப்பட்டது. இது தலைநகரில் நடத்தப்பட்ட முதலாவது தாக்குதலாகும். (ஐ)



ஆப்கானில் அமெரிக்கச் சிப்பாய்.

# அல்கெய்டாவுடன் தொடர்பு; பாக். டாக்டர் குடும்பம் கைது!

இஸ்லாமாபாத்,டிசெ.22.

தலிபான், அல்கெய்டா ஆகியவற்றுடன் தொடர்பு உள்ளவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பாகிஸ்தானில் டாக்டர் மற்றும் அவரது குடும்பத்தைச் சேர்ந்த 8 பேரை பாகிஸ்தான் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

டாக்டர் அகமது ஜாவித், அவரது 2 மகன்கள் (இருவரும் டாக்டர்கள்) மற்றும் சகோதரர்கள், உறவினர்களை லாகூரிலுள்ள அவரது இல்லத்திலிருந்து வியாழக்கிழமை இரவு பொலிஸார் கைது செய்தனர் என்று ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. (ஐ)

# ஆந்திராவில் ரயில் கவிழ்ந்தது! 20 பேர் பலி; 100 பேர் காயம்!

குர்னூல்,டிசெ.22

ஆந்திர மாநிலம் குர்னூல் மாவட்டத்தில் பெங்களூர் பவுண்ட் எக்ஸ்பிரஸ் ரயில் கவிழ்ந்ததில் சம்பவ இடத்திலேயே 20 பேர் உயிரிழந்தனர்; 100 பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை நடந்தது.

ஹைதராபாத்திலிருந்து நேற்று முன்தினம் இரவு 7 மணிக்கு புறப்பட்ட பெங்களூர் பவுண்ட் ரயில், நேற்று அதிகாலை ராமாங்கயப்பள்ளி கிராமம் அருகே வந்து கொண்டிருந்த போது திடீரென தண்டவாளத்தை விட்டு விலகிச் சென்றது. இதனால், ரயில் கவிழ்ந்ததை அடுத்து, 20 பேர் பலியாயினர்.

காயமடைந்தவர்கள் அனைவரும உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். சம்பவ இடத்திற்கு உயர் பொலீஸ் அதிகாரிகளும், ரயில்வே அதிகாரிகளும் உடனடியாக வந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். (ஐ)

# ஏவுகணைத் திட்டத்துக்கு பிரிட்டனில் தளம் அமைப்பு?

### நூற்றுக்கணக்கானோர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

அமெரிக்காவின் சர்ச்சைக்குரிய ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டத்திற்கு பிரிட்டனின் றோயல் விமானப் படைத்தளத்தை பயன்படுத்த அனுமதியளித்தற்கு எதிர்ப்புத் தெரிவித்து நூற்றுக்கணக்கானோர் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

நோர்த் யோர்க்ஷையரில் (North Yoarkshire) உள்ள றோயல் விமானப் படைத்தளத்துக்கு வெளியே திரண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், அமெரிக்காவின் ஏவுகணைப் பாதுகாப்பு திட்டத்துக்கு எதிராகவும், அதனால் பிரிட்டனுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களைச் சுட்டிக்காட்டியும் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

'நட்சத்திரப் போரின் மைந்தன்' (Son of star war) திட்டத்தின் ஒரு பகுதியான ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டத்துக்கு பிரிட்டனின் விமானப் படைத்தளம் ஒன்றை, அமெரிக்கா பயன்படுத்தவுள்ளது.

அமெரிக்க ஏவுகணைப் பாதுகாப்பு, ஏஜென்ஸியின் தலைமையிடமிருந்து இது தொடர்பாக விடுக்கப்பட்ட கோரிக்கையை பிரிட்டன் தற்போது பரிசீலித்து வருகிறது.

இந்தத் திட்டத்துக்கு பிரிட்டனில் தளம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே ஆர்ப்பாட்டம் நடந்திருக்கிறது.

அமெரிக்காவைப் பாதுகாக்கும் இந்தத் திட்டத்துக்கு ஒத்துழைப்பது பிரிட்டனை எதிரிகளின் இலக்காக மாற்றிவிடும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள், கூறுகின்றனர். (ஐ)



விமானப்படைத் தளம்.

# இளைஞனின் சேஷ்டையால் விமானத்தினுள் கலக்கம்!

புளோரிடா,டிசெ.22

விமானத்தினுள் குண்டு இருப்பதாக புரளி கிளப்பிவிட்ட பிரெஞ்சு விமானப் பணியாளரான இளைஞன் ஒருவனுக்கு அமெரிக்க நீதிமன்றம் ஒன்று ஐந்து ஆண்டு தடுத்தவைக்கும் தண்டனையை வழங்கியிருக்கிறது.

மைக்கல் பிலிப் என்ற 25 வயதான விமானப் பணியாளருக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது. விமானங்கள் பற்றிய பீதி மறையாத அமெரிக்காவில் இந்த இளைஞர் செய்தது என்ன?

லண்டனில் இருந்து அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தின் ஓர்லாண்டோ நோக்கி வெள்ளோட்டம் சென்று கொண்டிருந்த விமானத்தில் இந்த இளைஞன் பணியாளனாக இருந்தான். கடந்த ஜனவரி. 19 ஆம் திகதி இந்த விமானம் புளோரிடாவுக்கு கிளம்பிய வேளை, விமானத்தின் குளியலறை கண்ணாடியில் சவர்க்காரத்தினால் பின்வருமாறு எழுதினான் அந்த இளைஞன்.

'அமெரிக்கர்கள் கொல்லப்பட வேண்டும்', 'பின்லேடன் சிறந்த மனிதன்! இந்த விமானத்தில் அல்கெய்டா வைத்திருக்கும் வெடிகுண்டு அமெரிக்கர்களைக் கொல்ல வேண்டும்' என்று எழுதி விட்டான். இதைக் கண்ட பயணிகள் அலறியடித்தனர். விமானத்தினுள் ஒரே குழப்பம் கலக்கம்.

புளோரிடா நோக்கிப் பறந்து கொண்டிருந்த விமானம் அவசர அவசரமாக பின்லாந்துக்கு திருப்பப்பட்டது. இந்த இளைஞரின் சேஷ்டை பின்னர் தெரியவந்தது. உண்மை அம்பலமானது. அமெரிக்கர்களுக்கு பீதியூட்டும் இது போன்ற புரளிகளை இந்த இளைஞன் முன்னரும் பலமுறை கிளப்பி விட்டவன் என்பதும் தெரியவந்தது. (ஐ)

## இலவச மருத்துவ ஆலோசனை சேவை

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற அனுசரணையுடன்**

21.12.2002 தொடக்கம் ஒருமாத காலத்திற்கு சாவகச்சேரி அம்பிகா பார்மஸி முன்பாகவுள்ள ஓம் சரவணா கட்டடத்தில் யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்களின் இலவச மருத்துவ ஆலோசனை சேவைக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பொது மருத்துவம், சத்திரசிகிச்சை, குழந்தை மருத்துவம், பெண் நோயியலும் மகப்பேற்றியலும் மருத்துவம், மனநோயியல் சார்ந்த மருத்துவம் ஆகியவற்றுக்கு மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படுவதால் அனைத்து மக்களும் இந்த சேவையில் பயன்பெறலாம்.

- சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.

*விளம்பர அனுசரணை:*

**அம்பிகா பார்மஸி**
கண்டி வீதி, சாவகச்சேரி. (C/25546)


## கண்ணீர் அஞ்சலி

2002'A' பிரிவு மாணவி
செல்வி யோ.துஷ்யந்தி
அவர்களின் அன்புத் தந்தையார்

### பொன்னுத்துரை யோகநாதன்

அவர்களது மறைவிற்காக எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், போதனாசிரியர்கள்,
2001'A' பிரிவு, 2002'A' பிரிவு மாணவர்கள்,
உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

தாதியர் பயிற்சிப் பாடசாலை,
யாழ்ப்பாணம். (12080)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி தபேந்திராணி சரவணமுத்து

*(பருத்தித்துறை வீதி, நாவற்காடு, வரணி)*

கோவிந்தபிள்ளை சரவணமுத்து (முன்னாள் சாவ. பிரதேச செயலக ஆளணி உத்தியோகத்தர்) அவர்களின் பாரியாரும் புரந்தரி (ஜேர்மனி), குமுதினி (யாழ். பல்கலைக்கழகம்), ரஜினி, கௌரி (யா/சாவ. இந்துக் கல்லூரி), பகீரதன், கவதரன் (யா/சாவ. இந்துக் கல்லூரி), பாலகுமரன் (யா/வரணி ம. வித்தி.) ஆகியோரின் தாயாரும், க. தபேந்திரன் (கரவெட்டி பிரதேச செயலகம்), கெ. தபேந்திராதேவி (கொழும்பு) ஆகியோரின் சகோதரியுமாகிய திருமதி தபேந்திராணி சரவணமுத்து 20. 12. 2002இல் சிவபதமடைந்தமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதலையும் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

முருகேசு சுப்பிரமணியம்
குடும்பத்தினர். (12089)

*நாவற்காடு, வரணி.*

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி சுதாஜினி சண்முகசுந்தரம்

அன்னையின் மடியில் 15.01.1977
ஆண்டவன் அடியில் 25.12.1999

எம்மிடையே நீயில்லை என
எண்ணிடவும் முடியவில்லை
ஏங்கியழும் எம்நிலையை
இயம்பிடவும் வார்த்தையில்லை
கண்களிலே நீர்பெருக்கி
உன் நினைவால் வாடுகின்றோம்
காலமெல்லாம் எம்மிதயக்
கோவிலிலே நீ வாழ்வாய்!

*திருநெல்வேலி கிழக்கு.*
தாய், தந்தை, சகோதரர்கள்.

## நன்றி நவிலல்

திருமதி

### சுப்பிரமணியம் தெய்வானைப்பிள்ளை

*(தங்கம்மா)* புலோலி

15.12.2002இல் எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்த எமது பாசமிகு அன்னை *திருமதி சுப்பிரமணியம் தெய்வானைப்பிள்ளை* அவர்களின் மறைவுச் செய்திகேட்டு உடனே வந்து உதவிகள் பல செய்தவர்களுக்கும், தொலைபேசிமூலமும், தந்திகள்மூலமும் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், மலாவளையங்கள் சாத்தி துயரில் பங்குகொண்டவர்களுக்கும், பல இடங்களிலிருந்துவந்து இறுதிச்சடங்குகளில் கலந்துகொண்டவர்களுக்கும், தாயார் நோயுற்றவேளையில் வைத்திய உதவிகள் புரிந்த பருத்தித்துறை, யாழ். வைத்தியசாலை மருத்துவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் இன்னும் பல வழிகளிலும் உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*புலோலி தெற்கு,*
*புலோலி.* (12082)
- குடும்பத்தினர்.

## மகரஜோதி பூசை வழிபாடு

யாழ்ப்பாணம்,டிசெ.22

சபரிமலை ஸ்ரீ ஐயப்ப சுவாமியின் மகரவிளக்கு மகரஜோதிப் பூசை வழிபாடுகள், ஆராதனைகள் என்பன இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு உடுவில் 'லவ் லேனில்' உள்ள ஐயப்பன் பஜனை நிலையத்தில் நடைபெறவுள்ளன.

கோண்டாவில் கிழக்கு சபரீச சேவா சங்கத்தினரின் பஜனை நிகழ்வு, பிரசங்கவாரிதி சிவத்திரு.வ.குமாரசாமி ஐயாவின் 'ஐயப்ப வரலாறு' என்னும் தலைப்பிலான சமயப்பிரசங்கம் ஆகியனவும் நடைபெறவுள்ளன. (எ-4)

## தமிழ்ச் சங்க நிகழ்வு

கொழும்பு,டிசெ.22

கொழும்பு தமிழ்ச் சங்கமும், யாழ். பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகமும் இணைந்து வழங்கும் இசை நாடக மேடைப் பாடல்கள் நிகழ்வு கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5.30மணிக்கு நடைபெறவுள்ளது.

கொழும்பு தமிழ்ச் சங்க துணைத் தலைவர் த.இராஜரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் மூத்த கலைஞர் க.உருத்திராபதி, வைவிஜயபாஸ்கரன், வ.செல்வரட்ணம் (செல்வம்), நா.விமலநாதன், செ.மெற்றாஸ்மயில், செல்வி திவ்யாஞ்சலி தனபாலசிங்கம், செல்வி கோமளா முருகையா ஆகியோர் இசைநாடகப் பாடல்களை வழங்குவர். (எ-4)

## தபால் அதிபர்கள் வெற்றிடம் நிரப்பப்படவில்லை

சண்டிலிப்பாய்,டிசெ.22

யாழ்.மாவட்டத்திலுள்ள தபால் அலுவலகங்களில் தபால் அதிபர்கள் பதவிகள், உதவி தபால்அதிபர் பதவிகள் பல நிரப்பப்படாது இருந்து வருவதாகக் கூறப்படுகின்றது.

இவர்களது வெற்றிடங்களை நிரப்புமாறு தபால் தொடர்பு உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கம், கொழும்பிலுள்ள தபால் திணைக்கள தலைமைப்பீடத்திடம் வேண்டுகோள் விடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-135)

## வலி.மேற்கில் 'கரோல்' நிகழ்வு

சண்டிலிப்பாய்,டிசெ.22

பண்டத்தரிப்பு தென்னிந்திய திருச்சபையும் பண்டத்தரிப்பு வை.எம்.சி.ஏயும் இணைந்து நடத்தும் கிறிஸ்மஸ் கரோல் நிகழ்வு எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமையன்றும் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமையன்றும் மாலை 4 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

பண்டத்தரிப்பு, வடலியடைப்பு, சித்தன்கேணி ஆகிய இடங்களுக்கு இக்கரோல் குழு செல்லும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-135)

## பனை வெல்லம் உற்பத்திசெய்ய நடவடிக்கை

சண்டிலிப்பாய்,டிசெ.22

சங்கானை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் அடுத்த ஆண்டுமுதல் பதநீரிலிருந்து பனை வெல்லம் (கருப்பட்டி) உற்பத்தி செய்வதற்குத் திட்டமிட்டுள்ளது.

இதற்கான தீர்மானம் சங்க இயக்குநர் சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதாக சங்க பொது முகாமையாளர் த.செல்வராஜா தெரிவித்தார்.

சங்கம் நடத்திவரும் போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலையில் அடுத்த ஆண்டில் இவ்வருடத்திலும் பார்க்க, கூடுதலான கள் போத்தலில் அடைக்கவும் -

சங்க மகளிர் குழுவின் ஆதரவில் தையல் பயிற்சிநெறியை ஆரம்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-135)

## தெல்லிப்பழையில் நீரிழிவு நோயாளர் மருந்து இன்றி அவதி

சண்டிலிப்பாய்,டிசெ.22

தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்திய சாலையில் நீரிழிவு நோய்க்கான குளிகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இதனால், தனியார் பார்மஸிகளில் குளிகை வாங்கவேண்டிய நிலை நீரிழிவு நோயாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

(எ-135)


## யப்பான் சைக்கிள்




யப்பானில் முற்றுமுழுதாக உற்பத்தி செய்யப்பட்ட ஆண்கள், பெண்களுக்கான சைக்கிள்கள்

- ஓடுவதற்கு இலகுவானவை
- துருப்பிடிக்காதவை
- டைனமோ செற், பெல், பூட்டு, வாஸ்கற்றுடன்
- உதிரிப்பாகங்கள் அடிக்கடி மாற்றவேண்டியதில்லை.
- விலை 3500/- இலிருந்து...

**புதிய கையிருப்பு**

**அன்ரன் என்ரபிறைசஸ்**
357, கே.கே.எஸ். றோட்,
யாழ்ப்பாணம். *(மனோகரா சந்தி அருகில்)*
(12081)


## மரண அறிவித்தல்கள்

### சுந்தரம்பிள்ளை பாலசிங்கம் (கோபால்)

*(யாழ்.பங்சால் வீதி - A.D. கடை உரிமையாளர்)*

நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும், இல.33, கைலாசபிள்ளையார் கோயில் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம்பிள்ளை பாலசிங்கம் அவர்கள் 20.12.2002 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கதிரித்தம்பி - திருமதி தங்கம்மா ஆகியோரின் அருமை மருமகனும் பத்மாவதியின் அன்புக் கணவரும் திருமதி சசிகலா - குகமூர்த்தி (ஆசிரியை, கொழும்பு, விவேகானந்தாக் கல்லூரி), திருமதி மேகலா - பரயோகநாதன் (U.K.), திருமதி உமா வினோதராஜா (ஜேர்மனி), திருமதி சுமதி செல்வரத்தினம் (வவுனியா), முரளிதரன் (B.M. சுப்பஸ்ரோஸ், U.K.), திருமதி ராதை நிமலகுமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஆ.குகமூர்த்தி (தொழில்நுட்பக் கல்லூரி, திருகோணமலை), பரயோகநாதன் (டைமன் பலஸ், U.K.), வினோதராஜா (ஜேர்மனி), செல்வரத்தினம் (N.S.ரட்ணம் பிரதர்ஸ், வவுனியா), திருமதி ஜெயரூபி - முரளிதரன், நிமலகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் தாயினி, விசாரதன், வேதப்பிரியன் (கொழும்பு), வர்ஷினி, மிதுளா (U.K.), தனுஷா, தக்ஷாயினி, தமிழினி (ஜேர்மனி), சாரங்கா, பிரியங்கா (வவுனியா), ராம்பிரகாஷ், பிரதிக்ஷா (U.K.), சாரிக்கா, கஜானன் (கனடா) ஆகியோரின் அருமைப் பேரனும் காலஞ்சென்ற பரநிருபசிங்கம் (உப அதிபர், பரமேஸ்வராக் கல்லூரி), திருமதி கனகம்மா, காலஞ்சென்ற திருமதி லக்சுமி, காலஞ்சென்ற திருமதி நாகேஸ்வரி, திருமதி அன்னலக்சுமி, சு.சச்சிதானந்தம், திருமதி விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் பாலச்சந்திரன் (U.K.), நித்தியானந்தன் (நித்தியா ஜுவலர்ஸ், கொழும்பு), திருமதி சரஸ்வதி - சண்முகநாதன் (கனடா), சிவநாதன் (U.K.), ஆனந்தன் (ஜேர்மனி), திருமதி லீலாவதி - சிவசுப்பிரமணியம், திருமதி திலகவதி - தியாகராஜா, திருமதி கலாவதி - அருட்பிரகாசம், திருமதி கருணாவதி - அருட்குமார், காலஞ்சென்ற மனோகரன், இராசமுத்தையர், காலஞ்சென்ற முத்துத்தம்பி, கைலாசபதி, சுப்பிரமணியம், நடராஜா, திருமதி சாரதா, திருமதி வசந்தாதேவி ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*33, கைலாசபிள்ளையார் கோயில் வீதி,*
*நல்லூர்.* (12079)

தகவல்:
**ஆ.குகமூர்த்தி**
*(மருமகன்).*

### திருமதி இலட்சுமி தண்டபாணி

காரைநகர், தங்கோடையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய், உச்சியோடையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமி தண்டபாணி அவர்கள் நேற்று (21.12.2002) சனிக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தண்டபாணி அவர்களின் அன்பு மனைவியும் செங்கமலர், சதாசிவம், காலஞ்சென்ற துரைராசா மற்றும் கோகுலமணி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் துசிகா, புலேந்திரன் (யா.தொ.பொ.ஆ.ரி.) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சிவகௌரி, யசோதரா, துஷ்யந்தன், பிரசாந், துசிதா, துஷாஜினி, கபிலாஜினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2002) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00மணிக்கு உச்சியோடையிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகப் பிட்டிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உச்சியோடை,*
*மானிப்பாய்.* (12072)

தகவல்:
**புலேந்திரன்**
(மருமகன்).

### செல்வி சசிகலா சபாரத்தினம்

**(ஆசிரியை, முன்னாள் சாவகச்சேரி மகளிர் கல்லூரி தற்போது வவுனியா மகாவித்தியாலயம்)**

பெருங்குளம் சந்தி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், ஆதிவிநாயகர் கோவிலடி வவுனியாவை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சசிகலா சபாரத்தினம் 20.12.2002 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரத்தினம் நவநீதம் அவர்களின் கனிஷ்ட புத்திரியும் சதீஸ்வரன் (பிரான்ஸ்), சாரதா, சங்கீதா ஆகியோரின் சகோதரியும் புவனேந்திரனின் (ஜேர்மனி) மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*வவுனியா.*
*T.P: 024 - 20154, 23140* (12085)

தகவல்:
**த.நவரட்ணராஜா,**
**த.பவளகேசரி**
(மாமன்மார்).

### திருமதி சிவப்பிரகாசம் தங்கம்மா

புத்தூர், நவக்கிரியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவப்பிரகாசம் தங்கம்மா அவர்கள் 16.12.2002 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி - மீனாட்சி தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற முத்தையா சிவப்பிரகாசத்தின் (ஓய்வுபெற்ற சிறாப்பர், இலங்கை வங்கி) துணைவியும் கணேசமூர்த்தி (நைஜீரியா) அவர்களின் தாயாரும் காலஞ்சென்ற குலசிங்கம் அவர்களின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான திருச்செல்வம், பரஞ்சோதி, மயில்வாகனம் மற்றும் ஹரிமனாதேவி ஆகியோரின் மாமியாரும் மகேந்திரனின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2002) ஞாயிற்றுக்கிழமை இல.61, பலாலி வீதி, திருநெல்வேலியில் இடம்பெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.61, பலாலி வீதி,*
*திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.* (12089)

தகவல்:
**சி.கைலேஸ்வரன்**
(பேரன்).

உதயன்

## அபிவிருத்திக்கான அழைப்பு

"பல இன்னல்கள், தியாகங்களுக்கு மத்தியில் கட்டியெழுப்பப்பட்டது இலங்கைத் தமிழர்களின் போராட்டம். அதன் இலட்சியம் முழுமை பெறவேண்டுமாயின் - இன்றைய காலகட்டத்தில் - புத்திஜீவிகள், நிபுணர்கள் முழுமையான அர்ப்பணிப்புடன் இணைந்து செயலாற்ற முன்வரவேண்டும்."

- இவ்வாறு அழைப்பு விடுத்திருக்கிறார் புலிகளின் பொருளாதார ஆலோசகர் கலாநிதி ஜோய் மகேஸ்வரன்.

அரசு - புலிகள் இடையேயான தற்போதைய சமாதானப் பேச்சுக்களில் புலிகள் தரப்பில் வள ஆலோசகராகப் பங்குபற்றி வருபவர் அவர். அத்தோடு வடக்கு - கிழக்கு உடனடி மனிதாபிமான, புனர்வாழ்வுப் பணிகளுக்கான பத்துப்பேர் உபகுழுவில் அவரும் ஓர் உறுப்பினர்.

தற்போதைய அரசியல் நிலைமைகள், போக்குகள், அதையொட்டி நமது பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள், அதற்கான வாய்ப்பு - வசதிகள் என்று பலதரப்பு அம்சங்களையும் நன்கு கவனித்து அறிந்துள்ள பொருளாதார வள ஆலோசகர் அவர். எனவே, இன்றையநிலையில், நமது தாயகப் பொருளாதார அபிவிருத்திக்கான முன்னேற்றப் பாதைகள், இலக்குகளை வரையறைசெய்து சுட்டிக்காட்டும் தகுதியும், திறமையும், கடமையும் மிக்க நிபுணர்களில் அவர் முதன்மையானவராகின்றார்.

கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பாக கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே நமது சமூகத்தின் புத்திஜீவிகள், நிபுணர்களுக்கு அவரே இந்த அழைப்பை விடுத்திருக்கின்றார்.

கடந்த இரண்டு தசாப்த காலப்போரினால் நமது தாயகம் அழிந்துபோய்க்கிடக்கின்றது. இந்த அழிவிலிருந்து நமது தாயகத்தை மீட்டு, நமது மக்களின் நல்வாழ்வுக்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நமக்குக் கிடைத்துள்ள ஓர் இடைவெளிக் காலம் இது. இதனை உரியமுறையில் பயன்படுத்த வேண்டிய கடப்பாடும் பொறுப்பும் இந்தத் தலைமுறை மீது வீழ்ந்திருக்கிறது.

இனப்போரின் விளைவாக இரண்டு விதப் பின்னடைவுகளை நமது தாயகம் சந்தித்தது.

ஒன்று - நமது தாயகப் பொருளாதாரம், அபிவிருத்தி என்பன பின்னடைவைக் கண்டன. வர்த்தக மையங்கள், நகரங்கள், வீடு - வாசல்கள், சொத்துக்கள், உடைமைகள் அழிந்துபோயின. வள இழப்பு ஏற்பட்டமை நேரடிப் பாதிப்பு.

மற்றது - நமது தாயகத்தின் 'மூளை வளம்' நாட்டிலிருந்து ஏற்றுமதியாகிவிட்டது. துறைசார் நிபுணர்கள், வல்லுநர்கள், புத்திஜீவிகள் யுத்தசூழ்நிலை காரணமாக வேறுவழியின்றி வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்தனர். துறைசார் நிபுணர்கள் மட்டுமல்லாமல் ஒரு பொருளாதாரக் கட்டமைப்பின் முதுகெலும்பாகத் திகழக்கூடிய வர்த்தக சமூகங்கூட வெளிநாடுகளைத் தேடி இடம்பெயர்ந்தது. இது மறைமுக இழப்பு.

முதலாவது செயற்பாட்டால் தாயக அபிவிருத்தி இருண்டுகிடக்கிறது.

இரண்டாவது செயற்பாட்டால் அந்த அபிவிருத்தி நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்கும் விவகாரத்தில் பெரிய இடைவெளி ஏற்பட்டுள்ளது.

இந்த இரண்டு பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டாலேயே நமது தாயக அபிவிருத்தி என்ற கனவு நிறைவேறமுடியும்.

முதலாவது பிரச்சினைக்கு வெளிநாட்டு உதவிகள்மூலம் ஓரளவு தீர்வுகிட்டும். நமது தாயக மக்களும் கடுமையாக உழைத்தால் அந்தப் பின்னடைவுகளிலிருந்து நாம் மீண்டு வரமுடியும்; புதுவாழ்வு பெறமுடியும்.

ஆனால், அடுத்த பிரச்சினையைச் சமாளிப்பதற்கு - தாண்டுவதற்கு - நமது தாயகம், தான் இழந்த மூளை வளத்தை மீண்டும் பெற்றாகவேண்டும்.

அதற்கான அழைப்பைத்தான் நமது பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன் இப்போது பகிரங்கமாக விடுத்திருக்கின்றார்.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து, தங்கள் திறமை காரணமாக வெளிநாடுகளில் தம்மை முன்னணியில் நிலைநிறுத்தியிருக்கும் நமது புத்திஜீவிகள், துறைசார் நிபுணர்கள் போன்றோரின் செவியில் இந்த அழைப்பு விழவேண்டும்.

அதேசமயம் இப்பணிக்காக தம்மைப் பயன்படுத்தி, செயற்படுத்துவதற்கு உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் முன்வரும் நமது துறைசார் நிபுணர்களின் சேவையை - அவர்களுக்கு வசதியான முறையில் - ஒழுங்குபடுத்திப் பெற்றுக்கொள்வதற்கான ஓர் அமைப்பை நாம் உருவாக்குவதும் அவசியமாகின்றது.

இது, இந்த நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க வேண்டிய அரசியல் தலைமைத்துவத்தின் கடமையாகின்றது.

# வெளிநாடுகள் தரும் நிதி உதவிகள் ஊழல், விரயம் இன்றி பயன்படட்டும்!

## புலிகளின் பொருளாதார ஆலோசகர் மகேஸ்வரன்

மட்டக்களப்பு,டிசெ.22

வெளிநாட்டு உதவிகள் ஊழல், விரயமின்றி மக்களைச் சென்றடையவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் விடுதலைப் புலிகளின் பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன்.

கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பாக நேற்றுமுன்தினம் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், அங்கு மேலும் தெரிவிக்கையில் - 20 வருடங்களாகப் பாதிக்கப்பட்டிருக்கும் வடக்கு - கிழக்கு மக்களின் அத்தியாவசியத் தேவைகள் உடனடியாகப் பூர்த்திசெய்யப்படவேண்டும்.

இங்கு எந்தவோர் அபிவிருத்திப் பணிகளையும் அதற்கென தற்போது அமைக்கப்பட்டிருக்கும் உபகுழுவே தீர்மானிக்கும்.

ஒஸ்லோ உதவி வழங்கும் மாநாடுமூலம் சுமார் எழுநூறு கோடி ரூபா கிடைத்துள்ளது. நாம் அரசுடன் சமத்துவமான முறையில் - தமிழ்மக்களின் பிரதிநிதிகளாக - ஒஸ்லோ மாநாட்டில் பங்குபற்றி சர்வதேச உதவிகளைக் கோரியது சரித்திர முக்கியத்துவம்வாய்ந்த விடயமாகும்.

ஒரு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தற்போது அகதிகளாகவுள்ளனர். எமது மக்களுக்கான அத்தியாவசிய கட்டமைப்புக்கள், வேலைவாய்ப்புக்குத் தேவையான கடன்கள் என்பவற்றை வழங்க எமக்குப் பெருமளவு நிதி தேவைப்படுகின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் புத்திஜீவிகள், நிபுணர்கள் முழுமையான அர்ப்பணிப்புடன் எமது அபிவிருத்திப் பணிகளில் இணைந்து கொள்ளவேண்டும். அப்போதுதான் நாம் நமது இலட்சியத்தை அடையமுடியும் - என்றார்.

இந்தச் செய்தியின் ஒரு பகுதி நேற்றைய உதயனிலும் பிரசுரமாகி இருந்தது.

(ஐ-4)

## மக்கள் மீளக்குடியமர்ந்து வருவதை அடுத்து

# அகதிகளுக்கான நீர் விநியோகம்; ஜேர்மன் நிறுவனம் நிறுத்துகிறது

யாழ்ப்பாணம்,டிசெ.22

கடந்த 2000ஆம் ஆண்டு தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து வலிகாமம், வடமராட்சி ஆகிய பகுதிகளிலுள்ள அகதிமுகாம்களில் தங்கியிருந்த மக்களுக்கென ஜேர்மன் தொழிநுட்ப நிறுவனத்தினால் (ஜி.ரி.இசட்) வழங்கப்பட்டுவந்த இலவச குடிதண்ணீர் விநியோகம் இம்மாதம் 31ஆம் திகதியுடன் நிறுத்தப்படவிருப்பதாக அந்த நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அகதிமுகாம்களில் தங்கியிருந்தவர்களில் பெரும்பாலானோர் தற்பொழுது தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்துவிட்டனர். இதனைக் கருத்திற்கொண்டும் -

குடிதண்ணீர் விநியோகத்தை அடுத்த வருடமும் தொடர்ந்து மேற்கொள்வதற்கு உரிய நிதி வசதிகள் கிடைக்காமையினாலும் -

அதனை நிறுத்துவதற்கு தாங்கள் தீர்மானித்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

அகதிமுகாம்களில் தொடர்ந்தும் தங்கியிருக்கின்ற மக்களுக்கான குடிதண்ணீர் வசதிக்கு மாற்று ஏற்பாடுகளைச் செய்யுமாறு சம்பந்தப்பட்ட பிரதேசங்கள் மற்றும் மாநகரசபை ஆகியவற்றுக்குத் தாங்கள் கடிதம்மூலம் அறிவித்திருப்பதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

(ஐ-4)

## தமிழர் தேசிய இயக்கம் மீதான தடையை நீக்கி

# நெடுமாறனை விடுதலை செய்யுமாறு கூட்டமைப்பு எம்.பிக்கள் கோரிக்கை

சென்னை,டிசெ.22

தமிழர் தேசிய இயக்கத்தின் மீதான தடையை நீக்கி, அதன் தலைவர் பழ.நெடுமாறனை விடுதலை செய்யவேண்டும் என்று தமிழ்க் கூட்டமைப்பைச் சேர்ந்த எம்.பிக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சர்வதேச மனித உரிமை அமைப்பான 'அம்னெஸ்டி இன்ரர்நஷனலுக்கு' தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்கள் ஆர்.சம்பந்தன், மாவை எஸ்.சேனாதிராஜா, ஏ.சந்திரநேரு, ஜி.கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நடராஜா ரவிராஜ், கே.துரைரத்தினசிங்கம், ஏ.அடைக்கலநாதன், தங்கவடிவேல், கே.ஆர்.குகனேஸ்வரன், சிவசக்தி ஆனந்தன், ஜி.கிருஷ்ணபிள்ளை, ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோர் அனுப்பியுள்ள மனு ஒன்றில் இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தியத் தேர்தல் ஆணையத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவரான பழ.நெடுமாறன் (வயது 69), ஓகஸ்ட் முதல் 'பொடா' சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளார். தமிழக அரசு அவரைக் கடலூர் சிறையில் அடைத்துள்ளது.

உலகம் முழுவதும் உள்ள பல்வேறு தமிழர் அமைப்புகளை ஒருங்கிணைக்கக்கூடிய உலகத் தமிழர் பேரமைப்பு, மகளிர் உரிமைக் கூட்டமைப்பு ஆகியவற்றின் தலைவராகவும் பழ.நெடுமாறன் இருந்துவருகிறார்.

தமிழகத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரான பழ.நெடுமாறன், தமிழர் நலனுக்காகப் பாடுபட்டு வருபவர். உலகெங்கும் வாழும் தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராடி வருபவர். மனித உரிமைகள் மீறப்படும் இடங்களில் அவற்றுக்கு எதிராகக் குரல் கொடுத்து வருபவர் நெடுமாறன்.

இப்பிரச்சினையில் தலையிட்டு, தமிழர் தேசிய இயக்கத்தின் மீதான தடையை நீக்குமாறு, நெடுமாறனையும் அவரது கட்சியினரையும் விடுதலை செய்யுமாறும் தமிழக அரசிடமும் இந்திய அரசிடமும் வலியுறுத்தவேண்டும் என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## வடமராட்சி கிழக்கில்

# போரூட் உதவியுடன் வீடமைப்புத் திட்டம்

வடமராட்சி கிழக்கு,டிசெ.22

வடமராட்சி கிழக்கில் மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளில் புதிதாக வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு போரூட் நிறுவனம் முன்வந்துள்ளது.

உடுத்துறை, ஆழியவளை ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை - மேற்படி வீடமைப்புத் திட்டம் தொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்று கடந்த செவ்வாய்க்கிழமை மருதங்கேணியில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் போரூட் நிறுவன அதிகாரிகள், கிராம சேவையாளர்கள், கடற்புலிகளின் அரசியல்துறையினர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(எ-180)

### நாளை

மார்கழி 08
திங்கட்கிழமை
(23.12.2002)
திதி : சதுர்த்தி
முன்னிரவு 11.38 வரை.
நட்சத்திரம் : பூசம்
காலை 7.47 வரை.
சங்கடகர சதுர்த்தி விரதம்
சுபநேரம் : 12.25 - 1.55
ராகுகாலம் : 7.55 - 9.25
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

உயர் ஒழுக்கமில்லாது உயிர்விடுபவர்க்கே இறப்பு காலத்துக்கு முன் வந்ததாகும்.

# கிராம அலுவலர்களின் சீருடையில் மாற்றம்

வலி.வடக்கு,டிசெ.22

கிராம அலுவலர்களின் சீருடையில் மாற்றம் செய்யப்படவுள்ளது. இது தொடர்பான அறிவிப்பை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு விடுத்துள்ளது.

எதிர்காலத்தில் கிராம அலுவலர்கள் கறுப்பு நிற நீளக் காற்சட்டையும் வெள்ளை நிற சேர்ட்டும் அணியவேண்டும் - என்றும் -

பெண் கிராம அலுவலர்கள் இளம் மஞ்சள் நிறத்தில் சேலை அணியவேண்டும் என்றும் -

பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் கிராம அலுவலர்கள் வெள்ளை நிற சேர்ட்டும் பெண்கள் வெள்ளை நிற சேலையையும் அணிந்து வந்தமை தெரிந்ததே.

(எ-86)

# மானிப்பாய் ஆஸ்பத்திரியில் காலையில் மட்டுமே சிகிச்சை

## நோயாளர்கள் ஏமாற்றம்

நவாலி,டிசெ.22

மானிப்பாயில் அரசினர் வைத்தியசாலை கடந்த 5ஆம் திகதிமுதல் காலையில் மட்டுமே இயங்கிவருகின்றது.


இங்குள்ள வைத்திய அதிகாரி மாலை வேளையில் வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலைக்கு பதில் கடமையாற்றச் செல்கின்றார். இதனால் மேற்படி வைத்தியசாலையில் மாலை நேரங்களில் சிகிச்சைபெறவரும் நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை - மானிப்பாய் வைத்தியசாலையில் தினமும் நூற்றுக்குமேற்பட்ட நோயாளிகள் காய்ச்சல், சளி, இருமல் போன்ற நோய்களுக்கென சிகிச்சை பெற வருகின்றனர். எனினும், இங்கு பனடோல் உட்பட முக்கிய பல மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் கூறப்பட்டது.(எ-100)

# உலகில் இந்த ஆண்டு.....



↑ சிம்பாப்வேயில் தேர்தல். எனினும், வாக்கெடுப்பில் முறைகேடு, மோசடிகள்...



↑ செப்ரெம்பர் 11 தாக்குதலை உலகம் நினைவு கூர்ந்தது.....



↑ 'எட்னா' எரிமலை கோபாவேசம். மக்கள் இடம்பெயர்ந்து அல்லோலகல்லோலம்.



↑ மேற்குக் கரையில் ஜெனின் அகதிமுகாமை இஸ்ரேல் ஆக்கிரமித்தது...



↑ ஹமீட் ஹர்சே ஆப்கானின் இடைக்கால அதிபராகினார்....



↑ மொஸ்கோ திரையரங்கில் நடந்த பணய நாடகம்: ரஷ்யப் படைகள் முறியடித்தபோது பெரும் மனித சோகம்.....

2002
உலகில்
இந்த ஆண்டு
தடம் பதித்த
முக்கிய
நிகழ்வுகள்
படங்களில்....



↑ மர்ம மனிதனின் கொலை வேட்டுக்களால் வாஷிங்ரனில் பீதி....



↑ இந்தோனேஷியாவின் பரடைஸ் தீவில் பெரும் குண்டுத் தாக்குதல். 187 பேர் மரணம்.....

ஈராக்குக்கு போர் அச்சுறுத்தல்....






↑ உதைபந்தாட்ட உலகக் கிண்ணத்தை பிரேஸில் வென்றது.....



↑ உள்நாட்டு யுத்தத்தின் முடிவில் அங்கோலாவில் கடும் பஞ்சம்.

ஸ்பெயின் கால்வாயில் எண்ணெய்க் கப்பல் இரண்டாகப் பிளந்தபோது பெரும் சுற்றுச் சூழல் அச்சுறுத்தல்.....



மன்றம் யாழ்ப்பாணம்,

# பலாலி தவிர்ந்த பிற பகுதிகளைவிட்டு இராணுவத்தினர் வெளியேறவேண்டும்!

## செயலக கூட்டத்தில் அமைச்சர் மகேஸ்வரன்

யாழ்ப்பாணம்,டிசெ.22

பலாலி தவிர்ந்த ஏனைய இடங்களில் உள்ள உயர்பாதுகாப்பு வலயங்களிலிருந்து படையினர் முழுமையாக விலகி புனரமைப்புப் பணிகளுககு வழிவிடவேண்டும்.

- இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார் இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன்.

யாழ்.செயலகத்தில் கடந்த திங்கள் முதல் நடைபெற்றுவந்த 'யாழ்ப்பாணத்திட்டம் 2002' செயலமர்வின் இறுதிநாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் தனது உரையில் தெரிவித்ததாவது:-

இன்று அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதில் எதிர்நோக்கப்படும் முக்கிய பிரச்சினை உயர்பாதுகாப்பு வலயங்கள் பற்றியதாகும்.

கொழும்புத்துறை தொடக்கம் அரியாலை வரையான கரையோரப் பகுதிக் குடும்பங்களும் புன்னாலைக் கட்டுவன் பகுதியில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களும் பாதுகாப்பு வலயங்கள் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த மக்களின் தொழில், சுகாதாரம், கல்வி முதலான சகல விடயங்களிலும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. மேற்படி பிரதேசங்களுக்கு நாம் நேரடியாக விஜயம் செய்து அந்த மக்கள் அனுபவிக்கும் துன்பங்களைக் கண்டறிந்துள்ளோம். எனவே, இந்த மக்களின் துன்பங்களை நீக்குவதற்காக இராணுவத்தினர் சிறிதளவாயினும் ஒத்துழைக்கவேண்டும்.

வேண்டுமானால் பலாலிப் பகுதியை மட்டும் படையினர் தற்காலிகமாக உயர் பாதுகாப்பு வலயமாகக் கொள்ளட்டும். ஏனைய பகுதிகளை விட்டு படையினர் வெளியேறவேண்டும். அப்போதுதான் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள வசதியாக இருக்கும்.

அண்மையில் இடம்பெற்ற பேச்சுக்களின்கூட இந்த விவகாரத்தைப் படைத்தரப்பு இழுத்தடித்துள்ளமை கவலைக்குரியதாகும். எனினும், விரைவில் இதற்குத் தீர்வு காணப்படுதல் அவசியமாகும்.

இந்தக் கூட்டத் தொடர்கள் கடந்த காலங்களை போன்றல்லாது நம்பிக்கை ஊட்டுவனவாக அமைகின்றன.

இதேவேளை, அபிவிருத்தித் திட்டப்பணிகள் அனைத்தும் சிறப்பாக நடைபெற அரசு தேவையான உதவிகளை வழங்கும் - என்றார் மகேஸ்வரன்.

அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதியாக அங்கு கலந்துகொண்டு உரையாற்றிய எஸ்.விக்னேஸ்வரன் மூன்று நாள் ஆய்வுப்பட்டறைகளில் எடுக்கப்பட்ட முடிவுகள் செயல்வடிவம் பெறும்வரை அதனை நம்பமுடியாது - என்றார்.

புனர்வாழ்வு, அகதிகள் விவகார அமைச்சின் செயலர் ஜெ.ரட்ணம், யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன், ஜி.ரி.இசற்றின் யாழ்.மாவட்ட ஆலோசகர் கோர்ணர், வடக்கு - கிழக்கு மாகாண திட்டமிடல் மற்றும் பிரதிப் பிரதம செயலர் எஸ்.சுவாமிநாதன், வடமாகாண திட்டமிடல் ஆலோசகர் எஸ்.சண்முகலிங்கம், பிரதமர் அலுவலகத்தில் ஆலோசகராகக் கடமையாற்றும் பெரோ, புனர்வாழ்வு அமைச்சின் மேலதிக செயலர் எஸ்.குமாரதாஸன் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றினர். (ஜ-12-5)

## கணபதி ஹோமம்

யாழ்ப்பாணம்,டிசெ.22

நாட்டில் சமாதானம், சுபிட்சம், அமைதி என்பன நிலைபெறவேண்டி இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு உசன் கஜகேணிப் பிள்ளையார் கோயிலில் கணபதி ஹோமம் நடைபெறவுள்ளது. (ஜ-10)

# நகரில் கருவாட்டுக்கு நல்ல கிராக்கி

அரியாலை,டிசெ.22

யாழ்.நகரில் கருவாடுகளுக்கு பெரும் தட்டுப்பாடும் கிராக்கியும் ஏற்பட்டுள்ளது.

நெடுந்தீவுப் பகுதியில் இருந்து மீன், கருவாடு கடந்த சில நாள்களாக யாழ்.நகருக்க எடுத்துவரப்படாததை அடுத்தே இந்தத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

தென்பகுதியில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் மீன், கருவாடுகளை வாங்குவதற்காக நகரப் பகுதியில் அலைந்து திரிவதைக் காண முடிந்தது. அத்துடன் கட்டாப்பாரை, கருங்கண்ணி, பாரை போன்ற கருவாடுகளுக்கு நகரப் பகுதியில் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. (ஜ-17)

# சங்கானைக் கோட்டத்தில் பாட நூல்கள் வழங்கல்

வலிகாமம் தெற்கு,டிசெ.22

சங்கானைக் கோட்டக்கல்விப் பாடசாலைகளுக்கான இலவச பாடநூல் விநியோகம் நாளை திங்கட்கிழமை நடைபெறும்.

காலை ஒன்பது மணிமுதல் சங்கானைக் கோட்ட அலுவலகத்தில் வைத்து பாடநூல்கள் விநியோகிக்கப்படும் என்றும் -

கோட்டப் பாடசாலை அதிபர்கள் உரிய ஆவணங்களுடன் வந்து தங்கள் பாடசாலைக்குரிய நூல்களை அன்றைய தினமே பெற்றுக்கொள்ளுமாறும் -

சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா அறிவித்துள்ளார். (ஜ-152)

# திக்கம் வடிசாலை விவகாரம் கூட்டமைப்பின் கவனத்துக்கு!

வடமராட்சி,டிசெ.22

திக்கம் வடிசாலையை வடமராட்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திடம் பெற்றுக் கொடுப்பது தொடர்பாக தமிழர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஆலோசித்து நடவடிக்கைகளை மேற்கொள்வதாக யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உறுதியளித்திருக்கிறார்.

இது தொடர்பாக வடமராட்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கக் கொத்தணி பிரதிநிதிகள் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை சந்தித்து கோரிக்கை விடுத்தபோது அவர் இந்த உறுதிமொழியை அளித்தார். (ஜ-173)

# கலாசாரச் சீரழிவுகளிலிருந்து தென்னிலங்கை மீளமுடியுமா?

தென்னிலங்கை மக்கள் கலாசாரச் சீரழிவுகளில் மூழ்கிக் கரைசேர முடியாமல் இன்று தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கொலை, கொள்ளை, கற்பழிப்பு, சிறுவர், சிறுமியர், பாலகர்கள் என்ற பேதமில்லாமல் பாலியல் வல்லுறவு, போதைவஸ்துப் பாவனை, கசிப்பு உற்பத்தி, அதன் பாவனை, லஞ்சம், ஊழல், பாதாள உலகக் கும்பல்களின் கொடூரங்கள், கப்பம் பெறுதல், வர்த்தகப் பிரமுகர்களையும் அவர்களது பிள்ளைகளையும் கடத்தி லட்சக் கணக்கில் பணயப் பணம் கோருதல், பெறுதல், நிர்வாகங்களில் பாரபட்சம், சீர்கேடுகள் பொதுமக்களது பணத்தைக் கோடிக் கணக்கில் முறைகேடான வழிகளில் கையாடுதல், பல்கலைக்கழகங்களில் வன்முறைகள், கொலை என்பன பற்றி செய்தி ஊடகங்கள் நாளாந்தம் வெளியிடும் தகவல்கள் பலவாகும்.

**குனிந்த தலைகள் நிமிரவில்லை**

ஜப்பானிய மாணவி ஒருத்தி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சக சிங்கள மாணவர்களினால் கற்பழிக்கப்பட்டமை பற்றிப் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தபோது நாகரிகமுடைய முழு இலங்கை மக்களுமே வெட்கித் தலைகுனிந்தனர். குனிந்தவர்களின் தலைகள் குனிந்தவைதாம் இன்னும் அவை நிமிரவே இல்லை. ஒவ்வொரு நாட்டிலும் பல்கலைக்கழகங்கள் சரஸ்வதி தேவியின் கோயில்களாகக் கருதப்படுபவை. அவற்றின் மூலமே ஒரு தேசம் தலைநிமிர்ந்து நிற்கின்றது என்பது வரலாறு.

அங்கே படிக்கும் மாணவர்கள் நாடு முழுவதிலுமுள்ள மாணவர்களில், பாலிலிருந்து கடைந்தெடுக்கப்பட்ட வெண்ணெய் போன்றவர்கள். அந்த வெண்ணெய்களின் நடத்தைகளைக் கண்டித்துப் பிரபலமான ஆங்கிலத் தினசரி ஒன்று ஆசிரிய தலையங்கம் தீட்டியுள்ளது. தென்னிலங்கையிலுள்ள மற்றுமொரு சர்வகலாசாலையிலும் மாணவர்களின் தரக்குறைவான நடத்தைகள் பற்றியும் உபவேந்தரே பல அதிர்ச்சித் தகவல்களை அண்மையில் வெளியிட்டுள்ளார். பல்கலைக்கழகங்களிலேயே இத்தகைய கலாசாரச் சீரழிவுகள் எனில் சாதாரணமாக நாட்டு நிலைமை எப்படி என்பதை, ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்ப்பதைப்போல ஆங்காங்கே ஒரு சில உதாரணங்களை எடுத்து ஆராய்வது மிகவும் பொருத்தமானது.

'கடுகண்ணாவையில் கஞ்சா வைத்திருந்த பிக்கு கைது!' எனச் செய்திகள் வெளிவந்தபோது வாசகர்கள் பெரும் அதிர்ச்சியடைந்திருப்பர்.

**பாதாள உலகக் கும்பல்கள்**

தென்னிலங்கை பாதாள உலகக் கும்பல்களினால் நிரம்பி வழிவது போன்றதொரு தோற்றம் இந்நாள்களில் ஏற்பட்டுள்ளது. இவர்களினால் புரியப்படும் இரட்டைக் கொலைகள், முக்கொலைகள், கொள்ளைகள், வழிப்பறிகள் இன்று மிகமிக சர்வசாதாரணமான நிகழ்வுகளாகிவிட்டன. கூலிக்காகக் கொலை செய்பவர்களும் இன்று நாட்டில் பல்கிப் பெருக விட்டனர் என்பதும் வெளிப்படையான விடயமாகும்.

**போதைவஸ்து**

'குருநாகலில் போதைவஸ்து வைத்திருந்த பதினொரு பேர் கைது!' என மற்றுமொரு செய்தி வெளியாகி உள்ளது. 'இரத்தினதுவீபம்' எனப் புகழ்பெற்ற இலங்கை, போதைவஸ்துக் களஞ்சியமாக மாறிவருகின்ற தென்ற கவலையும் இன்று கல்விமான்களிடையே காணப்படுகின்றது. தலை நகர மாணவர்களிடையே போதைவஸ்துப் பாவனை அதிகரித்துள்ளதாக கல்லூரி அதிபர்களும் கவலை அடைந்துள்ளனர்.

**கருக்கலைப்புக்கள்**

**வல்லுறவுகள்**

பண்டைக்காலத்தில் 'தர்மதுவீபம்' எனப் போற்றப்பட்ட இலங்கையில் பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் நாளாந்தம் அதிகரித்தவண்ணமே உள்ளன என்பதைப் பத்திரிகைகளில் வெளிவரும் புதினங்கள் புலப்படுத்துகின்றன. குழந்தைகள் பாலியல் துஷ்பிரயோகம் ஒருபுறம், விபசார விடுதிகள் இன்னொரு புறம் என 'தர்மதுவீபம்' இந்நாள்களில் திணறிக்கொண்டிருக்கின்றது. மேலும் தென்னிலங்கை முழுவதும் சட்டவிரோதக் கருக்கலைப்பு நிலையங்கள் பல்கிப் பெருகி இயங்கி வருவதாகத் தகவல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன. இதன் அர்த்தமென்ன?

**குற்றச் செயல்களில்**

**படையினர்**

'பாரிய கொள்ளைச் சம்பவம் தொடர்பாக இராணுவ உயர் அதிகாரிகள் இருவர் உட்பட ஏழு இராணுவ வீரர்கள் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்' என அண்மையில் மற்றுமொரு செய்தி. இராணுவத்திலிருந்து பயங்கர ஆயுதங்கள், வெடிகுண்டுகள், கைக்குண்டுகளுடன் தப்பி ஓடியுள்ள பல ஆயிரக்கணக்கான படைவீரர்களும் கொடிய குற்றச் செயல்களில் ஈடுபடுவதாகவும் புதினங்கள் பலப்பல. பாதுகாப்புப் படையினரின் செயற்பாடுகள் குறித்து நாட்டுமக்கள் பீதி அடைந்துள்ளனர். பொலீஸ் சேவையிலுள்ள உயர் அதிகாரி ஒருவரே இன்றுள்ள பொலீஸ் சேவையின் நீதி விரோத செயற்பாடுகள் குறித்துச் செய்தி ஊடகங்களுக்குத் தமது கடுமையான விசனங்களைத் தெரிவித்துள்ளார்.

> **போரினால் அழிவுண்ட வடக்கு - கிழக்குப் பிரதேசம் புத்துயிர் பெற்றாலும் போரின் விளைவுகளாக தென்னிலங்கை மக்களின் வாழ்வைச் சூழ்ந்துவிட்ட கலாசாரச் சீரழிவுகள் அகன்றுவிட இன்னும் நெடுங்காலம் எடுக்கும் என்கிறார் இக்கட்டுரையாளர்.**
>
> **தென்னிலங்கையில் அதிகரித்துள்ள சீரழிவுகள் குறித்த ஒரு பார்வை இது.**

சமாதானத்திற்காக யுத்தம் புரிந்த ஒரு பிரபல்யத்திடம் கோடிகோடியாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் பற்றிய விசாரணைகளைக் கண்டு முழு உலகமுமே ஆச்சரியத்

**செல்லப்பா நடராசா**

தில் மூழ்கிப்போய் இருக்கின்றது. இந்தப் பெரிய இடத்துப் பிரமுகரே இப்படி என்றால் அவரது சகபாடிகள், உறவினர்கள் சம்பாதித்த சொத்துக்களின் பெறுமதி எவ்வளவென்று ஸ்ரீமான் பொதுசனம் கேள்வி எழுப்புகிறார். தென்னிலங்கை மக்கள் இன்று முகங்கொடுத்துள்ள கலாசாரப் பேரழிவுகளுக்கான மூல காரணங்களை அறிய நாம் ஐம்பது ஆண்டுகள் பின்நோக்கிச் செல்லவேண்டும்.

**இலங்கை சுதந்திரம்**

**அடைந்த பின்....**

இலங்கை சுதந்திரம் அடைந்த பின் மலையகத் தமிழ்மக்களுடைய குடியுரிமைகள், வாக்குரிமைகள் பறிக்கப்பட்டன. தர்மம் அழிந்து அதர்மம் தலைத்தோங்கத் தொடங்கிய காலப்பகுதி இதுவே. 1956ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டபோது புத்திஜீவிகளால் எடுத்துரைக்கப்பட்ட தர்ம நியாயங்கள் எல்லாம் நிராகரிக்கப்பட்டன. 1956, 1958, 1977, 1981, 1983ஆம் ஆண்டுகளில் தென்னிலங்கையில் தமிழ்மக்களுக்கெதிராக இனக்கலவரங்கள் மூண்டபோது இடம்பெற்ற கொலை, கொள்ளை, தாலிகள் அபகரிப்பு, கற்பழிப்புச் சம்பவங்கள் எண்ணிக்கையில் அடங்காதவை. இவை பற்றி முறைப்பாடுகள் செய்யவும் பாதுகாப்பை நாடியும் தமிழர்கள் பொலீஸ் நிலையங்களுக்குச் சென்றபோது விரட்டி அடிக்கப்பட்டனர். தமிழ் மாணவர்கள் தரப்படுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். அறுபதினாயிரம் பொதுமக்களும் சுமார் இருபதினாயிரம் போராளிகளும் உயிர் துறகக காரணமாகவிருந்த - நடந்த பத்தொன்பது வருடகால - யுத்தமும் அதன் பின்னணிகளும் பலாபலன்களுமே தென்னிலங்கை மக்களின் கலாசாரப் படுகொலைகளுக்கு முக்கிய காரணமாக அமைந்துவிட்டன என அறிஞர்கள் கருதுகிறார்கள்.

**புலிகளே காரணம்**

யுத்தத்தின்மூலம் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வீடுகள், கோயில்கள், பாடசாலைகள், பனம், தென்னந்தோப்புகள், கமங்கள், வயல்கள் பாரிய அழிவுகளுக்குட்பட்டுள்ளன என்பது உண்மைதான். ஆனால், அங்கு ஒப்பீட்டளவில் கலாசாரச் சீரழிவுகள் மிக மிகக் குறைவென்றே ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இதற்குத் தமிழீழ விடுதலைப் புலிகளே காரணம் எனவும் அவர்கள் தெரிவிக்கிறார்கள். வடக்கு - கிழக்கு மாகாணங்களில் யுத்தம் காரணமாக ஏற்பட்டுள்ள அழிவுகளை ஒரு குறுகிய காலத்தில் புனர்நிர்மாணஞ் செய்து விடலாம். ஆனால், தென்னிலங்கை மக்கள் தமது கலாசாரச் சீரழிவுகளிலிருந்து விடுபட மிகமிக நீண்டகாலம் எடுக்கும் என்பதே புத்தி ஜீவிகளது கவலையாக உள்ளது. பேராதனைப் பல்கலைக்கழக ஜப்பானிய மாணவியின் கற்பழிப்பு விவகாரம் ஒரு சமூக கலாசாரச் சீரழிவு நோயின் பிரதிபலிப்பே எனவும் அவர்கள் கருதுகிறார்கள். நோய் முற்றியதன் அறிகுறியே அது என்கிறார்கள்.

பேரினவாதிகள் தமிழ்மக்களை அழித்து ஒடுக்கப் புறப்பட்டவேளை தமது பாரம்பரியமான 2500 வருடகாலப் பழமைவாய்ந்த பண்புகளை, மதக்கோட்பாடுகளை, மறந்து தமது வாழ்வியல்புகளிலிருந்து அன்பு, கருணை, மனிதநேயம், சகோதரத்துவம், சகவாழ்வு முதலாம் உயர் நெறிகளைப் புறந்தள்ளியமையே அவர்களுக்கு வந்த வினையாயிற்று. தம்மை அறியாமற் தாமாகவே அவர்கள் கலாசாரச் சீரழிவுகளுக்குள் சிக்கிக்கொண்டு விட்டனர். இதிலிருந்து அவர்கள் மீள்வார்களா அல்லது மேன்மேலும் தாழ்வார்களா என்பதைக் காலம்தான் தீர்மானிக்கும். தினையை விதைத்தவன் தினையை அறுப்பான், வினையை விதைத்தவன் வினையை அறுப்பான் என்பது தமிழ் வழக்காகும். ★

## கண் பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம்,டிசெ.22

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம், சங்கானை நிகரை இந்து இளைஞர் மன்றம் மற்றும் ஆலய பரிபாலன சபை ஆகியன இணைந்து நடத்தும் இலவச கண் பரிசோதனை முகாம் இன்று காலை 9 மணிக்கு நிகரை ஞான வைரவர் ஆலய முன்றிலில் ஆரம்பமாகவுள்ளது.

இந்த முகாமில் இரத்த அழுத்தம் மற்றும் சலரோக பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. (ஜ-10)

## குணமாக்கல் வழிபாடுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.22

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள அருட்திரு. சாள்ஸ், சகோதரன் இருதயராஜ் ஆகியோரால் இறைதியான குணமாக்கல் வழிபாடுகள் இன்றும் நாளையும் நடத்தப்படவுள்ளன.

இன்று காலை 9.30 மணிக்கு மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்திலும், மாலை 5 மணிக்கு உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்திலும் -

நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்திலும் - இந்த வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. (ஜ-10)

## பாதிக்கப்பட்டோர் மனு தாக்கல் செய்ய முயற்சி

வடமராட்சி,டிசெ.22

நெல்லியடித் தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்டோர் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குத் தாக்குதல் செய்ய ஆலோசித்து வருகின்றனர்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்டோர் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை நெல்லியடியில் வைத்து சந்தித்து உரையாடியுள்ளனர். (ஜ-173)

## அபிவிருத்திச் சங்க கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.22

யாழ்.செங்குந்த இந்துக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஜனவரி மாதம் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஜ-10)



யாழ் நகரில்
அபான்ஸ்
உலகப்புகழ் பெற்ற மின்சார சாதனங்களின் விற்பனையில்
இலங்கையில் முன்னனியில் உள்ள அபான்ஸ் கம்பனியின்
உத்தரவாதம் கொண்ட மின்சார சாதனங்களுக்கு நாடுங்கள்
எமது அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள்.
யாழ்ப்பாண மின்னகம்,
94 (6)–ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
Jaffna Electricals
உஷா ஏஜென்சி,
145, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
Usha Agency
LG
Haier
JVC
HOOVER
MITSUBISHI
Electrolux
Frigidaire
Russell Hobbs
Jaipan
morphy richards
AIRMATE
Abans
498, காலி றோட், கொழும்பு-03. தொ.பே: 565265-79.
(சி22683)

# முஸ்லிம் காங்கிரஸ் போட்டி அமைப்புகளின் செயலாளர் 'நீயா, நானா' என்று கடி பிடி!

காரைதீவு,டிசெ.22

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ரவூப் ஹக்கீம் அணிச் செயலாளர் நாயகம் எம்.ரீ.ஹஸன் அலிக்கும் அதாவுல்லா அணிச் செயலாளர் நாயகம் டாக்டர் ஏ.எல்எம்.ஹப்ரத்துக்குமிடையே 'நீயா, நானா' என்ற கடி பிடி ஆரம்பமாகிவிட்டது.

முஸலிம் காங்கிரஸின் அதியுயர் பீடக் கூட்டத்திற்கான அழைப்பை அதாவுல்லா அணிச் செயலாளர் நாயகம் டாக்டர் ஹப்ரத், ஹக்கீம் அணிச்செயலாளர் நாயகம் ஹஸன் அலிக்கு அனுப்பியிருந்தார். அதனாலேயே 'கடி பிடி' ஆரம்பமாகியது.

அதியுயர் பீடக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடைபெறும் என்றும் அதற்குச் சமுகமளிக்குமாறு கேட்டும் ஹஸன் அலிக்கு டாக்டர் ஹப்ரத் டிசெம்பர் 14ஆம் திகதியிட்டு அழைப்பு அனுப்பியிருந்தார்.

அழைப்பு 18ஆம் திகதி கிடைத்ததும் அதற்கு மறுத்தானாக டாக்டர் ஹப்ரத்துக்கு, ஹஸன் அலி மறுநாள் 19ஆம் திகதி கடிதம் ஒன்றை அனுப்பினார்.

"ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின அதியுயர் பீடக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு நீர் யார்? ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முறைப்படி தெரிவு செய்யப்பட்ட செயலாளர் நாயகம் நான தான் கூட்டத்தைக் கூட்ட வேண்டியவன நான் தான் நீரல்ல. உமக்கு அந்த உரிமை கிடையாது" என்றவாறாக சுட்டிக்காட்டியே ஹஸன் அலி தனது மறுத்தான் கடிதத்தை அனுப்பியிருந்தார்.

அந்தக் கடிதத்தில் ஹஸன் அலி மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

"முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் பதவியிலிருந்து நீங்கள் இம்மாதம் (டிசெம்பர்) முதலாந் திகதி இடைநிறுத்தப்பட்டுவிட்டீர்கள். இது அன்றைய தினம் மாலை உங்களுக்கு அறிவிக்கப்பட்டது. எனவே, அதற்குப் பின்னர் செயலாளர் நாயகம் என்றோ அதியுயர் பீட உறுப்பினர் என்றோ கூறிக்கொண்டு நீங்கள் செயற்படுவது யாப்புக்கு முரணானதும் சட்டவிரோதமானதும் ஆகும்.

"கட்சியின் உயர் அதிகாரப் பீடத்தின் 8.12.2002 கூட்டத் தீர்மானப்படி நீங்கள் கட்சியின் செயலாளர் நாயகம பதவியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டீர்கள. இது தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டது. அந்த அறிவித்தல் தமக்குக் கிடைத்துவிட்டதாகத் தேர்தல் ஆணையாளர் தெரிவித்திருக்கிறார்.

"ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முறைப்படி தெரிவுசெய்யப்பட்ட செயலாளர் நாயகம் நான்தான்.

"இந்த நிலைமையில் 1.12.2002 திகதியிலிருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகமாகச் செயற்பட உங்களுக்கு அதிகாரமோ தத்துவமோ கிடையாது என்பதை தயவுசெய்து கவனத்திற்கொள்ளுங்கள். நீங்கள் இப்போது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நடைமுறைகளுக்கு மாறாகவும் கட்சியின் பாரம்பரிய செயற்பாடுகளுக்கு முரணாகவும் கட்சியின் யாப்புக்கு மாறாகவும் நடந்து கொள்கிறீர்கள். நீங்கள் இப்போது கூட்டங்கூட்ட விளைகிறீர்களே, அதுவே நிலைமையை விளக்குவதாக இருக்கிறது.

"ஆக, நீங்கள் கூட்டும் கூட்டத்தில் நான் கலந்துகொள்ளமாட்டேன். தயவு செய்து பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ளுங்கள் என்று உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்." இப்படிக் ஹஸன் அலி தமது கடிதத்தில் குறிப பிட்டிருக்கிறார். (ஒ)

### ஜனாதிபதியின் எதிர்ப்புக்கு மத்தியில்

## கொத்தணி பஸ் நிறுவனப் பங்குகள் விற்பனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு,டிசெ.22

பிரிட்டிஷ் நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்ட கொத்தணி பஸ் நிறுவனங்களின் பங்குகள் விற்பனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருக்கிறது. ஆயினும், ஜனாதிபதி சந்திரிகா எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்.

குறிப்பிட்ட நிறுவனத்துக்கு முன் அனுபவம் இன்மை, ஆறு கொத்தணி நிறுவனங்களின் உடைமைகளை வழங்க அரசாங்கம் செயற்பட்ட விதம் ஆகியவை தொடர்பாக ஜனாதிபதி சந்தேகங்களைத் தெரிவித்திருக்கிறார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நீதியமைச்சர் கே.என்.சொக்ஸியும் விளக்கிக் கூறுகையில், ஜனாதிபதி தெரிவித்தவை தவறானவை எனக் கூறியிருக்கின்றனர்.

எவ்வாறாயினும், பிரிட்டிஷ் நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பாக அமைச்சர்கள் உபகுழு ஒன்றினால் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்று அமைச்சரவையிடம் ஜனாதிபதி கோரியிருக்கிறார்.

இதன்படி, அமைச்சர்களான திலக் மாரப்பன, மலிந்த மொறகொட, மஹிந்த சமரசிங்க ஆகியோர் கொண்ட உபகுழு அறிக்கை சமர்ப்பிக்க அனுமதி வழங்கப்பட்டது. (ஒ)

## மாநகரசபை மாதாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.22

யாழ்.மாநகர சபையின் இந்த ஆண்டுக்கான இறுதி மாதாந்தக் கூட்டம் எதிர்வரும் 31 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முதல்வர் செ.கந்தையன் தலைமையில் மாநகரசபையின் இந்து விடுதியில் நடைபெறவுள்ளது. (ம-10)

### ரப்பர் கூட்டுத்தபான ஊழல், கோல்ப் காணி, வாகன கொள்வனவு:

## திங்களுக்கு முன் ஜனாதிபதிக்கு அமைச்சரவை உபகுழு அறிக்கை

கொழும்பு,டிசெ.22

ரப்பர் உற்பத்திக் கூட்டுத்தாபன நிதி மோசடி, ஜனாதிபதி செயலகப் பாவனைக்கு வாகனங்கள் கொண்டு வரப்பட்டமை, நாடாளுமன்றத்துக்கு அருகிலுள்ள ஒரு காணி 'கோல்ப்' திடலுக்கென வழங்கப்பட்டமை ஆகியவை தொடர்பான அமைச்சரவை உபகுழுவின் அறிக்கையை நாளை திங்கட்கிழமை ஜனாதிபதியிடம் கையளிப்பதென அரசு தீர்மானித்திருக்கிறது.

இம்மூன்று சம்பவங்களில் ஒரு சம்பவம் பற்றிய அறிக்கை ஏற்கனவே ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. எனினும், அவ்வாறான ஓர் அறிக்கை தனக்குக் கிடைக்க வில்லையென ஜனாதிபதி சந்திரிகா புதனன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கூறியிருக்கிறார். அதையடுத்தே மூன்று சம்பவங்கள் பற்றிய அறிக்கையை ஜனாதிபதிக்கு மீண்டும் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுகிறது. புதனன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டம இவ்வாண்டின் இறுதிக் கூட்டமாகும்.

அம்மூன்று சம்பவங்களினதும் அறிக்கை தனக்கு உடனடியாகத் தேவை என்று ஜனாதிபதி கூட்டத்தில் கூறியிருக்கிறார். அப்பொழுது, அமைச்சரவைச் செயலாளரை அழைத்த பிரதமர் ரணில், அந்த அறிக்கை ஜனாதிபதிக்கு ஏன் அனுப்பப்படவில்லை என்று வினவியிருக்கிறார்.

ஒரேயொரு அறிக்கை ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்று செயலாளர் பதிலளித்திருக்கிறார். (ஒ)

## கொழும்புத்துறை கிழக்குக்கு மின் இணைப்பு வழங்குக!

### மீளக்குடியமர்ந்தோர் கோரிக்கை

அரியாலை,டிசெ.22

கொழும்புத்துறை கிழக்குப் பகுதிக்கு மின் இணைப்பை வழங்குமாறு இப்பகுதி மக்கள் மின்சாரசபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி பகுதி தற்போது மக்கள் மீளக்குடியமர்ந்துவரும் பகுதியாகும். மின் இணைப்பு வழங்கப்படாததால் இந்தப் பகுதி இரவுவேளைகளில் இருளில் மூழ்கியுள்ளது என்றும் -

அத்துடன் மின்சாரம் இல்லாததைச் சாதகமாகப் பயன்படுத்தி திருடர்கள் திருட்டு முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர் எனக் கூறப்பட்டது.

- இவ்வாறு மின்சாரசபைக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-17)



பனை நடுகைத் திட்டத்தின்கீழ் வலிகாமம் வலய பனை - தென்னை வள அபிவிருத்திச் சங்கத்தினரால் நவாலி கொத்துக் கலட்டியில் 5 ஆயிரம் பனம் விதைகள் அண்மையில் நடப்பட்டன. மேற்படி சங்க பொது முகாமையாளர் க.சுதாகரன் பனம் விதை ஒன்றை நடுவதையும், மேற்படி சங்கத் தலைவர் க.மெய்யழகன் உடன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

*படம்: வலிதெற்கு செய்தியாளர்*

## திருச்சபைகள் நடத்தும் இறைவருகை வழிபாடுகள்

வலி.தெற்கு,டிசெ.22

சண்டிலிப்பாய் திருச்சபையின் 'நீதியான அமைதி' என்னும் இசை வழிபாடு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சபைக் குரு டி.எஸ்.மதியாபரணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்போது அருட்திருயூட் சுதர்சன் மறையுரை நிகழ்த்துவார். அளவெட்டி சத்தியபுரம் திருச்சபையினரும் இந்நிகழ்வில் கலந்துகொள்வர். (எ-152)

★ ★ ★

வலி.தெற்கு,டிசெ.22

கொக்குவில் காந்திஜி கிராம திருச்சபையினர் நடத்தும் இறைவருகை இன்னிசை வழிபாடு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை மூன்று மணிக்கு காந்திஜி கிராம திருச்சபையில் டி.எஸ்.சொலமன் தலைமையில் நடைபெறும். அருட்சகோதரன் ஆர்.றொகான் சமய உரை நிகழ்த்தும் இந்நிகழ்வில் சண்டிலிப்பாய் திருச்சபையினரும் கலந்துகொள்வர். (எ-152)

## மீள்நடுகைத் திட்டத்தின்கீழ் தென்னைநாற்று மேடைகள்

### அமைக்க பிரதேச செயலகம் ஏற்பாடு

தென்மராட்சி,டிசெ.22

பளைப் பிரதேசத்தில் அழிக்கப்பட்ட தென்னை மரங்களுக்குப் பதிலாக மீள்நடுகை செய்வதற்கான தென்னை நாற்றுக்கள் குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன. இதற்காக இப்பிரதேசத்தில் நாற்று மேடைகள் அமைக்க பிரதேச செயலகத்தினால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அடுத்த ஆண்டு (2003) 20ஆயிரம் நாற்றுகள் கொண்ட நாற்று மேடைகள் அமைக்க பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதியில் இருந்து நான்கு லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யுத்த காலத்தில் இப்பிரதேசத்தில் இருந்து ஒரு லட்சம் தென்னை மரங்களும் 45 ஆயிரத்து 450 இளங் கன்றுகளும் அழிக்கப்பட்டதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. (ம-117)

## அரசு சமஷ்டித் தீர்வை முன்வைக்கட்டும் பிறகு பொ.ஐ.மு. கருத்துத் தெரிவிக்கும்

### சு.க.மத்திய குழு தீர்மானம் குறித்து நிமல் சிறிபால

கொழும்பு,டிசெ.22

உத்தேச சமஷ்டி முறை குறித்து அரசு தனது அபிப்பிராயத்தை முதலில் தெரிவிக்கட்டும். அதன்பின்னர், பொ.ஐ.முன்னணி தனது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும் என்று பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் சிறிபால டி சில்வா கூறுகிறார்.

அரசு முன்வைக்கும் சமஷ்டி முறை என்ன என்பது ஒருவருக்கும் தெரியாது என்பதால் அதுகுறித்து பொ.ஐ.முவும் சுதந்திரக் கட்சியும் அபிப்பிராயம் கூறமுடியாது என்று சு.க. மத்திய குழு தீர்மானித்தது எனவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

அரசு தனது யோசனைகளையும் தீர்வையும் முன்வைத்த பின்னர், அவற்றை ஆராய்ந்து திருத்தங்களை முன்வைக்க பொ.ஐ.முன்னணி தயாராக இருப்பதாகவும் நிமல் சிறிபால டி சில்வா மேலும் கூறியிருக்கிறார். (ஒ)

## வாசகர் திருமுகம்

### மேசையின் மேல் ஏறி இருந்து பரீட்சை எழுத முடியுமா?

கடந்த 04.12.2002 அன்று நான் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கில பாடத்திற்குத் தோற்றியிருந்தேன்.

இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கல்வி கற்கும் மாணவர்கள் நிலத்தில் இருந்தும் மர நிழல்களில் இருந்தும் கல்வி கற்றுவருவது ஆச்சரியப்படக்கூடிய விடயமல்ல. ஆனால், பரீட்சையின் போது வசதியான முறையில் இருந்து பரீட்சார்த்திகள் பரீட்சையில் தோற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பது சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகளின் முக்கிய கடமையாகும்.

இச்சம்பவம் நடைபெற்றது வேறெங்குமல்ல. யாழ்.குடாநாட்டில்தான். நவாலியிலுள்ள ஒரு பிரபல்யமான அரசினர் பாடசாலையில்தான். அங்கு அரைவாசிக்கு மேற்பட்டோர் ஒரு மேசையில் ஏறி இருந்து இன்னொரு மேசையின்மேல் விடைத்தாள்களை வைத்து எழுதியே பரீட்சைக்குத் தோற்றினார்கள். இது மிகவும் மனவருத்தத்திற்குரிய விடயமாகும். போதிய தளபாட வசதியில்லாத பாடசாலைகளுக்கு அளவுக்கதிகமான பரீட்சார்த்திகளை அழைத்தது பரீட்சைத் திணைக்களத்தின் பாரிய தவறாகும். இத்தளபாடக் குறையை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்கத் தவறியமை சம்பந்தப்பட்ட பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்களின் தவறாகும். இக்குறைகள் இன்று மட்டுமன்று என்றுமே நடைபெற்று வருகின்றது. அடுத்த வருடமாவது இக்குறைகளை நிவர்த்திசெய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

*மானிப்பாய்.* அ.ஜெகதீபன்.

### நியமனம் கிடைப்பது எப்போது?

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு நடத்துநர்கள், சாரதிகள், பொறியியற்பகுதி ஆகியவற்றிற்கு இருக்கும் ஆளணி வெற்றிடத்தினை நிரப்புவதற்காக 2002ஆம் ஆண்டு 5ஆம் மாதம் 17, 18, 19, 20 ஆகிய திகதிகளில் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டது யாவரும் அறிந்ததே. ஆனால், இன்றுவரைக்கும் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்களோ அல்லது அறிவிப்புகளோ அனுப்பப்படவில்லை. ஆனால், வடபிராந்திய போக்குவரத்துச் சபை அதிகாரிகளோ, போதிய ஆளணியினர் இல்லாமையினால் மக்களுக்கு போதியளவு சேவையினைச் செய்யமுடியாதுள்ளது என பத்திரிகைகளினூடாக செய்திகளை வெளியிடுகின்றனர். தற்போது கடமையில் உள்ளவர்கள் 'ஒரு நிமிடம் கூட ஓய்வெடுக்கமுடியாது உள்ளோம்' என பயணிகளிடம் கூறுகின்றனர். வேறு சில அதிகாரிகளோ ஒவ்வொரு நாளும் குறைந்தது 5 பேருந்துகள் ஆளணியினர் இல்லாது சேவையில் ஈடுபடமுடியாது உள்ளது எனக் கூறுகின்றனர்.

கொழும்பில் இருந்துவந்த உயர் அதிகாரிகளோ மிக விரைவில் சகல நடவடிக்கையையும் உடனடியாக மேற்கொள்ளுகின்றோம் எனக் கூறினார்கள். இவையெல்லாவற்றையும்விட கௌரவ அமைச்சர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் உள்ள அரசவெற்றிடங்களை நிரப்புவதற்கு பிரதமர் உறுதியளித்துள்ளார் என்றும், 60 பேருந்துகள் வழங்கப்படும் என்றும் பத்திரிகைகளில் செய்திவெளியிட்டுள்ளார்.

உலக வங்கியோ அரசாங்க வெற்றிடங்களை நிரப்புவதற்கு அங்கீகாரம் அளித்துள்ளது எனப் பத்திரிகைமூலமாக அறிந்துள்ளோம். எனவே, மேற்குறிப்பிட்ட செயற்பாடுகள் நடைமுறையில் இருக்கின்றபொழுது எதற்காக எங்களது நியமனம் வழங்கப்படாமல் இருக்கின்றது? காரணம் என்ன? இதனோடு சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பதிலை எதிர்பார்க்கின்றோம்.

*கோப்பாய்.* எஸ்.ரூபன்.

### பணம் கிடைத்தால் போதுமா?

அரச சேவைகளு[illegible] போட்டிப் பரீட்சைகளுக்கு அவ்வப்போது மாதிரி வினாத்தாள் [illegible] வெளியிடப்படுகின்றன. அவற்றை வெளியிட முன்பு அவ[illegible] உள்ள அச்சு பிழைகள், வினா விடையில் உள்ள பிழைகளைத் திருத்தம் செய்யாமல், தரக்குறைவான கடதாசியில் அச்சுப்பதிவுசெய்து வெளியிடுகிறார்கள். விலையையும் அதிக அளவில் போடப்பட்டு விற்பனைக்கு வருகின்றன. சமீபத்திய வெளியீடுகளும் அவ்வாறே பல பிழைகளுடன் வெளிவந்துள்ளன. பரீட்சார்த்திகள் எதுசரி, எதுபிழை என்று திக்குமுக்காடும் நிலைக்கு உள்ளாகி[illegible] பணம் கிடைத்தால் போதும், யார் கெட்டாலும் எமக்கென்ன [illegible] தான் வெளியிடுபவர்களின் எண்ணம் இருக்கிற[illegible] இனி மேலாவது அவர்கள் 'செய்வன திருந்தச் செய்' [illegible] பொன்மொழியை கடைப்பிடிக்க வேண்டுகின்றேன்.

*ஏழாலை [illegible]* கு.பரமலிங்கம்.

# விற்பனைக்கு

சுன்னாகம், இல. 68, மின்சார நிலைய வீதியில் (நெல் ஆலைக்கு அருகில்) 3 PHASE மின்சார வசதியுடன் சுற்றுமதில், வற்றாக்கிணறு, தண்ணீர்த்தாங்கி, திருத்தி அமைக்கக்கூடிய 8000 சதுர அடியில் கட்டடமும், 2500 சதுர அடியில் தளமும் உடைய - எந்த வித தொழிற்சாலைக்கு உகந்த வசதிகளுடன்கூடிய பரப்பு 15 - குளி 7, விஸ்தீரணமுள்ள காணி உடன் விற்பனைக்கு உண்டு.

*விவரங்களுக்கு:*

எஸ்.ஜே.இராஜசிங்கம்,
"லோட்டஸ் வில்லா"
சூறாவத்தை,
சுன்னாகம்.

(11971)

# 2ஆவது ஆண்டு நினைவலைகள்



## நடராசா சுபாகரன்

(லெப்டினன்ட் கலைச்செல்வன்/கலை)

பிறப்பு 1978-01-20 இறப்பு 2000-12-22

காங்கேசன்துறையில் பிறந்து சிறுவயதிலேயே விளையாட்டில் வீரனாய் நீ இடம்பெயர்வோடு எம்மைவிட்டுச் சென்று நிரந்தரமாகவே உறங்கி விட்டாயே!

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

காங்கேசன்துறை. - குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

## சந்திரபோஸ் நிர்மலன்

மண்ணில் 16.02.1984 விண்ணில் 23.11.2002

பொங்கிவரும் பெருநிலவாய் புன்னகையின்
இருப்பிடமான சந்திரனே! ஊர்போற்ற
வாழ்ந்து வந்தாய் சீர்பெற்று வாழ்வாய்
என்றிருந்தோம்!
மூவாறு வயதினிலே எங்கு நீ சென்றாயோ?
உன் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

*உன் பிரிவால் துயருறும்:*
அம்மா, அப்பா,
அன்ரி, சித்தப்பா,
மாமா, மாமி,
மச்சான்மார், சகோதரர்.

*த.தர்மராஜா*
*47, 5ஆம் குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.*

(11988)

# 18ஆம் வருட நினைவுப் பூக்கள்

மலர்வு 09 - 12 - 1959



உதிர்வு 22 - 12 - 1984

## அமரர் T.A.செல்வக்குமாரன் (கிச்சி)

(முன்னாள் ஆங்கில ஆசிரியர், மன்/நறுவிலிக் குளம் றோ.க.த.பா.)

பதினெட்டு ஆண்டுகள் கடந்தென்ன
பதினெட்டு நூற்றாண்டே சென்றாலும்
எம்மிதயம் கவர்ந்த புதுமலரே!
உம்மை மறவோம் இம்மண்ணில்
எட்டுத்திக்கும் ஒளிபரப்பும் அகல்விளக்காய் மலர்ந்தாயே!
புயல் விளக்கை அணைத்தாற் போல் காலனுனை அழைத்தானோ?
மண்ணில் நாமோ கதறிடவே நீயும் சென்றாயே சிவபதமே
மீண்டும் வரவேண்டும் எமைத்தேடி வேண்டும் விடிவு எமக்கெல்லாம்
உனக்காகவே நாம் காத்திருந்து கண்ணீர்த் துளியைக்
காணிக்கையாக்குகிறோம்.

(சி-95148)

உன்பிரிவால் வாடும்:
அம்மா, அக்காமார், அண்ணாமார்,
தம்பிமார், தங்கை, மைத்துனர்மார், மைத்துனி,
மருமக்கள்: சசிகலா, சர்மிளா,
செல்வக்குமார்; செந்தூரன்.

*வடக்குத் தெரு,*
*தொண்டமனாறு,*
*வி.எம்.றோட்,*
*பருத்தித்துறை.*

## வலி.கிழக்கில் கத்தரி, மிளகாய் தோட்டங்களில் வெள்ளம்

அரியாலை,டிசெ.22

கோப்பாய், நீர்வேலி பகுதிகளில் விவசாயிகளால் பயிர்செய்யப்பட்ட கத்தரி மற்றும் மிளகாய்ப் பயிர்கள் அழிவடையும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளன.

அண்மையில் பெய்த கடும்மழை காரணமாக பயிர்கள் இந்தப் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன என்றும் -

இதனாலேயே பயிர்கள் அழிவடையும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட இந்தப் பயிர்களை அழித்து அதே இடங்களில் புகையிலைச் செய்கையை மேற்கொள்வதற்கு விவசாயிகள் ஆயத்தம்செய்து வருவதையும் காணமுடிகிறது.(எ-17)

## இந்தியக் கலைஞரின் நாதஸ்வர இசை

யாழ்ப்பாணம்,டிச.22

மருதனார்மடம் சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை மாலை 5மணிக்கு தவில் கச்சேரி நடைபெறவுள்ளது.

இந்தியாவில் இருந்து வருகை தந்த கலைஞர்கள் இக்கச்சேரியில் பங்குபற்றவுள்ளனர். இந்திய தவில் வித்துவான் கலைமாமணி முத்துக்குமாரசுவாமி, தவில் வித்துவான் ஸ்ரீகாந் ஆகியோருடன் நாதஸ்வர இசையை கலாசூரி என்.கே.பத்மநாதனும், வித்துவான் கேதீஸ்வரனும் வழங்குவர். (எ-8)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.22

சங்கானை ஸ்தான அ.மி.த.க. பாடசாலை மற்றும் ஈவினை அ.த.க. பாடசாலை ஆகியவற்றுக்கு வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்பும் தகுதியானவர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை வலிகாமம் வலயக் கல்விப் பணிமனைக்கு அனுப்பிவைக்கலாம் என வலயக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.(எ-10)

## பல்கலை மாணவர் மீண்டும் வகுப்புகளை பகிஷ்கரிப்பர்

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் தமது வகுப்புகளை நாளை திங்கட்கிழமைமுதல் மீண்டும் பகிஷ்கரிக்கவுள்ளனர்.

ஏற்கனவே, தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக பத்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்த மாணவர்கள், பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வந்திருந்தனர். எனினும், நிர்வாகத்தின் சாதகமான பதிலையடுத்து மாணவர்கள் பகிஷ்கரிப்பைக் கைவிட்டனர்.

எனினும், தமது கோரிக்கைகள் தொடர்பாக யாழ்.பல்கலைக்கழகம் தொடர்ந்தும் அசமந்தப்போக்கையே கடைப்பிடித்து வருவதாகவும் -

இதனாலேயே தாம் மீண்டும் போராட்டத்தில் ஈடுபடப்போவதாகவும் -

பகிஷ்கரிப்பு தொடர்பாக பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு மாணவர் ஒன்றியம் அறிவித்திருப்பதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## வீடியோப் படக்காட்சி

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும்,திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப் படக்காட்சித் தொடரில் ரஷ்ய திரைப் படமான "லரீஷா" (Larrisa) என்னும் திரைப்படம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள் எவரும் கலந்து கொண்டு பயன்பெறலாம் என புறநிலைப் படிப்புகள் அலகின இணைப்பாளர் அறிவித்துள்ளார். (எ)


**SUBERA (14)**
சித்தன்கேணி

பௌதிகவியல்
திரு.வர்ணன்
2003 Paper Class
Sat. - Sun. 6-7a.m.
2004 மின்புலம்
Sat. - Sun. - 7-8a.m.
இணைந்த கணிதம்
திரு.பிரதீபன்
2003 Mon.-Tue.-Thu. 4-5
2004 Mon. - Tue.- Thu. 5-6

(C/25459)


# கண்ணீர் அஞ்சலி

எமது தொழில்சார் கற்கை நெறிகள் (IPAS) நிறுவனத்தின் இயக்குநரும், விரிவுரையாளருமான

**திரு.வேதிங்டன் சில்வெஸ்ரர்**

அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி றோஸ் சில்வெஸ்ரர் (நவமணி)

அவர்கள் (19-12-2002) காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

***IPAS***
*இல.199, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(12054)

இயக்குநர்கள்,
விரிவுரையாளர்கள்,
மாணவர்கள்.

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 09 - 08 - 1943



ஆண்டவன் அடியில் 22 - 12 - 1999

## திருமதி நாகராஜா இமல்டா அல்வீனம்மா

(லக்கிளி)

ஆண்டுகள் மூன்று மறைந்தாலும் உங்கள்
நினைவுகள் மட்டும் மறையவே மறையாது!
இங்கு தினமும் உங்களை நினைந்தே
கவலையுடன் கலங்கித் தவிக்கின்றோம்.
ஓம் சாந்தி!

பொன்னாலை வீதி,
மானிப்பாய்.

(12007)

பிரிவால் வாடும்:
கணவர், மகள் (கௌரி).

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 25 - 10 - 1948



விண்ணில் 02 - 01 - 2002

## அமரர் ஆசைப்பிள்ளை தங்கவேல்

(திதி: 22-12-2002)

இன்று (22-12-2002) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் மதியபோசன வைபவத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(12028)

- குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



## செல்வி சுஜாதா பரராசசிங்கம்

(ஆசிரியை - கொ/ஹமீட் அல்ஹுசைனியா ம.வி.)

தேசிய கல்வியியற் கல்லூரி தன்னில்
தேசுடையாய்! வவுனியாக் கல்லூரி உன்னால்
பொலிவுற்றது! பொலிந்ததடி பொன்னே - உன்னைப்
பொங்கிவரும் பெருநிலவாய்க் கண்டோம்; புதுமலராய்க்
கண்டோம். வாழ்வின் வசந்தத்தால் மகிழ்வுறுவாய்
கன்னலே யுன்மொழியால் வாழ்விப்பாயென நாம்
காத்திருந்த வேளையிலே ஏன் பறந்து போனாயோ?
ஒத்துதற்குரியாளே! என்றும் நாம் மறவோமே!

*இவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

ஆசிரிய நண்பர்கள்
(வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி
நான்காம் அணியினர்)

(12048)

BANK OF CEYLON இலங்கை வங்கி

# பிரச்சினைகள் இருக்குமாயின் கூட்டிற்கு வாருங்கள்



**மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களுக்கு மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கும்**

- தேவையான விபரங்களை விரைவாகப் பெறலாம்.
- **NRFC** கணக்கு உட்பட ஏனைய கணக்குகள் பற்றிய விபரங்கள்
- இலங்கைக்கு காசு அனுப்பும் முறைகள் பற்றிய விபரங்கள்
- கணக்குகளை ஆரம்பிப்பது பற்றிய விபரங்கள்
- வெளிநாட்டிலிருந்து வீட்டிற்கு காசு அனுப்பும் போது தேர்ந்தெடுக்க வேண்டிய வங்கி அல்லது நிதி நிறுவனங்கள் பற்றிய விபரங்கள்
- மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும் இலங்கை வங்கியின் பிரதிநிதிகள் பற்றிய விபரங்கள்.

தொலைபேசி : 447831, 346841
ஃபெக்ஸ் : 541439, 447171

PHOENIX O&M

NRFC

*இலங்கை வங்கிக்கு வெளிநாடுகளில் 5 கிளைகளும் 1500 தொடர்புடைய வங்கிகளும் இலங்கையில் 291 கிளைகளும் இருக்கின்றன.*

சிகரத்தைத் தொட

# விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள மரம் அரிவு சக்கரவாள் பட்டறை விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: மா.கிருஸ்ணர் (அன்ரி அப்பா)
பட்டனசபை வீதி, சங்கானை. (சி-25519)

# இந்திய ஜோதிடர் யாழ்.விஜயம்

ஸ்ரீ சோடா நிகரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப் பெற்ற இந்தியப் பரம்பரை ஜோதிடர் யாழ்.வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத்தடையா? தொழிற்பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம் மூலம் தீர்வுகாணலாம்.

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!

**மணிசாமி P.T.R.**

யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி.
இல. 54, மனிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில்).
பார்வையிடும் நேரம்: காலை 9.00 மணிமுதல் மாலை 4.00மணிவரை
(வியாழக்கிழமைகளில் விடுமுறை) (12029)


# 28 ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 16 - 03 - 1927



விண்ணில் 22 - 12 - 1974

## திருமதி கனகாம்பிகை சபாரத்தினம்

அன்னையே உனை இழந்து
ஆண்டு பல சென்றாலும்
அழகான காவியமாய் - எம்
அழ் மனதில் வாழ்கின்றாய்!
கண்ணை இமை தொலைத்தது போல்
கால மெல்லாம் தவித்தாலும்
கலையாத ஓவியமாய் - எம்
கருத்தில் என்றும் நிலைக்கின்றாய்!

- குடும்பத்தினர்.

நிரந்தர முகவரி:
'திலகவாசம்',
தாலை வீதி,
சாவகச்சேரி.

(12063)

தற்காலிக முகவரி:
பாரதி வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.





அன்பு மாணவ/மாணவிகளுக்கு

தாங்களின் வருங்காலம் சுபீட்சமாகவும் ஒளிமயமாகவும் விளங்க வேண்டும் என்பது எமது கல்வி நிறுவனக் குறிக்கோளில் ஒன்றாகும். அதுவே,

**BRIGHT FUTURE IN YOUR HAND**
**சுபீட்சமான எதிர்காலம் உங்கள் கைகளில்**

எமது தாரக மந்திரமாகும்.

நீங்கள் சுயமாகச் செய்யக்கூடிய ஒரு வேலைக்கான பயிற்சியை வழங்குவதன் மூலம் ஒரு தொழில்நுட்ப பாடநெறியாக மாணவ சமூகத்திற்கு முன்பள்ளி - ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் திட்டத்தை சிங்கப்பூர்கல்வி நிறுவனமான *CREATIVE MIND ENRICHMENT PROGRAMME* உடன் இணைந்து அமுல்படுத்துகின்றோம். இந்நெறியை ஆங்கில/தமிழ் மொழிகளில் க.பொ.த. சாதாரணதரம் சித்தியடைந்தவர் பயிலமுடியும்.

- நீங்களே முன் - பள்ளி ஆசிரியராகலாம். அல்லது
- முன்-பள்ளி நிறுவனங்களில் எமது நிறுவன

**DIPLOMA IN NURSERY TEACHER TRAINING**
சான்றிதழ்கள் உடன் ஆசிரியர் தொழிலை மேற்கொள்ளலாம்

- பாடநெறிகள் பாலர்களுடன் எவ்வாறு பழகுதல், அவர்களை கையாளுதல், அவர்களுடன் விருப்புக்கு இசைவுபட விளையாட்டு ஊடாக பாடம் புகட்டல் என்பன அனைத்தும் பாடநெறியில் அடக்கப்படும்.
- பாலர்களுக்கான செயல்முறை
  ஆக்கத்திறன் பயிற்சி - Activity Based Oral English
  பாலர் - பாலபோதினி - படம் கீறும் அனுபவம்
  பாலர் கணிதம் என்பனவும் இப்பாடத்திட்டத்தில் அடங்கும்.

*மேலதிக விவரங்களுக்கு முத்திரையொட்டிய சுயவிலாசமிட்ட தபாலுறையுடன் விண்ணப்பப்படிவத்தையும் இணைத்து தொடர்புகொள்க.*

பெயர்: ..............................
விலாசம்: ..............................
விரும்பும் துறை: ..............................

**Bright Book Centre (Pvt) Ltd.**
*S-27 FIRST FLOOR, C.C.S.M. COMPLEX P.O.BOX 162,*
*COLOMBO - 11.* Tel.: 434770 Fax: 333279
(11899)


# கலை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,டிசெ.22

வண்ணார்பண்ணை இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை ஒட்டி பழைய மாணவர்கள் நடத்தும் கலை நிகழ்வுகள் இன்று காலை 9.30 மணிமுதல் வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.(ஐ-10)

# பொன்னாலைப் பகுதிக்கு அதிகாரிகள் விஜயம்

வட்டுக்கோட்டை,டிசெ.22

பொன்னாலைப் பகுதியில் மீளக் குடியமரக் கோரி பொன்னாலை மக்கள் ஒன்றியத்தினால் அரச அதிபருக்கு வழங்கப்பட்ட மகஜரைத் தொடர்ந்து அரச அதிபரின் பணிப்பின்பெயரில் யாழ்.செயலக அதிகாரிகள் அப்பகுதிக்கு நேரடியாக விஜயம் செய்து நிலைமைகளைப் பார்வையிட்டனர். (ஐ-ரி)

# தடைகள் அகற்றப்படவில்லை

வட்டுக்கோட்டை,டிசெ.22

வட்டுக்கோட்டை மாவடிச் சந்திக்கு அண்மையிலுள்ள இராணுவ முகாமிற்கு முன்னால் போடப்பட்ட பரல்கள், பணங்குற்றிகள் போன்ற தடைகள் இன்னும் அகற்றப்படாமல் இருப்பது தொடர்பாக மக்கள் விசனமடைந்துள்ளனர்.

இது தொடர்பாக கடந்த மூன்று மாதங்களுக்கு முன் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது தெரிந்ததே. (ஐ-ரி)

# சாயி சமித்தியில் நத்தார் விழா

யாழ்ப்பாணம்,டிசெ.22

யாழ்.பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 3.00மணி தொடக்கம் நத்தார் விழா நிகழ்ச்சிகள் நடைபெறும். அன்று நத்தார் கீதங்கள், சிறுவர் நாடகம், அருட் தந்தை எஸ்.ஜே.இராஜநாயகத்தின் விசேட ஆன் மீகச் சொற்பொழிவு என்பன இடம்பெறும். (ஐ)

# திருவாசக முற்றோதல்

வட்டுக்கோட்டை,,டிசெ.22

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கன்னகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு திருவாச முற்றோதல் நிகழ்வு ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளது. (ஐ-ரி)

# ஆசிரியர் தரங்கணிப்பு அறிவுறுத்தல் கூட்டம்

மண்டைதீவு,டிசெ.22

வேலணைக் கல்விக்கோட்டத்தின் அதிபர், ஆசிரியர்களுக்கான "ஆசிரியர் செயலாற்றுகை தரங்கணிப்புச் செயல்முறை" தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் குடும்பப் பாடசாலை ரீதியாக நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் தரங்கணிப்பு அடுத்த ஆண்டில் முழுவீச்சில் அமுல்படுத்தப்பட இருப்பதால் சகல பாடசாலைகளினதும் அதிபர், ஆசிரியர்கள் இதில் தவறாது பங்குகொள்ளவேண்டும் என்று வேலணைக் கல்விக் கோட்ட அதிகாரி தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவுப் பாடசாலைகளுக்கான கூட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்திலும் -

நயினாதீவுப் பாடசாலைகளுக்கான கருத்தரங்கு 30ஆம் திகதி நயினாதீவு மகாவித்தியாலயத்திலும் -

வேலணை, சரவணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவுப் பாடசாலைகளுக்கான செயலமர்வு 31ஆம் திகதி வேலணை சரஸ்வதி வித்தியாலயத்திலும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-88)


DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI

# SALE SALE SALE

**CHRISTMAS, NEW YEAR SALE**

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு

DSI பாதணிகள் மலிவு விற்பனை

10% முதல் 40% வரை
விசேட கழிவு

DSI மலிவு விற்பனை நிலையம்
(பூபாலசிங்கம் புத்தகசாலை முன்பாக)

224, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (C/25478)

DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI


# கண்ணீர் அஞ்சலி

IPAS நிறுவன நிர்வாகி
திரு.வேதிங்டன் சில்வெஸ்டர்
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி றோஸ் சில்வெஸ்டர் (நவமணி)

அவர்கள் காலமாகியதையிட்டு, நாங்கள் துயருறுவதுடன் அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி அவரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

(12062) IPAS மாணவர்கள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு 10 - 12 - 1975



இறப்பு 22 - 11 - 2002

## திருமதி சத்தியலிங்கம் பத்மமாலினி

(கோவளம், காரைநகர்)

*அன்பின் மகளே சகோதரியே*
*அல்லும் பகலும் எங்கள் சிந்தனையுடன்*
*எங்களுக்காக பாடுபட்டு குடும்பத்தின்*
*ஒளிவிளக்காக இருந்து பொல்லாத*
*வேளையிலே வந்தான் காலவன் நோய்*
*வடிவில் எங்களுக்கு ஆறுதல் வார்த்தை*
*கூடச் சொல்லாது உனது கணவனையும்*
*செல்லக்கிளியையும் விட்டு விட்டு*
*ஓடி மறைந்தாயோ?*

எந்நேரமும் உனது நினைவால் வாடுகின்றோம்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து உதவிகள் புரிந்தோருக்கும், தொலைபேசிமூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், இறுதிக் கிரியைகளில் தோளோடு தோள் நின்று உதவி புரிந்தோருக்கும் எமது குடும்பத்தின சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இன்று (22.12.2002) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு பிரான்ஸில் நினைவஞ்சலியும், வீட்டுக்கிருத்தியமும் நடைபெறும்.

ஓம் சாந்தி சாந்தி!! சாந்தி!!!

தகவல்: க.பத்மநாதன்,
92, உடையார் லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

உம் பிரிவால் துயருறும்:
அப்பா, சகோதரர்கள்.

(12059)


கபிலா கபிலா கபிலா கபிலா கபிலா கபிலா கபிலா கபிலா

# இலவசம்! இலவசம்!! இலவசம்!!!

மாணவர்களுக்குரிய.........

கறுப்பு, வெள்ளை சப்பாத்து 'D.S.I.' ஒன்றிற்கு 'D.S.I.' றபர் சிலிப்பர் ஒன்று இலவசம். நீங்களும் பெற்றுக்கொள்ள...... முந்துங்கள்!!!

BATA D.S.I.

# கபிலா காலணியகம்

**KABILA SHOE PALACE**

24, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

☞ இச்சலுகை நத்தார் பண்டிகைக்கு மட்டுமே! (சி-25507)

கபிலா கபிலா கபிலா கபிலா கபிலா கபிலா கபிலா

# மாணவர்களை அரசியல் நோக்கங்களுக்கு பயன்படுத்துவது சிறுவர் துஷ்பிரயோகமே!

## யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு அறிக்கை

யாழ்ப்பாண்,டிசெ.22

பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் போன்றவற்றிற்கு கல்வி கற்கச் செல்லும் மாணவர்களை கல்விகற்க விடவேண்டும். அதை விடுத்து வயதுவந்த பெரியோர்கள் தமது அரசியல் நோக்கங்களுக்கு மாணவர்களை உபயோகிப்பது சிறுவர் துஷ்பிரயோகம் என்றே கருதவேண்டும்.

யாழ்.மாவட்ட சிறுவர் உரிமைகள் பாதுகாப்புக் குழுவினர் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவர் பாதுகாப்புத் தொடர்பாக யாழ்.மாவட்ட நிலைமையை 'சிறுவர் உரிமையும் முற்போக்கு அம்சங்களும்' என்ற தலைப்பில் விளக்கி பாதுகாப்புக் குழு விடுத்திருக்கும் அறிக்கையின் முழு விவரமும் வருமாறு:-

மாறிவரும் சமாதானச் சூழ்நிலையில் சிறுவர் உரிமையும் அவை தொடர்பான சில முற்போக்கு அம்சங்களும் முக்கியம் பெற்றனவாக உள்ளன. சிறுவர் உரிமை தொடர்பாக அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் பல யாழ்ப்பாணத்தில் செயலாற்றி வருகின்றன. அண்மைக் காலத்தில் நடைபெற்ற பல சம்பவங்களைக் கருத்திற்கொண்டு இந்நிறுவனங்களில் பணியாற்றுகின்றவர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும், சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான அவர்களது கடமைகளைச் சுட்டிக்காட்டி, ஆட்சேபனையை வெளியிட்டு, அறிவுரை கூறவேண்டியதும், விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டியதுமான ஒரு கட்டாய தேவையை யாழ்ப்பாண மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு கொண்டுள்ளது.

சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்படுகின்ற சிறுவர்களின் விடயத்தில் பொலீஸாரின் நடவடிக்கைகள் கவலைக்கும், மனவேதனைக்கும் உரியதாகும். சிறுவர்களுக்கு விலங்கிடுதல், குற்றவாளிகளுக்கான பொதுச் சிறைச்சாலையில் சிறைவைத்தல், பலாத்காரப்படுத்தல், தகாத வார்த்தைகளால் திட்டுதல், தாக்குதல் போன்ற விடயங்கள் முழுதாகக் கைவிடப்படவேண்டியனவாகும். சிறுவர்களின் உரிமைகளை மீறும் செயல்கள், சர்வதேச ரீதியாகவும் இலங்கையால் ஏற்கப்பட்ட சிறுவர் உரிமை கோவைக்கு (Convention on the Rights of the Child) முரணானது. மிக மோசமான பொலீஸ் கொடூரமாக (Police Brutality), பயங்கரவாதமாக அமைகின்றது. இவ்வாறான செயற்பாடுகள் மேலும் வன்முறைகளைத் தூண்டுமே தவிர அவற்றை அடக்கா. தேசத்தின் பாதுகாவலர்கள் என்ற வகையில் சிறுவர்களது உரிமை தொடர்பாகக் கருத்திற்கொள்ளவேண்டிய கடமை அவர்களுக்கு உண்டு. ஆனால், இன்று இவற்றுக்கு முரணான வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதனால் அவர்களது நிலைப்பாட்டில் இன்றும் மாற்றமில்லை என்ற சந்தேகத்தைத் தந்துள்ளது. ஆகவே, இந்நிலையை மாற்றி சிறுவர்களை விசாரணை செய்யும்போது அவர்களின் உரிமையை மதித்து விசாரணை செய்யவேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம். குறிப்பாக சிறுவர் சம்பந்தமாக நியமிக்கப்பட்ட, பயிற்றுவிக்கப்பட்ட, பெண் பொலீஸ் உத்தியோகத்தர்(Women & Child Desk) வரவழைக்கப்பட்டு, அச்சிறுவர்கள் அவரிடம் ஒப்படைக்கப்படவேண்டும்.

இதற்கப்பால் எமது சமுதாயமும் சமூக நிறுவனங்களும் சிறுவர் உரிமை தொடர்பாக சிந்திப்பதுடன் சிறுவர்களினை நல்வழிப்படுத்தும் அளப்பரிய பொறுப்புக்கு உட்பட்டது. அந்த வகையில் தற்போதைய சமாதானச் சூழ்நிலையில் சிறுவர்களை அரசியல்சார் விடயங்களில் ஈடுபடுத்தாது, சுயமாகச் சிந்திக்கவும் ஒரு புதிய பாதையை ஏற்படுத்தவும் வேண்டிய தேவை எங்கள் ஒவ்வொருவருக்கும் உரியது. குறிப்பாக பாடசாலை, தனியார் கல்வி நிறுவனங்கள்(Tutories) போன்றவற்றிற்கு கல்வி கற்கப்போகும் மாணவர்களை கல்விகற்கவிடவேண்டும் அதைவிடுத்து வயதுவந்த பெரியோர், தமது அரசியல் நோக்கங்களுக்கு மாணவர்களை உபயோகிப்பது சிறுவர் துஷ்பிரயோகம் என்றே கருதவேண்டும். இதனால் சிறுவர்கள் பாரதூரமான ஆபத்துக்களை எதிர்நோக்கவேண்டி நேரிடலாம். சிறுவர்கள் தொடர்பான பிரச்சினைகள், ஒரு சமூக மட்டத்தில் நோக்கப்படவேண்டியதாகும். எனவே, சமுதாயத்தில் இயங்கும் சமூக நிறுவனங்கள் பொறுப்புடன் இயங்கவேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அவ்வாறு இருக்கும் பட்சத்தில்தான் சிறுவர்கள் உரிமை பற்றிப் பேசமுடியும்.

ஓர் ஆரோக்கியமான சமூகம் என்பது அச்சமுதாயத்தில் வாழுகின்ற தனிமனிதனும் குடும்பங்களும் சமூக நிறுவனங்களும் தம்மிடையே ஒத்திசைவு காணுதலாகும். இம்மூவரிடமும் ஒத்திசைவு காணும்போதுதான் இன்றைய சமூகத்தின் முக்கிய விடயமாக விளங்கும் சிறுவர் உரிமை தொடர்பாகப் பேசமுடியும். எமது நாட்டின் மூன்றில் ஒரு பங்காக இருக்கும் சிறார்களை சரியான வழிமுறையோடு பாதுகாக்கவேண்டிய தேவை எமக்குள்ளது. இவ்வகையிலே சிறார்கள் சிறந்த கல்வியைப் பெறுதல், நல்லபெயரோடு வளர்தல், நல்ல தேக ஆரோக்கியத்துடனும் நல்ல உடல் நலத்துடனும் வாழத் தன்னைத்தானே தயார்படுத்துதல், தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்துதல், நல்ல நண்பர்களைப் பெறுதல், பெற்றோரின் அன்பையும் பாதுகாப்பையும் பெறல் போன்ற பல உரிமைகளை சிறுவர்களிடத்தில் சரியான முறையில் பேணுதல் வேண்டும்.

எனவே, சிறுவர்களுடைய உரிமையிலும் அவர்கள் தொடர்பான விடயங்களிலும் நாம் பூரண அக்கறை கொள்வது அவசியமானதாகும். இவ்வகையில் தனிமனிதனும், சமூகமும், சமூக நிறுவனங்களும் சிறுவர்களது உரிமைகள் தொடர்பாக அக்கறை கொள்ளும்போதுதான் மாறி வரும் சமாதான சூழ்நிலையில் சிறுவர்களது உரிமைகள் வென்றெடுக்கப்படும் என மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவினராகிய நாம் நம்புவதுடன் உரிமைகளை வென்றெடுக்க அனைவரையும் வேண்டிநிற்கின்றோம்.'

- இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ-86)

## மீளக்குடியமர்ந்தோர் வெள்ளத்தால் பாதிப்பு!

தென்மராட்சி,டிசெ.22

அண்மையில் பெய்த கடும் மழையினால் பச்சிலைப்பள்ளிப் பகுதியில் மாசார், சோரன்பற்று, கோவில்வயல் போன்ற இடங்களில் ஏற்பட்ட வெள்ளத்தினால் அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர்.

அண்மையில் மீளக்குடியமர்ந்த மக்கள் அமைத்த வீடுகள் வெள்ளத்தில் சாய்ந்து காணப்படுகின்றன.

மாசார் அ.த.க. பாடசாலை, சோரன்பற்று சீ.சீ.த.க. பாடசாலை, சோரன்பற்று கணேச மகாவித்தியாலயம் ஆகியவற்றில் அமைக்கப்பட்ட தற்காலிக வகுப்பறைக் கொட்டகைகள் வெள்ளம் நிறைந்து காணப்படுவதால் தளபாடங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

(ஐ-117)

## பருவமழைக் காலம் நீடிப்பதால்

## தொற்றுநோய்கள் பரவும் ஆபத்து: தமிழீழ சுகாதார சேவை அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,டிசெ.22

பருவமழை நீடிப்பதை அடுத்து தொற்றுநோய்கள் பரவும் ஆபத்து எழுந்துள்ளது. எனவே, அது குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது தமிழீழ சுகாதார சேவைகள் நடுவப் பணியகம்.

இது தொடர்பாக சுகாதார சேவைகள் நடுவப் பணியகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழை காரணமாக கிணறுகள், குளங்கள் நிரம்பி வழிகின்றன. இவ்வேளையில் நெருப்புக் காய்ச்சல், வயிற்றோட்டம், வாந்திபேதி, செங்கண் மாரி போன்ற கொடிய தொற்று நோய்களின் தாக்கத்துக்கு ஆளாக வேண்டியுள்ளீர்கள். எனவே, கீழ்வரும் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடித்துக் கொள்ளுமாறு தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுக்கொள்கின்றனர்.

★ குடிப்பதற்கு கொதித்தாறிய நீரை பாதுகாப்பான முறையில் பாவியுங்கள்.

★ மலத்தை பாதுகாப்பான முறையில் கழியுங்கள். குழந்தைகளின் மலத்தையும் பாதுகாப்பாக அகற்றுங்கள்.

★ உணவு சமைக்குமுன்பும், பரிமாற முன்பும், உண்ண முன்பும், மலசலகூடம் சென்றுவந்த பின்பும், குழந்தைகளுக்கு ஊட்டமுன்பும் கைகளுக்கு சவர்க்காரம் போட்டுக் கழுவுங்கள்.

★ உணவுகளை இலையான் தாக்கமின்றி மூடிப்பாதுகாத்து உண்பதுடன் உண்ணும் வேளைகளில் சூடான நிலைகளில் உண்ணுங்கள்.

★ வீதியோரங்களில் திறந்த நிலைகளில் விற்பனை செய்யப்படும் உணவு, குளிர்பானங்கள் போன்றவற்றை வாங்கியுண்ணாதீர்கள்.

★ உணவு, தேநீர், குளிர்பான நிலையங்களில் பணிபுரிவோர் சுகாதார நடைமுறைகளினை இறுக்கமாக கடைப்பிடிப்பதுடன் இக்காலப்பகுதியில் கொதித்தாறிய நீரை மட்டும் நுகர்வோருக்கு வழங்குங்கள்.

★ நோய் கண்டவுடன் தகுந்த வைத்தியரின் ஆலோசனையுடன் பூரண சிகிச்சை பெறுங்கள்

- என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

## ஆலய நிர்மாணத்துக்கு நிதியில்லை கல்வி வளர்ச்சிக்கே உதவமுடியும்

## ஆதரவாளர்கள் மத்தியில் ஆனந்தசங்கரி எம்.பி.

வலி.வடக்கு,டிசெ.22

ஆரம்பக் கல்விச் சிறார்களின் கல்வி மேம்பாட்டுக்கு மட்டுமே பன்முகப்படுத்திய நிதியிலிருந்து நாம் பணம் ஒதுக்கமுடியும்.

ஆலய அபிவிருத்தி மற்றும் பாரிய திட்டங்களுக்கு வழங்கக்கூடியளவு நிதி எம்மிடம் இல்லை.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் யாழ்.மாவட்ட எம்.பி. வீ.ஆனந்தசங்கரி.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவாளர்களுக்கான கலந்துரையாடல் கடந்த வியாழனன்று யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள தந்தை செல்வா அகத்தில் இ.முத்துலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது மக்களின் தேவைகள் பல நிறைவேற்றப்பட வேண்டிய நிலையில் உள்ளன. ஆனால், பன்முகப்படுத்தப்பட்ட நிதியின்கீழ் வழங்கப்படும் நிதி, ஒரு சிறு பகுதியைக் கூடப் பூர்த்திசெய்யப் போதுமானவை அல்ல. இந்நிலையில் பெருந்தொகைப் பணம் கேட்டுவருபவர்களுக்கு என்னால் எதுவும் செய்யமுடியாது.

இன்று ஆலயங்கள் பலவும் பாலஸ்தாபனம் செய்யப்பட்டுள்ளன. அத்தகைய ஆலயங்களுக்கு நிதிகேட்டு வருபவர்களுக்குக்கூட என்னால் நிதி வழங்கமுடிவதில்லை.

கடந்த அரசின் காலத்தில் அரைகுறையாக நிதியுதவி வழங்கப்பட்ட ஆலயங்களுக்கு இம்முறை நிதிவழங்கப்பட வேண்டும் என இந்து கலாசார அமைச்சின் விவாதத்தின்போது எடுத்துக்கூறியுள்ளேன்.

தற்போது எனக்குக் கிடைத்த நிதியை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்தி முன்பள்ளிச் சிறார்களின் கல்விக்கு உதவி வருகின்றேன்.

தற்போது இங்குள்ள பாடசாலைகள், வீதிகள், மின்சாரம் போன்ற அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு பல வெளிநாட்டு நிறுவனங்கள் முன்வந்து செயற்பட்டு வருகின்றன.

வீதிகளில் அமைந்துள்ள பாலங்களைக் கட்டிக்கொடுப்பதற்கு ஒரு நாடு முன்வந்துள்ளது. அத்தகைய பாலங்கள் திருத்தவேண்டுமாகவிருந்தால் அதுபற்றிய விவரங்களுடன் என்னைத் தொடர்புகொண்டால் நான் அதற்கு வேண்டிய முன்முயற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும்.

தற்போது இங்கு வேலையில்லாப் பிரச்சினையும் பெரும் பிரச்சினையாகவுள்ளது. சிறிய கைத்தொழில் முயற்சிகளுக்கான திட்டங்களை எனக்குத் தந்தால் அத்தகைய திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமகாராசா தனது உரையில்-

வலி.வடக்குப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர பல ஆண்டுகளாகத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. வன்னிக்குச் சென்ற மக்கள் மீண்டும் யாழ்ப்பாணம் வந்து மீளக்குடியமரத் தொடங்கியுள்ளனர். இந்நிலையில், பலர் வசிப்பதற்கு வீடுகள் இல்லாது அலைந்து திரியவேண்டிய அவல நிலை, ஏற்பட்டுள்ளது.

- இவ்வாறு இருப்பிடமின்றி அல்லற்படும் மக்களின் இருப்பிட வசதிகள் சம்பந்தமான விவகாரத்தில் எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூடிய கவனம் செலுத்தவேண்டும். இதேபோன்று இன்னும் பல பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படாத நிலைமையும் காணப்படுகின்றது. அதனையும் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (எ-86)

## உறவுகளைப் பலப்படுத்தி உன்னத வாழ்வு பெறுவோம்

படைப்பின் தொடக்கத்திலேயே மனிதன் தனித்திருப்பது நல்லது அல்ல என்று ஆதி ஆகம ஆசிரியர் எமக்கு மிகவும் தெளிவாகவும் விரிவாகவும் எடுத்துக்காட்டியுள்ளார். மனிதன் ஒரு தனித்தீவு அல்ல; அவன் ஒரு சமூகப்பிராணி. மனிதன் சமூகமாக வாழ அழைக்கப்பட்டவன். தனித்தியங்க முற்பட்ட எந்த மனிதனும் வரலாற்றில் இடம்பிடித்துக்கொண்டதாக சரித்திரம் இல்லை. இதனால், அவன் மற்றவர்களோடு இணைந்து வாழ கடப்பாடு உடையவனாகின்றான். உறவுகளை வளர்க்கவும், வளர்த்த உறவுகளை பாதுகாக்கவும் அழைக்கப்பட்டிருக்கின்றான். தனிமரம் காடாகிவிட முடியாது. தனி மனிதன் சமூகமாகிவிட முடியாது. ஆகவே, உறவுகள் வளர்க்கப்படவேண்டியது இன்றைய சமூகத்தின் ஓர் இன்றியமையாத தன்மையாக மாறிவிட்டது.

ஆனால், நாம் பார்ப்பது என்ன? எமது அன்றாட வாழ்க்கையில் நாம் கேட்பது என்ன? கருவறையில் கவலையின்றி கண்மூடிக்கிடந்த மனிதன், தரையில் விழுந்ததும் கண் தூக்கம் தொலைத்து அதைத் தேடித் தேடி அலைந்து திரிவதன் மர்மம் என்ன? காரணம் வேறெதுவும் இல்லை. மாறாக, பரிவுகளும் பிளவுகளும்

### ஞாயிறு நற்பிரசாதம்

மனித மனங்களிலே மஞ்சம் கொண்டு விட்டதாலேயே, உறவுகள் பல உடைக்கப்பட்டுக்கொண்டிருப்பதாலேயே.

மனிதன் தனக்குத்தானே ஏற்படுத்திக் கொண்ட சாதி, சமய, மொழி, கலாசாரத்தால் ஏற்படும் பிரிவுகளும் பிளவுகளும் அதிகரித்து விட்டன. வீட்டினுள்ளே பிளவுகள், வெளியினிலும் அவ்வாறே. வீட்டில் உறவுகள் இருந்தால்தானே வெளியிலும் அவை வளர்க்கப்படும். மனிதன் இறைவனோடு உள்ள உறவை முறிக்கும்போது மனித சமுதாயத்தோடு உள்ள உறவையும் முறித்துவிடுகின்றான். இதை மிகவும் தெளிவான முறையில் காயின் ஆபேலின் கதை எமக்கு கூறி நிற்கின்றது. இறைவனோடு தன் உறவை முறித்துக்கொண்டான். தன் தம்பியின் உறவிலிருந்து பிரிந்தான். நாடோடியாக வாழத்தொடங்கினான்

ஆம், உறவோடு வாழும் உள்ளங்கள் நடுவிலேதான் தெய்வம் தரிசனமாகும். பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகின்றேன் என்னும் எம்பெருமான் இயேசுவின் கூற்றுக்கிணங்க முறிந்த உறவுகளைக் கட்டியெழுப்புவோம்; முறிக்கப்பட்ட உறவுகளுக்குப் பாலங்களாக அமைவோம்; ஊதாரி மைந்தர்களாய் ஏற்றுக்கொள்ளும் எம் தந்தையிடம் திரும்பிச் செல்வோம்; உறவோடும் இறைவனோடு உறவு கொள்வோம்; அந்த உறவின் நிறைவில் சமூக உறவுகளை கட்டியெழுப்புவோம்; புதிய வானகமும் புதிய வையகமும் படைப்போம்.

ஏ.சி.இன்பநாதன்.

சங்கானை ஆஸ்பத்திரி 'வார்ட்டு'க்களில்

# போதிய கட்டில் வசதி இல்லை நோயாளர்கள் விறாந்தைகளில்!

சண்டிலிப்பாய்,டிசெ.22

சங்கானை அரசினர் சுற்றியல் கூறு வைத்தியசாலையில் சிகிச்சை பெறவரும் நோயாளர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துவருகின்றது.

வெளிநோயாளர் பிரிவில் தினமும் 300க்கும் அதிகமான நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது.

இங்குள்ள ஆண், பெண் வார்ட்டுகளிலும் அதிகமானவர்கள் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது.

வார்ட்டுகளில் கட்டில்கள் போதியதாக இல்லாததை அடுத்து நிலத்திலும் விறாந்தைகளிலும் பல நோயாளர்கள் பாய்களில் படுக்கவிடப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றனர்.

இதேவேளை - பிரசவ வார்ட்டிலும் பலர் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் புதிதாக நிறுவப்பட்ட ஆண், பெண் வார்ட்டுகளும் பிரசவ விடுதியும் நீண்ட காலமாக திறந்து இயங்காத நிலையில் இருந்து வருவதால் பண்டத்தரிப்பு, மாதகல், பிரான்பற்று, வடலியடைப்பு, பெரிய விளான், சில்லாலை ஆகிய இடங்களிலுள்ள மக்களும் வைத்திய சிகிச்சைக்காகவும் குழந்தைப் பிரசவத்திற்காகவும் சங்கானை அரசினர் வைத்தியசாலையை நாடிச்செல்லுகின்றனர்.

இவ்வைத்தியசாலைக்கு அளவுக்கதிகமான நோயாளர்கள் வருவதற்கு இதுவும் ஒரு காரணம் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியசாலையிலும் முழுநேரமும் கடமைபுரியக் கூடிய நிரந்தர டாக்டர் எவரும் இல்லாத காரணத்தினால் அப்பகுதி நோயாளர்களும் சங்கானை அரசினர் வைத்தியசாலையையே நாடிச்செல்கின்றனர். அளவுக்கதிகமான நோயாளர்கள் சிகிச்சை பெற வருகின்ற இவ்வேளையில் இங்கு கடமை புரிந்து வரும் டாக்டர்களும், ஊழியர்களும் சேவை மனப்பான்மையுடன் தமது வேலைப் பளுவையும் பொருட்படுத்தாது நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கிவருவதாக பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இவ்வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தர்களுக்கு பற்றாக்குறை நிலவி வருவதாகவும் தெரிய வருகின்றது. (எ-135)

## நூல் வெளியீடு

'திருவாதவூரடிகள் புராண சிந்தனம்' நூல் வெளியீட்டுவிழா இன்று பிற்பகல் 3 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ-10)


கதியால் நட்டு
வேலி அடைத்த காலம்
அந்தக்காலம்



கனனியால் வடிவமைத்த
கம்பி வலையுடன்
வேலி அடைப்பது
இந்தக்காலம்

நீண்டகால பாவனை
துருப்பிடிக்காது
நேர்த்தியான வடிவமைப்பு
உறுதியானது
உங்களுக்குத் தேவையான அளவுகளில்

கோவில், பாடசாலை, தோட்டங்கள், மைதானம், வயல்கள், வீட்டு வளவுகள்

விசேட அறிமுக விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

(C/25560)

லக்ஷ்மி விநியோகஸ்தர்கள்
இல.253, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரீதர் தியேட்டர் அருகில்)

## விற்பனைக்கு

தனிப்பாவனையில் உள்ள C-90 சிவப்பு நிறமுடைய மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :
No.27, புகையிரத வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(12096)

## அன்பளிப்புக் கலண்டர்

புதிய வருடக் கலண்டர்களில் உங்கள் ஸ்தாபனப் பெயர் விவரங்களை கணனி எழுத்தமைப்பில் அச்சுப்பதிப்புச் செய்து வழங்குகிறோம்.

கலண்டர் + பதிப்பு - ரூ 14/-
பதிப்பு மட்டும் - ரூ 3/-

தூரிகை
M.M.V.றோட், நெல்லியடி.
செங்குந்தா வீதி,
கல்வியங்காடு.
(12084)

## என்றும் உங்கள் நண்பன் பஜாஜ்

பஜாஜ் புத்தம்புதிய மோட்டார் சைக்கிள்கள்

★ பல்சர் (PULSAR 150 C.C) செல்வ் ஸ்ராட்
★ கலிபர் குறோமா
★ கலிபர்
★ பொக்சர் டிலக்ஸ்
★ பொக்சர் A.T.
★ M-80 4 ஸ்ரோக் (மேஜர்)
★ ஸ்பீறீற் (பெண்களுக்கு)
★ கிளாஸிக் S.L செல்வ் ஸ்ராட்

2 ஹெல்மெட்டுகளுடன் ஜக்கட் ஒன்றும் இலவசம்! இச்சலுகை டிசெம்பர் 31 வரை மட்டுமே விரையுங்கள்!

மேற்குறிப்பிட்ட மோட்டார் சைக்கிள்களைக் கொள்வனவு செய்வோருக்கு

நீங்கள் நாடவேண்டிய இடம்
அங்கீகரிக்கப்பட்ட விற்பனை முகவர்

குறிஞ்சி ரேடேர்ஸ்

இல. 75, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 0777626919

இல.6, நவீன சந்தை,
சாவகச்சேரி.

(12091)


## நல்வாழ்த்துக்கள்



மந்திகை ஆதார வைத்தியசாலையில் சேவைபுரிந்து 19-12-2002இல் ஓய்வுபெற்ற

**டாக்டர் மா.யோகீஸ்வரதேவன்**

அவர்களது சேவையைப் பாராட்டுவதுடன் அவர் தொடர்ந்தும் பொதுச்சேவையில் ஈடுபட்டு தனது தொண்டைத் தொடர வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

*றோயல் ஸ்ரார் கிளினிக்,*
*வதிரி,*
*கரவெட்டி.*
(C/25549)

Dr. N.பத்மநாதன்
குடும்பத்தினர்.

## பாராட்டும் வாழ்த்தும்



19.12.2002இல் வைத்திய சேவையில் இருந்து ஓய்வுபெற்ற எமது தர்மகர்த்தா சபையின் உபதலைவர்

**டாக்டர் மா.யோகீஸ்வரதேவன்**

அவர்களின் தன்னலம் கருதாத சேவையைப் பாராட்டுவதுடன் எதிர் காலத்தில் சகல நலன்களும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

*ஸ்ரீபரமானந்த ஆச்சிரமம்,*
*வதிரி,*
*கரவெட்டி.*
(C/25548)

தர்மகர்த்தா சபையினர்,
சிறார்கள், முதியோர்கள்,
ஊழியர்கள்.


O/L முடித்த மாணவர்களுக்கான

ஆரம்பம் 27-12-2002

Intermediate
Computer Courses

Course Fee
900 + 900/=

பதிவுகளுக்கு
STP Kantharmadam, Jaffna
Branch
Sankaththanai, Chavakachcheri


## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம், பூபாலசிங்கம் புத்தகசாலை உரிமையாளர்

திரு. வீ.மகாலிங்கம் (மகான்)

அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி வீரபாகு பூமணி**

அவர்கள் காலமானதால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

*யாழ்ப்பாணம்.* (12088) ச.சதீஸ்குமார் (சாந்தி)

## மரண அறிவித்தல்கள்

### கார்த்திகேசு பதஞ்சலிநாதன்

(இளைப்பாறிய தபால் அதிபர் - யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி, மட்டுவில்வடக்கைவசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு பதஞ்சலிநாதன் 20.12.2002 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரி(ஆசிரியை,மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்)அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற கற்பகநாயகி மற்றும் சௌந்தரநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சுப்பிரமணியம் ராணியின் ஒன்றுவிட்ட சகோதரனும் கஜேந்திரகுமார் (ஜேர்மனி), கணேசலிங்கம், ரஞ்சினி(இத்தாலி), சுரேஸ்குமார்(கனடா), ஆகியோரின் அன்பு மாமனாரும் மனோகரன்(ஆசிரியர்,தொண்டமனாறு), பகீரதன்(சுவிஸ்), சுதர்ஸன்(சுவிஸ்), விஜயா(ஆசிரியை), விஜிதா(சுவிஸ்), நிமலன், தயாளன் ஆகியோரின் பெரியதந்தையும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை பாறுபதி, இராசநாயகம், நாகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (21.12.2002) சனிக்கிழமை மட்டுவில் வடக்கு ஆயத்தடியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மட்டுவில் வடக்கு,*
*சாவகச்சேரி.*

தகவல்:
இ.பொன்னம்மா
(மைத்துனி)
(C/25545)

### திருமதி செல்வரட்ணம் செல்வரத்தினம்

மறவன்புலோவைப் பிறப்பிடமாகவும் யாழ். கலட்டி இராமநாதன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வரத்தினம் அவர்கள் நேற்று (21.12.2002) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீ.செல்வரட்ணம் (முன்னாள் பஷன் கவுஸ் உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் இ.பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற இ.தர்மராஜா (அப்பர்) மற்றும் இ.சுந்தரலிங்கம், இராஜேஸ்வரி, இராஜலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் திருமதி ஞானசோதி பாலசுப்பிரமணியம் (யாழ்.ப.நோ.கூ.சங்கம்) அவர்களின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2002) ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ். கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.9,இராமநாதன் வீதி,*
*கலட்டி,*
*யாழ்ப்பாணம்.*
(12097)

தகவல்:
இ.பாலசுப்பிரமணியம்.

யாழ். மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

# City & Guilds London U.K.

May/June Examination 2003

Diploma & Advanced Diploma in

**Telecommunications & Electronics Engineering**

Diploma in Computer Hardware Engineering and Networking

பரீட்சையில் சித்தி எய்துவோருக்கு London University களில் 2ஆம் வருட அனுமதிகள் பெற்றுக்கொடுக்கப் படும். பரீட்சைகள் British Councilலினால் நடத்தப்படும்.

**Commencing on 18.01.2003**

APSS
International
Anna Vasa
Dr.Subramanium Rd.,
Chunnakam.
T.P: 0777 - 662033

உங்கள்
அனுமதிகளை
20.12.2002 முதல்
05.01.2003 வரை
பெற்றுக்கொள்ளலாம்.

(12010)


## துயர் பகிர்கின்றோம்

மலர்வு 26 - 11 - 1946



உதிர்வு 19 - 12 - 2002

**திருமதி செல்வராணி ஜெகதீஸ்வரன்**

எமது சகமாணவி ஜோதிகா அவர்களின் அன்புத் தாயாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Level - III
பொறியியற்பீடம்,
மொறட்டுவப் பல்கலைக்கழகம்.

(சி-25540)

## கண்ணீர் அஞ்சலி

தேசிய கல்வி நிறுவக, யாழ்.இந்துக் கல்லூரி நிலைய கல்வி டிப்ளோமா விரிவுரையாளர்

செல்வி இரத்தினபூபதி முருகுப்பிள்ளை
அவர்களின் அன்புத் தந்தையார்

**இளையதம்பி முருகுப்பிள்ளை**

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறையருளை வேண்டுகிறோம்.

தேசிய கல்வி நிறுவக
பிராந்திய நிலையம்.
யாழ்.இந்துக்கல்லூரி

(12071)

தேசிய கல்வி நிறுவக
சிரேஷ்ட விரிவுரையாளர்,
விரிவுரையாளர்கள்.

## மரண அறிவித்தல்

**திருமதி தவமணி நடராஜா B.A.**

(ரமணி)

வண்ணார்பண்ணையில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த குடும்பத்தைச் சேர்ந்த திருமதி தவமணி நடராஜா B.A. (ரமணி) அவர்கள் 19.12.2002 வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருளம்பலம் - பொன்னம்மா (ஆசிரியை) அவர்களின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற S.K.நடராஜா அவர்களின் அன்பு மனைவியும் இளைப்பாறிய பேராசிரியை நவமணி செல்வராஜா அவர்களின் சகோதரியும் காலஞ்சென்ற லூதர் செல்வராஜா அவர்களின் மைத்துனியும் துஷ்யந்தன் (இந்தியா), ஜேனி நிலூக்கா ஆகியோரின் பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.12.2002 வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்றுப் புதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குறிப்பு:- கடந்த 20.12.2002 உதயனில் பிரசுரமான அன்னாரது மரண அறிவித்தலில் இவர் காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்று தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. தயவுசெய்து அதனைத் திருத்தி வாசிக்கவும்.*

தகவல்:
திருமதி
நவமணி செல்வராஜா

*57, அரசடி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (12077)

## தொழில்நுட்ப நிறுவன பெறுபேறு வெளியானது

கொடிகாமம்,டிசெ.22

உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா கற்கைநெறிக்கான அரை ஆண்டு முதல் வருடப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

முதலாம், இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்களுக்கான பெறுபேறுகளே இவ்வாறு வெளியாகியுள்ளன. (எ-74)

வலி.கிழக்கு தனியார் சிற்றூர்தி சேவைச் சங்கத்தின் (அச்சுவேலி)

## புதிய அங்கத்துவ பதிவுகள் பற்றிய அறிவித்தல்

மேற்படி சங்கத்தில் 20.12.2002 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சிற்றூர்தி உரிமையாளரால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி -

எக்காரணங்கொண்டும் புதிய பதிவுகள் வழங்கப்பட மாட்டாது -

என்பதைச் சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கம்.
அச்சுவேலி. (12073) - செயலாளர்.


பிறப்பிலே முன்னணியில்...

Daido

புத்தம் புதிய

**DAIDO**

மோட்டார் சைக்கிள்




2/4 ஸ்ட்ரோக் இன்ஜின் / உத்தரவாதத்துடன்
48CC இல் இருந்து மேலாக டய்டோ இன்ஜின்
லீட்டருக்கு 50 - 70 கிலோ மீட்டர் (ஓட்டத்திறனுக்கேற்ப)
கிக் மற்றும் செல்ப் ஸ்டார்ட்
ஸ்போக் அல்லது அலோய்வீல்
கவரக் கூடிய வர்ணங்களிலும்
நவீன மொடல்களிலும்
3 சேர்விஸ்கள் இலவசம்
6V அல்லது 12V பெட்டரி










ஏக முகவர்

**செரென்டிப் மோட்டர் என்டர்பிறைஸ்**

60B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை கொழும்பு - 10.

தொலைபேசி 01-341580-1, 438779, பெக்ஸ் 01- 454608, 438425

நாடு பூராவும் உள்ள அங்கீகாரம் பெற்ற முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்



# NalineS Beauty Parlour

38/8, Sulaiman Terrace,
Colombo-05

பல வருட அனுபவமிக்க அழகுக் கலை நிபுணரான

**திருமதி நளினி சிவகுமாரன்**
(Diploma in Hair dressing & Bridal Dressing)
(Advanced Diploma in Herbal Beauty & Aroma Theraphy)

**செல்வி உதயமலர் தங்கராஜா**
(Diploma in Beauty Culture)
(Advanced Diploma in Herbal Beauty & Aroma Theraphy)

இவர்களால் நடத்தப்படும்

**அழகுக் கலை செயல்முறை பயிற்சி வகுப்புகள்**

*இடம்:* 393/48, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
*நேரம்:* காலை 9.30 மணிமுதல் 1.00 மணிவரை.
*காலம்:* 28.12.2002 Gold Facial, Pearl Facial, சாதாரண Facial, Veg Peel Facial, முகப்பரு சிகிச்சை, கரும்புள்ளி அகற்றுதல், கருவளைய சிகிச்சை
*காலம்:* 29.12.2002 மணப்பெண் அலங்காரம் *(இந்து, கிறிஸ்தவ, வட இந்திய முறைகள்)*

28.12.2002 - 29.12.2002 3.30 மணிமுதல் மாலை 6.30 மணிவரை.
27.12.2002 9.00 மணிமுதல் 6.00 மணிவரை.

முகப்பரு, மங்கு, கரும்புள்ளி, மரு, முடிஉதிர்தல், இளம் நரை, பேஷியல் (Facial), கருவளையம் போன்றவற்றிற்கான சிகிச்சையும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

உங்கள் பதிவுகளை முன்கூட்டியே பதிந்துகொள்ளலாம்.

தொலைபேசி இலக்கங்கள்: 021 222 2473 - Meera
0777 383846 - Naline
0777 375023 - Uthayamalar

(12041)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வான்கோழி (Turkey) சேவல், ...டு என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.118, பலாலி வீதி, திருநெல்வேலி. (11817)

சம்பியன் லேன், கொக்குவில் ...ழைய வீட்டுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: PNo:- 074-214299 (12016)

இரண்டு மாதம் நிரம்பிய காவ ...குரிய Pedigreed Great Dane ...edigreed Dobermann Pin- ...நாய்க்குட்டிகள் (பல நிறங் ... - நியாயமான விலையில்) விற ...க்குண்டு. தொடர்பு: தனபால ... இல.19, முருகேசர் ஒழுங்கை, ...ரச் சந்தையடி, நல்லூர்.(11911)

...று மாதம் நிரம்பிய டோமன் ...ய்க்குட்டிகள் மலிவு விலை ...பனைக்குண்டு. காலை ...வரை மாலை 4.00-6.00 ...பு: இல.6, நந்தாவில் ...ராமகிருஷ்ண மிஷன ...ன் ஒழுங்கை), கொக்கு ... (12012)

...களில் லவ்பேட்ஸ் ...ம் அதற்குரிய அழகிய ...ரிய கம்பிக்கூடுகளும் ...டுவதற்காக வடிவமைக்கப் ...களும் விற்பனைக்குண்டு. ...பி.திலீபன், மூனாமலை ... சுதுமலை அம்மன் (12036)

...மோட்டார் சைக்கிள் ...பனைக்குண்டு. தொடர்பு: ...யைகம், திருநெல்வேலி ...மாவடி. (12030)

...T.V.க்கள் 2192, 2184 ...ல் 2167, 2100WX ...sonic டெக், SD10 ...tte CFX 1055 என ...க்குண்டு. தொடர்பு: ...ன், K.K.S. வீதி ... R.D.S (முன்பாக), (12064)

...றும் இறைச்சிக் ...தார முறைப்படி சுத் ...ங்களுக்குத் தேவை ...நியாயமான விலை ... பெற்றுக்கொள்ளலாம். ...வை) தொடர்பு: 19, ...ங்கை, முத்திரைச் ...நல்லூர். (11714)

## ...ழைக்குட்டி ...பனைக்கு

...கதலி வாழைக்குட்டிகள் ...ண்டு. தொடர்பு: 19, ஒழுங்கை, முத்திரைச் நல்லூர். (12071)

## காணி விற்பனைக்கு

கச்சேரி வடக்கு, யாழ்ப்பாணத்தில நன்னீர்க் கிணற்றுடன் 5பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: ச.சரவணபவான், "வட்டதெனி", அல்வாய் மேற்கு, அல்வாய். (11886)

## மணமக்கள் தேவை

கனடா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, லண்டன், சுவிஸ், ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி முதலிய நாடுகளிலுள்ளவாகளினதும் டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன், அரச, தனியாா துறை உத்தியோகத்தர்கள் மற்றும் தராதரமுள்ளவர்களினதும் குறிப்புக்கள் எம்மிடம் உண்டு. தொடர்பு: கல்யாணமாலை திருமண சேவை, 235/7, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்; 67/A, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13. T.P. 338162 Fax338161 (95128)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 75ஆம் ஆண்டு, உத்தராடம் (5'6" உயரம்) மணமகனுக்கு (தைமாதம் இத்தாலியிலிருந்து வருகின்றார்) அழகான, படித்த மணமகள் தேவை. தொடர்பு: கல்யாணமாலை திருமண சேவை, 235/7, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்;67/A, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு-13. T.P. 338162, Fax 338161. (98127)

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச சேர்ந்த 09-11-1959இல் பிறந்த, சதயம் 4ஆம் பாதம், கனடாவில் நிரந்தர தொழில்புரியும், சைவபோசன மணமகனுக்கு படித்த, அழகிய, சைவபோசன. மணமகள் தேவை. விளம்பர இல.1723, மே/பா உதயன். (11865)

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச சேர்ந்த 32 வயது, செவ்வாய் தோஷமற்ற, மத்தியகிழக்கு நாடொன்றில் உயர்பதவி வகிக்கும் மணமகனுக்கு பெற்றோர் பொருத்தமான மணமகளைத் தேடுகின்றனர். ஜாதகம், படத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல.1928, C/o உதயன், யாழ்ப்பாணம். (12065)

## தேவை

கௌரவமான உத்தியோகம் பார்க்கும் சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை. வண்ணார்பண்ணை, கந்தர்மடம் பகுதி விரும்பத்தக்கது. 430, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். T.P. 222-3081 (சி-25498)

## வகுப்புகள்

Maths, English O/L பரீட்சையில் A,B,C பெறுபேறடையவும் ஆண்டு 6,7,8,9,10 விசேட பெறுபேறடையவும் ஆங்கிலம் A/L, G.A.Q., பல்கலைக்கழக மாணவர்களுக்கும் கற்பிக்கப்படும். 85, சிவன் கோயிலடி, சிவன்கோயில்மேற்கு வீதி, திருநெல்வேலி. (11725)

## கோழிக்குஞ்சுவிநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள 35/= அதிவிஷேட Prima பேட்டுக் குஞ்சுகள் 26.12.2002 வியாழக் கிழமை மாலை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும் தொடர்பு: இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரை சந்தையடி, நல்லூர். (11768)

## கோழி முட்டைகள்

தரமான சிவப்புக் கோழி முட்டைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (12070)

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் 3ஆம் குறுக்குத் தெருவில் சகல வசதிகளுடனும் கூடிய அறையொன்று தனியொருவருக்கு வாடகைக்கு உண்டு. சகல விவரங்களுடனும் தொடர்பு: விளம்பர இல. 1929, C/o உதயன், யாழ்ப்பாணம். (12066)

## A/L பௌதிகவியல்

பௌதிகவியல், இணைந்த கணிதம் பலவருட அனுபவம்பெற்ற ஆசிரியரினால் 20வருட வினாத்தாள் உட்பட ஏராளமான பயிற்சிகளுடன் மிகச் சிறப்பாகக் கற்பிக்கப்படுகிறது. தனிப்பட்ட முறையிலும் முழுப்பாடத்திட்டமும் குறுகிய காலத்தில் முடித்துக் கொடுக்கப்படும். O/L எடுத்தவர்களுக்கு அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும். சந்திப்பு: தினசரி 3 மணிக்குப் பின்பு. R.பாலசுப்பிரமணியம B.Sc. (Cey.) Dip. in Edu. 17/1, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். (12060)

## பெறுபேறு வெளியானது

யாழ்ப்பாணம்,டிசெ.22

யாழ்.பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவபீட மாணவர்களின் முதலாம், இரண்டாம், மூன்றாம் ஆண்டுகளுக்குரிய முதலாம் ஆண்டு அரையாண்டுப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பெறுபேறு விபரப்பட்டியல் சம்பந்தப்பட்ட துறைகளின் விளம்பரப் பலகைகளில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-12)

## மாதாந்த உதவிப்பணம்

நவாலி,டிசெ.22

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களினதும் மற்றும் காசநோய், தொழுநோய், புற்றுநோய் என்பவற்றிற்கான உதவிப்பணம் பெறுபவர்களினதும் டிசெம்பர் மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.(எ-100)




S.K.ஏஜென்சி

மீண்டும் யாழ்நகரில்

உத்தரவு பெற்ற பிறிமாவின் முகவர்

...த் தீவனங்களையும், கால்நடைத் தீவனங்களையும் ...ாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் ...் நாடவேண்டிய ஒரே இடம்:

S.K.ஏஜென்சி

128/D, மானிப்பாய் வீதி,

யாழ்ப்பாணம்.

...டியே பதிவுசெய்து மொத்தமாகப் பெற்றுக்கொள்பவர் ... இலவசமான விநியோக சேவை அவர்களுடைய ...ளுக்கு வழங்கப்படும். (11922)

...AXI'S MAXI'S MAXI'S MAXI'S MAXI'S MAXI'S MAXI'S MAXI'S MAXI'S

...ழ்.மக்களுக்கு ஓர் இனிய செய்தி!

...AXIE'S

சுத்திகரிக்கப்பட்ட புறோயிலர் கோழி இறைச்சி வகைகள்

...ப்போது யாழ்ப்பாண மக்களுக்கு

...த்திகரிக்கப்பட்டு தோல் நீக்கப்பட்டது 1Kg ரூபா 190.00

...த்திகரிக்கப்பட்டு தோல் நீக்கப்படாதது 1Kg ரூபா 180.00

...ாவணியா சுப்பர் மார்க்கட்

783, ஆஸ்பத்திரி வீதி (முலவைச் சந்தி), யாழ்ப்பாணம்.

☎ 222 2841

...பாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு. மொத்தமாகப் பெற்றுக்கொள்வோர் 222 2882 தொலைபேசி இலக்கத்தில் தொடர்புகொள்ளவும். (12067)

...S MAXI'S MAXI'S MAXI'S MAXI'S MAXI'S MAXI'S MAXI'S MAXI'S


## நன்றி நவிலல்



மணமக்கள்

### கிறகரி ஆனந்த் - ஜேன் பாமினி

ஆகியோரின் திருமண வைபவம் 14.12.2002ஆம் ஆண்டு சனிக்கிழமை நடைபெற்ற மேற்படி வைபவத்தில் யாழ்ப்பாணம் புனித யாகப்பர் ஆலயத்தில் நிறைவேற்றப்பட்ட திருமணத் திருப்பலியிலும் தொடர்ந்து "லொயலாஸ்" திருமண மண்டபத்தில் நடைபெற்ற விருந்துபசாரத்திலும் கலந்துகொண்டு வாழ்த்துக்கூறி அன்பளிப்புக்கள் வழங்கி மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பித்த அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், பெரியவர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

திருமண வைபவத்தில் கலந்துகொள்ள முடியாதபோதும் வீட்டிற்கு வருகை தந்தும் தொலைபேசியிலும் வேறு வகையிலும் வாழ்த்துக்களையும் ஆசிகளையும் வழங்கிய உள்ளூர், வெளியூர் உடன்பிறப்புக்கள், உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் ஆகியோருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

மணமக்கள்: கிறகரி ஆனந்த் - ஜேன் பாமினி,

திரு.திருமதி சிங்கராயர் தார்சீசியஸ்
ஓய்வுபெற்ற அதிபர்
*இல.30, புதுமைமாத கோவில் கிழக்கு வீதி, யாழ்ப்பாணம்.*

திரு.திருமதி பே.தேவதிரவியம்
உரிமையாளர்
"குணம் கிறீம் ஹவுஸ்"(மயிலிட்டி)
*இரண்டாம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை.*

(95106)

## கண்ணீர் அஞ்சலி

கொழும்பு நகரில் இடம் பெற்ற தீ விபத்தில் அகால மரணமெய்திய

**சுப்பிரமணியம் காந்தரூபன்**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எம் அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கிறோம்.

காரைநகர் களபூமி நண்பர்கள்,
யாழ்ப்பாண நண்பர்கள்.

(12040)

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் சபாபதிநாதன்

(நில அளவையாளர் சித்தன்கேணி)

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சபாபதிநாதன் அவர்கள் 20.12.2002 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் புவனேஸ்வரியின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - கைலாயநாயகி தம்பதிகளின் அன்பு மகனும், மூளாய் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - நாகமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், கலாவதி (ஆசிரியை, ஸ்ரீகணேச வித்தியாலயம், சித்தன்கேணி), சாந்தி (பிரான்ஸ்), சிவநாதன் (Computer Point, வெள்ளவத்தை) ஆகியோரின் அன்புத் தந்தையும், வரதராசா (P.S. Service Station, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.), சுரேந்திரன் (பிரான்ஸ்), சாயினி ஆகியோரின் அன்பு மாமனாரும், அகிலா, கபிலன், அரவிந், விதுஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற செல்வராஜா, தர்மலிங்கம் மகேஸ்வரி, செல்லையா சரஸ்வதி, இராஜதுரை, சிவசுப்பிரமணியம், வாமதேவி, இராஜரட்ணம், ஈஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*கைலிலங்கிரி, சித்தன்கேணி.*

(C/25522)

தகவல்:
கா.வரதராசா
(மருமகன் - P.S சேவிஸ் ஸ்ரேசன்)

# துயர் பகிர்கின்றோம்

யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலய ஆசிரியை
திருமதி **வரதராசா கலாவதியின்**
அன்புத் தந்தையார்

## நாகலிங்கம் சபாபதிநாதன்

(நிலஅளவையாளர், சித்தன்கேணி)

அவர்கள் 20.12.2002 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு ஆறாத்துயரில் இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*யா/சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயம்,*
*சித்தன்கேணி.*
(C/25559)

அதிபர்,
ஆசிரியர்கள்,
மாணவர்கள், பெற்றோர்கள்.

# மரண அறிவித்தல்கள்

## கதிரவேலு சரஸ்வதி

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கதிரவேலு சரஸ்வதி நேற்று (21.12.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து கதிரவேலு அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் கமலாம்பிகை (கனடா), கனகசபாபதி (களஞ்சியப் பொறுப்பாளர், இலங்கை மின்சாரசபை), குகதாசன் (பிரதேச செயலகம், நல்லூர்), நல்லைநாதன் (லண்டன்), இந்திராணி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பாலசிங்கம் (ஓய்வுபெற்ற லிகிதர்), குனேஸ்வரி, சறோஜினி, அனுஷியா (லண்டன்), சதானந்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான கந்தவனம் (ஓய்வுபெற்ற கிராம அலுவலகர்), தியாகராசா, திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதிரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2002) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு (புதிய நேரம்) இல.7, திருமகள் வீதியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.கனகசபாபதி
(மகன் - இலங்கை மின்சாரசபை),
க.குகதாசன்
(மகன் - பிரதேச செயலகம், நல்லூா)
(12106)

## மருதப்பு தில்லையம்பலம்

நயினாதீவு 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மருதப்பு தில்லையம்பலம் அவர்கள் நேற்று (21.12.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் திரு.திருமதி மருதப்பு தம்பதிகளின் புதல்வரும் திரு.திருமதி நாகநாதர் தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும் தில்லைநாயகி, புஷ்பராணி, திருக்குமாரி (லண்டன்), சூரியகுமாரி, வசந்தகுமாரி (ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி), பஞ்சலிங்கநாதன் (யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் நடேசன், விவேகானந்தன் (லண்டன்), முத்துலிங்கம், தயாபரன் (ஆசிரிய ஆலோசகர்), சாந்தகோகுலம் (யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2002) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் நயினாதீவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*8 ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு.*
(12107)

தகவல்:
தி.பஞ்சலிங்கநாதன்

## திருமதி முத்தையா பாக்கியம்

தம்மளை, சங்குவேலி வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வதிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்தையா பாக்கியம் 19.12.2002 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னுப்பிள்ளையின் [illegible]ளும் முத்தையாவின் அன்பு மனைவியும் செல்லத்துரை, சுப்பிரமணியம், நடராசாவின் சகோதரியும் பராசக்தி, புவனேஸ்வரி, சுமத்திராதேவி (கனடா), சிறிதரன் (ஹொலண்ட்), சாந்தினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கந்தசாமி, குகனேந்திரன், அம்பிகைபாலன், சுசீலாதேவி (ஹொலண்ட்), பிறேம்ராஜ் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் மிதிலா சுதர்ஷன் (லண்டன்)), பிறேமிக்கா, சிந்திக்கா, நிலானி (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2002) ஞாயிற்றுக்கிழமை கந்தரோடை இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

*சங்குவேலி வடக்கு,*
*மானிப்பாய்.*
(12094)

தகவல்:
சிறிதரன் (மகன்-ஹொலண்ட்)
மருமகன் கந்தசாமி
(பாலு - இலங்கை)

## திருமதி விசாகசுந்தரம் திரிபுரசுந்தரி

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற இளைப்பாறிய உதவி நில அளவை அதிபதி செல்வநாயகம் விசாகசுந்தரத்தின் அன்பு மனைவி திருமதி விசாகசுந்தரம் திரிபுரசுந்தரி நேற்று (21.12.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம் தம்பதிகளின் மூத்த புதல்வியும் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் தம்பதிகளின் மருமகளும் Dr.நித்தியானந்தம் (நியூஸிலாந்து), Dr.குணானந்தம் (பேராசிரியர், மருத்துவபீடம் யாழ்ப்பாணம்), சுதந்திராதேவி, செல்வானந்தம (பர்மா), சரோஜினிதேவி, அருளானந்தம் (N.S.B. யாழ்ப்பாணம்), வசந்தாதேவி ஆகியோரின் அருமைத் தாயாரும் Dr.கிருஷ்ணகௌரி (நியூஸிலாந்து), செல்வராணி, பாலேந்திரன், S.R.கனகநாயகம் (Urban Ministry), நளாயினி (இந்தியா), துஷ்யந்தி (N.S.B.சாவகச்சேரி), VGL சுகுமார் (இலங்கை வங்கி, கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும் அனுஷா, Dr.துஷித்தா (U.K), வாணி, கவிதா (நியூஸிலாந்து), சுரேன் (U.K), ரம்மியா, பார்த்தீபன் (நியூஸிலாந்து), சஞ்ஜீவ் (இந்தியா), நிஷாந்தினி (இந்தியா), ஜனகன், ஜனனி, அருஜுனா, கானாமிர்தன், Leigh (U.K.), ரகு (நியூஸிலாந்து) ஆகியோரின் பேர்த்தியும் டிவ்னேஷின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.12.2002) திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் கனத்தை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*12B, மாளிகாவத்தை தொடர்மாடி,*
*கொழும்பு -10.*
(12105)

தகவல்:
வி.அருளானந்தம் (மகன்)
*38.A.பிரப்பங்குளம் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

# ஒளிவிழா

குருநகர்,டிசெ.22

குருநகர் புனித ஆரோக்கியநாதர் ஆலய திரு இருதயநாதர் இளைஞர் இணையகம் நடத்தும் ஒளிவிழா இன்று மாலை 6.30 மணிக்கு குருநகர் புனித ஆரோக்கியநாதர் ஆலய அரங்கில் ஆலய உதவிப் பங்குத்தந்தை வணபிதா மடக்திநாதர் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்மாவட்ட இளைஞர் ஆணைக்குழுத் தலைவர் அருட்தந்தை சாள்ஸ் பொலின் அடிகள் இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். யாழ் பிரதேச செயலக கணக்காளர் கியுபேட் குணம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்

ஆலயத்தால் நடத்தப்பட்ட மறைக கல்விப்போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படுவதுடன் சிறப்பு நிகழ்ச்சியாக 'நாளைய உலகை ஆளவேண்டும்' எனும் சமூக நாடகமும் இடம்பெறும்.

(எ-51)

★ ★ ★

குருநகர்,டிசெ.22

யாழ்.வலயக்கல்வி அலுவலக நலன்புரிக்கழகத்தின் ஒளிவிழா நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கல்விவலய முகாமைத்துவ மண்டபத்தில் நலன்புரிக்கழகத் தலைவர் நா.வரதராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்மறைக்கல்வி நிலைய இயககுநர் அருட்தந்தை யோன் மௌலீஸ் அடிகள், கொக்குவில் புனித அந்திரேயா ஆலய பங்குத் தந்தை வண. இராஜ்குமார் ஆகியோர் சிறப்பு விருநதினர்களாக கலந்துகொள்வர்.

(எ-51)

★ ★ ★

குருநகர்,டிசெ.22

குருநகர் நாட்டுக்கூத்து மன்றம் கிறிஸ்து பிறப்புவிழாவை இன்று மாலை 6.30 மணிக்கு குருநகர் கலையரங்கில் நடத்தவுள்ளது.

இந்த நிகழ்வில் குருநகர் பங்குத் தந்தை வணபிதா.அ.பி. ஜெயசேகரம் அடிகள் பிரதம விருந்திறாகவும், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகச் செயலாளர் செ.மெற்றாஸ் மெயில் சிறப்பு விருந்தினராகவும், பாண்டியன்தாழ்வு சந்தான மாதா ஆலயப் பங்குத்தந்தை வணபிதா. பீஎம் இம்மானுவேல் அடிகள் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

சிறப்பு நிகழ்ச்சியாக குருநகர் நாட்டுக்கூத்து இயக்குநர் ஆர்.ஜீ. கிறிஸ்தோபரால் தயாரிக்கப்பட்ட தென்மோடி நாட்டுக்கூத்தான 'புரட்சித துறவி' நாட்டுக்கூத்து மேடையேற்றப் படும்.

(எ-51)

## தவறிவிட்டது

தேசிய அ.அட்டைகள்-2, விஷேட அ.அட்டை, மோட்டார் சைக்கிள் காப்புறுதிப்பத்திரம், வரிப்பத்திரம், ஒரு தொகைப் பணம் ஆகியன அடங்கிய பாக் உரும் பிராய் முருகன் வீதிக்கும் சந்திக்கும் இடையில் 21.12.2002 மாலை தவறிவிட்டது. கண்டெடுத்து ஒப்படைப்போருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

பிரமஸ்ரீ சபா
சுப்பிரமணியக்குருக்கள்
முருகன்வீதி,
உரும்பிராய் கிழக்கு.
(12102)

லக்ஷ்மி இணுவில்.
சூர்யா, லைலா, ஸ்நேகா நடித்த
உன்னை நினைத்து
(ரீலஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (ப.நே.)
இனிய பாடல்கள் நிறைந்தது (12091)

நாகம்ஸ் சுன்னாகம்
இன்று முதல்
அர்ஜுன், சிம்ரன், மும்தாஜ் நடித்த
ஏழுமலை
(ரீலஸ்)
காட்சிகள்: 11.00, 3.00
விசேடகாட்சிகள்: வெள்ளி, சனி, ஞாயிறு 6.30 (பு.நே.)
(12087)

ராஜா யாழ்ப்பாணம்.
50 ஆவது நாள்
அஜித், மீனா, கிரண
வில்லன் (ரீலஸ்)
10.30, 2.30, 6.30

நாளைமுதல்:
M.G.R, ராதாசலுஜா நடித்த
இதயக்கனி
(C-25437)

நிறஞ்சனாஸ் சங்கானை
அர்ஜுன், தபு, சார்லி நடித்த
தாயின் மணிக்கொடி
காட்சி நேரம்:11.00, 2.45, 6.00
(C/25436)

# மரண அறிவித்தல்கள்

## சண்முகம் நடராசா

பருத்திநகர், மேலைப்புலோலி, தம்பசிட்டியைப் பிறப்பிடமாகக்கொண்ட ஓய்வு பெற்ற அஞ்சல் திணைக்கள ஊழியர்(M.S.O.) சண்முகம் நடராசா அவர்கள் நேற்று (21-12-2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் தம்பதிகளின் அன்பு மகனும் தங்கம்மாவின் அன்புக் கணவரும் கதிர்காமசுந்தரத்தின் அன்புச் சகோதரரும் தங்கராசா (சட்டத்தரணி L.L.B), மனோரஞ்சிதம், மங்கையற்கரசி, மங்களேஸ்வரி, முருகமூர்த்தி, நிரஞ்சன் (தபாலகம், பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையும் தங்கராசா (நெல்சந்தைப் படுத்தும் சபை), தங்கராசா(முகாமையாளர், துணுக்காய்) யோகரத்தினம் (வர்த்தகர்), சரஸ்வதி, விக்னேஸ்வரி, கிருசாந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் தமிழ்ச்செல்வன் (ஜேர்மனி), தமிழினி(ஜேர்மனி), மணிவண்ணன (ஜேர்மனி), யாழினி (வடஇந்து மகளிர் கல்லூரி), மயூரன் (ஹட்லிக்கல்லூரி), நிமலன் (தேசியகல்வியியல் கல்லூரி-கோப்பாய்), நிசாந்தினி (வடஇந்துமகளிர் கல்லூரி), ரகுபாலன், சேசசயனன், ராகுலன், தர்மினி ,பிரசாந்தன், தயாளினி, தர்சிகன், இந்துஜன், தர்சனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-12-2002) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 (பத்து)மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக சப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தம்பாவத்தை ஒழுங்கை,தம்பசிட்டி,*
*புலோலி மேற்கு,*
*பருத்தித்துறை.* (c/25567)

தகவல்:
ந.தங்கராசா (சட்டத்தரணி)
ந.நிரஞ்சன் (தபாலகம்-பருத்தித்துறை)

## சீனியர் பாலசிங்கம் (சிங்கர்)

கோண்டாவில், குமரகோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சீனியர் பாலசிங்கம் (சிங்கர்) அவர்கள் 19.12.2002 வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனியர் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சின்னத் தங்கச்சி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான நல்லம்மா, வீரவாகு மற்றும் குருசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருமதி இராசம்மாவின் அன்புக் கணவரும் தனலக்சுமி, பரமலிங்கம், தருமேஸ்வரி, தியாகராசா, மகேந்திரராஜா, தெய்வேந்திரராஜா (ஜேர்மனி), லோகேஸ்வரன் (சுவிஸ்), சாந்தினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் மயில்வாகனம் ((முன்னாள் உத்தரவுபெற்ற வியாபாரி, கோவில் வீதி, கொக்குவில்), சோதி (இணுவில்), மகாலிங்கம் (அளவெட்டி), பாலசுந்தரி, கமலாதேவி (சாவகச்சேரி), விமலாதேவி (ஜேர்மனி), தபோதினி (சுவிஸ்), இராஜகுலேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் தயாபரன், வாசினி (சுவிஸ்), தமிழ்ச்செல்வன் (சுவிஸ்), திருமதி தவத்தழகன் தமிழ்ச்செல்வி (லண்டன்), திருமதி தேவதாசன் சுகந்தினி (ஜேர்மனி), தர்மினி, திருமதி ஜெயக்குமார், அனிதா குபேரன், சிவசங்கர், அஜந்தா, கஜேந்திரன் (லண்டன்), சுரேந்திரன், கஜாநந்தி, ஜெயந்தன், அபிராமி, அகிலேந்திரன், நிவேதா, விஜிந்தன் (கனடா), அபிராமி, அகிலேந்திரன், நிவேதா, விஜிந்தன் (கனடா), டயானா (சுவிஸ்), அஜந் (ஜேர்மனி), ரஞ்சித் (ஜேர்மனி), அனுஜா (ஜேர்மனி), டனிலா (சுவிஸ்), ஒஷான் (சுவிஸ்), சுதேஸ் (ஜேர்மனி), சுரேந் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனாரும் லிஜிந்தன், லிசாந்தன், லெபினா, சானுசன், ஆருஷன், விதுரா, சங்கீர்த்தன், சர்மினா ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.12.2002) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குமரகோட்டம்,*
*கோண்டாவில்.*
(12100)

தகவல்:
சி.மயில்வாகனம் (மருமகன்)

## சின்னத்தம்பி துரைச்சாமி

***(முன்னாள் உரிமையாளர், துரை சன்ஸ், கொழும்பு)***

புங்குடுதீவு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் தற்பொழுது கனடாவில் வசித்தவருமாகிய சின்னத்தம்பி துரைச்சாமி 20.12.2002 கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தெய்வானைப் பிள்ளையின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - செல்லம்மா தம்பதிகளின் மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற ரவிகரன் மற்றும் முரளிகரன் (லண்டன்), சுதாகரன் (கனடா), ஜெயகௌரி (கனடா), ஜெயரஞ்சினி (கனடா), சிறிகரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ராஜேஸ்வரன் (கனடா), நாகேஸ்வரி (கனடா), திருக்கேதீஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் செல்லம்மா, நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் தங்கரத்தினம், காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் மாணிக்கம், காலஞ்சென்ற கனகசபை ஆகியோரின் மைத்துனரும் கமலாதேவியின் உடன்பிறவாச் சகோதரரும் ராகுலன், பிரசாத், சயந்தன், திவாகர், கேசினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

***100, LEEWARD-GLENWAY # 1103***
***NORTHYORK***
***M3C ZZ1, CANADA***
**(416 4296708)** (12103)

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், சகோதரர்கள்.

## திருமதி பவனிதரன் சிவமதி (விஜி)

பாலாவோடை, உடுவில் தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த திருமதி பவனிதரன் சிவமதி அவர்கள் 17.12.2002 செவ்வாய்க்கிழமை அன்று கொழும்பில் நடந்த தீ விபத்தில் அகாலமரணமடைந்தார்.

அன்னார் பவனிதரன் (பிரான்ஸ்) அவர்களின் அன்பு மனைவியும் அருமைத்துரை - மங்களேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகளும் வைரமுத்து - கமலாதேவி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பரமுருகானந்தன் (பரா) மற்றும் கீர்த்திசீலன் (வவா - சுவிஸ்), அருள்மதி (ராஜி), தர்மசீலன் (சிறி), பஞ்சசீலன் (சிவா - லண்டன்), கலைமதி (சுகி - யாழ். பல்கலைக்கழகம், கலைப்பீடம் 2ஆம் வருடம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சண்முகநாதன் (A.S.N. சுற்றுலா விடுதி உரிமையாளர்), நிவேதினி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும் நிதுலனின் (சுவிஸ்) அத்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2002) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாலாவோடை,*
*உடுவில் தெற்கு,*
*மானிப்பாய்.*
(12104)

தகவல்:
இ.அருமைத்துரை குடும்பத்தினர்

## தொடர்புகொள்ள கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.22

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு அரசாங்க வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த சசிகலா (வயது 36) என்ற பெண் அங்கு மரணமடைந்துள்ளார்.

அவரது சடலத்தை பொறுப்பேற்பதற்காக இல.57/4, ரெயில்வே வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த பகீரதியை யாழ்.பொலீஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பொலீஸார் கேட்டுள்ளனர்.(ம)

# தென்னை வள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரிக்கப்படும் - என்றார்.

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் பேசுகையில் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில் தென்னைச் செய்கை தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கான ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

யுத்தத்தினால் யாழ்.குடாநாட்டில் தென்னைப் பயிர்ச் செய்கையாளர் வெகுவாகப் பாதிப்படைந்துள்ளனர். பல ஏக்கர் கணக்கான தென்னந் தோட்டங்கள் இராணுவத்தின் தேவைக்கென அழிக்கப்பட்டுவிட்டன. சில தோட்டங்கள் உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வைக்குள் முடக்கி வைக்கப்பட்டுள்ளன. இதனால் யாழ். குடாநாட்டின் தென்னை வளம் பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதுடன் அவர்கள் தென்னங்கன்றுகளை மீள் நடுகை செய்வதற்கும் உதவிகளை வழங்க வேண்டும். இராணுவத்தினரால் அழிக்கப்பட்ட தோட்டங்களில் உள்ள கழிவுகளை அகற்றுவதற்கு 'புல்டோசர்' வசதிகளையும் வழங்க வேண்டும் - என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தனது உரையில் தெரிவித்ததாவது:-

எத்தனை அமைச்சர்கள் யாழ். குடாநாட்டுக்கு விஜயம் செய்துள்ளார்கள். ஆனால் அவர்களின் விஜயங்கள் வெறும் சுற்றுலாக்களாக அமைந்தனவே தவிர எமது மக்களுக்கு எந்தவித பலனும் கிடைக்கவில்லை. தற்போது விஜயம் செய்துள்ள பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்லவின் விஜயமும் அப்படி அமையக்கூடாது. எமது தென்னைச் செய்கையாளர்களுக்கும், தென்னிலங்கையில் உள்ள தென்னைச் செய்கையாளர்களுக்கு கிடைக்கும் உதவிகள் மற்றும் மானியங்கள் கிடைக்க அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும். இதன் மூலம் இழந்துபோன எமது தென்னை வளத்தை கட்டியெழுப்ப முடியும் - என்றார்.

யாழ்.மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமைச்சர் தி. மகேஸ்வரன், தென்னை அபிவிருத்திச் சபைத் தலைவர் லிங்கன் பெர்ணாண்டோ, பொருண்மிய மேம்பாட்டுக் கழக பிரதிநிதி ஞானவேல் ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.

இந்நிகழ்வில் உரமானியத்துக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவும் இலவச தென்னங்கன்றுகளும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

இதன் பின்னர் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல, அமைச்சர் தி.மகேஸ்வரனுடன் முகமாலைப் பகுதிக்கும் விஜயம் செய்து அங்கு யுத்தத்தினால் அழிந்துள்ள தென்னந் தோட்டங்களைப் பார்வையிட்டார்.

அமைச்சர் நேற்று மாலை காரைநகருக்கும் விஜயம் செய்தார். அங்கு ஈழத்துச் சிதம்பரம் ஆலயத்தை தரிசித்தார். காரைநகர் பிரதேசத்துக்கு 5 ஆயிரம் தென்னங்கன்றுகளை வழங்கினார். (ம-8-72)

## கடந்த ஒரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைகள் புலிகள் ஆயுதங்களை நாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர். இது அரசுக்கும் தெரியும். ஆனால், அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. புரிந்துணர்வு உடன்படிக்கை முறிந்துவிடும் என்பதாலேயே அரசு இப்படி நடக்கிறது.

தற்சமயம் இடம்பெறும் பேச்சுக்கள் வெற்றி பெறக்கூடிய ஒன்றல்லவாக இருந்தபோதும், அரசுக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்குவதற்காகவே தற்சமயம் பேச்சுக்கள் இடம்பெற அனுமதியளித்துள்ளேன் - என்று தெரிவித்துள்ளார். (ம-3-12)

# பாதுகாப்பு வலயங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதம் இடம்பெறும் உபகுழுக் கூட்டத்தை பகிஷ்கரிக்கப் போவதாகவும் கேணல் கருணா தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து குடாநாட்டில் நடைமுறையிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியமர அனுமதிக்கும் பகுதிகள் தொடர்பான விவரங்களை யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா நேற்று அறிவிப்பார் என அக்கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டிருந்தது.

இதற்கிணங்க உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக் குடியமர்த்த அனுமதிக்கும் பிரதேசங்கள் தொடர்பான விவரங்கள் அடங்கிய விசேட அறிக்கை ஒன்றை படைத்தரப்பு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைமையகத்தில் நேற்றுக் கையளித்தது.

இந்த அறிக்கை விடுதலைப் புலிகளின் தலைமையிடம் இன்று அல்லது நாளை கையளிக்கப்படும் என்று கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் தலைமை இந்த அறிக்கையை பரிசீலனை செய்த பின்னர் யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கும் புலிகளின் வடமுனைத் தளபதி கேணல் தீபனுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்படும் என்று அவர் மேலும் சொன்னார்.

இதேவேளை -

யாழ்.குடாநாட்டில் மீளக் குடியமரவேண்டிய மக்கள் பெரும் எண்ணிக்கையில் உள்ளனர் என்றும் -

அந்த எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தினுள் மீளக் குடியமரவுள்ள மக்களின் எண்ணிக்கை எட்டிலொரு பங்கே என்றும் -

உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே மீளக் குடியமர வேண்டிய பெரும்பாலான மக்களின் மீள்குடியமர்வில் கவனம் செலுத்தாது சிறிய எண்ணிக்கையானோர் மீளக்குடியமர வேண்டிய உயர் பாதுகாப்பு பிரதேசங்கள் குறித்து மட்டுமே அதிக அக்கறை காட்டப்படுகின்றது என்றும் -

பாதுகாப்பு உயர் வட்டாரங்கள் நேற்றிரவு கருத்து வெளியிட்டன.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நடராஜா குணலக்சுமி

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திருமதி நடராஜா குணலக்சுமி அவர்கள் நேற்று (21.12.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துச்சாமி நடராஜா அவர்களின் அன்பு மனைவியும் அனந்தராஜ் (மாகாண கல்வித் திணைக்களம், வடக்கு கிழக்கு மாகாணம்), திருமதி த.சுவர்ணலதா, ந.குணராஜ், காலஞ்சென்ற சிறிதரன் மற்றும் ந.ராஜேஸ்வரன் (இரத்தினமாளிகை, வல்வெட்டித்துறை) ஆகியோரின் அன்புத் தாயாரும் சி.தனபாலசிங்கம், அ.வனிதா, கு.சிறிராதா, இ.யசோதா ஆகியோரின் மாமியும் அ.நவஜீவன், அ.தேவகி, அ.கல்யாணி, த.சுகந்தி, த.ஜெயந்தி, த.வாசுகி, கு.பிரதீபன், கு.திலீபன் கு.தர்சினி, கு.சிறிகுணதீபன், கு.சயீபன், கு.சுதர்சன், இ.வினோஜா, இ.சிந்துஜா, இ.யானகி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2002) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் தெணியம்மை, வல்வெட்டித்துறை, ஊரணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தெணியம்மை,*
*வல்வெட்டித்துறை.*

தகவல்:
ந.அனந்தராஜ்
(உதவிக் கல்விப் பணிப்பாளர்- மாகாணக்கல்வித் திணைக்களம், திருகோணமலை.)

(C/25575)

## முத்தையா சுந்தரலிங்கம்

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் ஊரெழு கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா சுந்தரலிங்கம் 20.12.2002 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தம்பு முத்தையா - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் துரைராசா, சிவயோகேஸ்வரி, மகாதேவன், சிவமலர், ராஜலஷ்மி, ஆகியோரின் பாசமிகு சகோதரரும் இராஜரட்ணம், தர்மலிங்கம், ஞானசக்தி, அன்னலஷ்மி, மகாலிங்கம், பராசக்தி, துரைராஜா, பரமேஸ்வரன், காலஞ்சென்ற ராஜகோபாலன் மற்றும் கௌரி அம்பாள், ஜெகசோதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (21.12.2002) சனிக்கிழமை மாலை அவருடைய இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பொக்கணை மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஊரெழு கிழக்கு, ஊரெழு.* (C/25574) தகவல்: மனைவி

## திருமதி சுகிர்தம்மா அமிர்தலிங்கம் (கனடா)

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுகிர்தம்மா அமிர்தலிங்கம் அவர்கள் 20-12-2002 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் கனடாவில் வசிக்கும் ஆறுமுகம் அமிர்தலிங்கம் (ஓய்வு பெற்ற மதுவரித்திணைக்கள உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் கனடாவில் வசிப்பவர்களான கேதீஸ்வரன், கேதீஸ்வரி, கௌரி, ரவிச்சந்திரா ஆகியோரின் அன்புத் தாயாரும் அன்னலஷ்சுமி, சத்தியநாதன், குலேந்திரன், சிறீஸ்கந்தராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் சத்தியசீலனின் (ஓய்வு பெற்ற தபால் திணைக்கள உத்தியோகத்தர்) அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான ஆ.சிவபாதசுந்தரம் (எழுதுவினைஞர்), ஆ.தில்லைநாதன் (M.L.T.) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-12-2002) ஞாயிற்றுக்கிழமை ரொரன்ரோ கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராஜவீதி,*
*கல்வியங்காடு.*
*ரொரன்றோ மார்க்கம்,கனடா.*
*தொ.பே.இல.(905)4749435* (12109)

தகவல்:-
ச.சத்தியநாதன் (மருமகன்),
தி.ரவீந்திரநாதன் (பேறாமகன்)
(ஆசிரியர்)

## சின்னப்பு கந்தசாமி (பத்தர்)

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு கந்தசாமி நேற்று (21.12.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும் மீனா, சபேசன், பகீரதன், நந்தகுமார் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சிவபாதம் அவர்களின் அன்பு மாமனாரும் தர்சாந்தனின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2002) ஞாயிற்றுக்கிழமை 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக அச்சுவேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*அச்சுவேலி வடக்கு,*
*அச்சுவேலி.* (12108)

தகவல்:
க.பகீரதன் (மகன்)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர் **திரு. இ. மன்மதராசா**
அவர்களின் அன்புத் தந்தை

**நா.இராமலிங்கம்**

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர் கழகம்
யா/செங்குந்தா இந்துக்கல்லூரி

(12099)


வலம்புரி
பட்டாசுகள்

பண்டிகைக் காலங்களில்
உங்கள் இல்லங்களில்
உங்களை மகிழ்விக்கும்
தரமான பட்டாசுகள் என்றால்
அது வலம்புரி பட்டாசுகளே!

பட்டாசுகள், வாணவெடிகள்,
மத்தாப்புகள், சுழல் சக்கரங்கள்.

ஏக விநியோகஸ்தர்



**Saraswathi Stores**
12, Wolfendhal Street, Colombo 13. Tel : 343635, 432035
Fax : 471275 E-mail : saraswathy@sltnet.lk
(C/25203)

இளமை மற்றும் அழகின் ரகசியம்



பயோட்டின் - H
உங்கள் கூந்தல், சருமம் மற்றும் நகங்களின் ஊட்டத்திற்கு...
தினம் இரண்டே கேப்ஸ்யூல்கள்

Biotin - H ஆசிய நாட்டவரின் வாழ்க்கை சூழலுக்கேற்ப பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே Biotin - H தலைமுடி உதிர்தலை முற்றாக தடுப்பதுடன் அடர்த்தியான கூந்தலுக்கும் வழிவகுக்கின்றது.

பயோட்டின் - H
விஞ்ஞான சான்று பெற்றது.
பக்க விளைவுகள் இல்லை.

ஏக விநியோகஸ்தர் :
ஜெகன் பார்மஸி, யாழ்ப்பாணம். T.P.: 021 2194
சந்தைப்படுத்துவோர் : ARKEM கொழும்பு. (C/25209)

தென்னிந்தியாவில் இருந்து



முதல் முறையாக யாழ்ப்பாணம் என்னும்
புண்ணிய பூமிக்கு வருகை தந்துள்ள
பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற
சிவபால ஜோதிடர்

ராஜகுருசாமி அவர்கள்

★ கைரேகை ★ ஜாதகம் ★ எண்கணிதம்
★ பெயர்ராசி ★ திருமணப்பொருத்தம்

இவற்றில் பலவகுட அனுபவமும் புகழும் பெற்றவர்.

ராஜகுருசாமி
60/1 (112), TEMPLE ROAD [NEAR.ICRC],
JAFFNA.
T.P. 021-222-3804
(12039)

CHEMISTRY CENTRE

Physics
திரு. சிவலிங்கம்
C.Maths
திரு. பிரதீபன்
Chemistry
திரு. அன்பழகன் (அன்பு)
Biology
திரு. தற்பரன்

83, பலாலி வீதி
கந்தர்மடம்.

A/L 2005
ஆரம்பம்:-23-12-2002
திங்கள் 3 - 4 P.m.

(c/25528)

குறிப்பு:- எக்காரணம் கொண்டும் 150 மாணவர்களிற்கு மேல் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

நாளைய உதயனில்!
IIS இன் கல்வியாண்டு 2003/2004 இற்கான பயற்சி நெறிகள் தொடர்பான பூரண விளம்பரம்.
23.12.2002 நாளைய உதயனில் பார்க்கவும்.
இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.
(C/25561)

இரசாயனவியல்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
23.12.2002
கொழும்பு, கண்டி, வவுனியா.
பிரபல ஆசிரியர்
A.சிவகுமார்
(I.Chem.C)
2003-Apr.-Mon. 4-5 p.m.
2004-Apr.-Mon. 5-6-p.m.
அனைத்தும் மாதிரி வினாவிடை- வகுப்புக்கள்
BRIGHTMAN
Brown Road, Jaffna.
(11845)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.12.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.